வெளியீடு 26-3-2004 Issued 26-3-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, நவம்பர் 6, 2003 – தொகுதி 53 – எண் 2

Thursday the 6th November, 2003 – Volume 53 – No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

6-11-2003

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 131-164 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| (அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெடுஞ்சாலை ரோந்துக் குழுக்கள் வாகனங்களை நிறுத்தி கட்டணம் வசூலிப்பதாக எழுந்த கருத்து குறித்து | 164-171. 179-181 |
| திரு. சி. ஞானசேகரன் | 164-166 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 166-171 |
| (ஆ) விழுப்புரம் நகர்மன்றம் செயல்படாமை | 171-177. 179-181 |
| டாக்டர் க. பொன்முடி | 171-173 |
| மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 172 |
| *மாண்புமிகு செலவி ஜெ ஜெயலலிதா | 173-176. 180 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| பரம்பிக்குளம்—ஆழியாறு பாசனத் திட்டம். திருமூர்த்தி அணைக்குத் தண்ணீர் திறந்து விடுதல் | 177-179, 183-184 |
| **4. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகள் | 177.178.182 |
| **5. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 184 |
| (ஆ) அரசு உறுதிமொழிக் குழு | 185 |
| (இ) மனுக்கள் குழு | 185 |

பக்கங்கள்

**6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**

(அ) தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003. — 185-186

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன்

(ஆ) தமிழ்நாடு வரம்பிகந்த அளவில் வட்டி விதிக்கப்படுவதைத் தடை செய்தல் சட்டமுன்வடிவு, 2003. — 186-187

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்

(இ) தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர் தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003. — 187-188

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்

(ஈ) தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003. — 188-189

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்

(உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003. — 189-190

மாண்புமிகு திரு. செ. ம. வேலுசாமி

(ஊ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003. — 190

மாண்புமிகு திரு. எம். சி. சம்பத்

(எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003. — 191

மாண்புமிகு திரு. எம். சி. சம்பத்


185-085




பக்கங்கள்

**6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**— தொடர்ச்சி

(ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2003. — 249

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்

**7. அறிவிப்புகள்**—

(அ) தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர் தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003. (ஆ. இ) — 187

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ) — 189

(இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2003-2004, மொழிதல் (ஆ.செ.) — 191

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ) — 248

**8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**— 192-248

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 203-205, 207, 210, 212, 234, 238-246

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 193-194, 201-203, 205-212

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா — 194-199, 205-208, 220, 221, 225-227, 230-234, 236-238

திரு. எம்.ஏ. ஹக்கீம் — 213-225

திரு. ஜி. பழனிசாமி — 227-238

**9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 249-251

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**ஐப்பசி 20, சுபானு—திருவள்ளுவர் ஆண்டு 2034**

**2003 நவம்பர் 6, வியாழக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்*

*அருமை உடைய செயல்".*

*அரிய செயல்களை அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்து முடிக்கும் திறமையுடையவர்கள் பெருமைக்குரியவராவார்கள்.*

## 1. வினாக்கள்-விடைகள்

## உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 61, திரு. கு. அன்பழகன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.*

**61—**

### பயணிகள் விடுதி

***23316—திரு. கு. அன்பழகன்:**

*மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கொடைக்கானலில் தங்க முடியாத உல்லாசப் பயணிகள் தங்குவதற்கு வத்தலக்குண்டில் 'ஹோட்டல் தமிழ்நாடு' விடுதி கட்டப்படுமா?*

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*கொடைக்கானலில் தங்க முடியாத உல்லாசப் பயணிகள் வத்தலக்குண்டில் தங்குவதற்கு 'ஹோட்டல் தமிழ்நாடு' விடுதி கட்டும் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் இல்லை.*

[2003 நவம்பர் 6

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைய இந்தியாவின் விடிவெள்ளியாகத் திகழும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வாழ்த்தி, சர்வதேச உல்லாசத் தலமாக விளங்கக் கூடிய கொடைக்கானலில் தங்க முடியாத உல்லாசப் பயணிகள் வத்தலக்குண்டில் வந்து தங்குகிறார்கள். வளர்ந்துவரும் வத்தலக்குண்டில் பி.எஸ்.டி. ஹோட்டல், மதுரை முனியாண்டி விலாஸ், இரத்தினம் ஹோட்டல் உட்பட சுமார் 15 தனியார் தங்கும் விடுதிகள் இருக்கின்றன. இந்தத் தங்கும் விடுதிகள் அனைத்திலும் பயணிகள் தங்கிச் செல்கிறார்கள். இடம் இல்லாத காரணத்தால் வத்தலக்குண்டு பேருந்து நிலையத்திலே பிளாட் பாரத்திலே தங்குகிறார்கள். ஆகவே அதன் முக்கியத்துவம் கருதி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை இந்திய துணைக் கண்டத்திலேயே தலைசிறந்த மாநிலமாக உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில், 'இல்லை' என்ற சொல்லுக்கு 'இடமில்லை' என்ற வகையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் அடுத்த ஆண்டாவது நிதி நிலையைப் பொறுத்து வத்தலக்குண்டிலே 'ஹோட்டல் தமிழ்நாடு' கட்டுவதை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

* **மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்தலக்குண்டு கொடைக்கானலிலிருந்து 58 கி.மீ. தொலைவில் உள்ளது. கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அங்குள்ள தட்பவெப்ப நிலையை அனுபவிக்க வருகிறார்கள். எனவே அவர்கள் வத்தலக்குண்டு சென்று தங்கமாட்டார்கள். கொடைக்கானலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வரும் ஹோட்டலில் 73 அறைகள் உள்ளன. அங்குள்ள இளைஞர் விடுதியில் இரண்டு படுக்கைகள் கொண்ட 3 அறைகளும், மேலும் 20 படுக்கைகள் கொண்ட 7 இளைஞர் துயிலகக் கூடங்களும் உள்ளன. மற்றும் தனியார் ஹோட்டல்கள் பலவும் உள்ளன. மேற்கொண்டு வத்தலக்குண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 'ஹோட்டல் தமிழ்நாடு' விடுதி கட்டும் திட்டம் தற்போது ஏதும் இல்லை. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வத்தலக்குண்டில் தனியார் விடுதிகள் நட்சத்திரத் தகுதியிலும் மற்றும் சாதாரண விடுதிகளும் நிறைய இருந்தபோதிலும், வெளி மாநில மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அரசு விடுதிகளில் தங்குவது பாதுகாப்பாக இருக்கும் என்று கருதுவதால், வத்தலக்குண்டில் 'ஹோட்டல் தமிழ்நாடு' கட்டும் செயற்குறிப்பை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று, நிதிநிலைக்கேற்ப அரசு சிந்திக்கும்.



2003 நவம்பர் 6]

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 62, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**62—**

## நினைவுச் சின்னம்

***32886—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரம் அருகிலுள்ள பிதப்புரம் கிராமத்தில் மகாகவி பாரதியாரின் தந்தையாரால் தொடங்கப்பட்ட நூற்பாலை இருந்த இடத்தை அரசு கையகப்படுத்தி நினைவுச் சின்னமாகப் பராமரிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்த எளிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த தொண்டனுக்கும் தன்னுடைய அமைச்சரவையிலே செய்தி மற்றும் விளம்பரத் துறை தன்னுடைய அமைச்சராகப் பணியாற்றுகிற வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தமைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இந்த வினா எழ வாய்ப்பில்லை.

முற்பகல் 10-05

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களுடைய தந்தையார் சின்னசாமி ஐயர் அவர்களால் ஒரு Ginning factory ஆரம்பிக்க வேண்டுமென்ற நோக்கிலும், அந்தப் பகுதியிலே வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், பங்கு ஒன்றுக்கு ரூபாய் 100/- வீதம் வசூல்

செய்து, கிட்டத்தட்ட 198 பங்குகள் வசூல் செய்து, எட்டயபுரம் Bharathi Ginning Factory என்ற பெயரில், 1882 ஆம் ஆண்டு நூற்பாலை தொடங்கப்பட்டது. 1893 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதியன்று எட்டயபுரம் அருகிலுள்ள பிதப்புரம் கிராமத்திலே மகா சபை கூடி முடிவு செய்யப்பட்டது. 1894 ஆம் ஆண்டு அன்றைய பிரிட்டிஷ்காரர்களால் கடம்பூர், சாத்தூர் போன்ற பகுதிகளிலே ginning factories ஆரம்பிக்கப்பட்ட காரணத்தினால், அன்றைய சூழ்நிலையில் ginning factory -ஐத் தொடர்ந்து நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக, 1895 ஆம் ஆண்டு மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களுடைய தந்தை ஏற்படுத்திய அந்த ginning factory மூடப்பட்ட சூழ்நிலையில், வரலாற்றுச் சிறப்புமிக்க எட்டயபுரம் பகுதியிலே உள்ள அந்த நிலத்தை அரசு கையகப்படுத்தி, பெண்களுக்கான தொழிற்சாலை, வேளாண் துறை சம்பந்தமான தொழிற்சாலை நிறுவுவதற்கு பரிசீலனை செய்யுமா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாகவி பாரதியார் அவர்தம் நினைவாக சென்னை திருவல்லிக்கேணியில் அவர் வாழ்ந்த வீடு நினைவிடமாக்கப்பட்டுள்ளது. எட்டயபுரத்திலுள்ள தூத்துக்குடி சாலையில் பாரதி மணிமண்டபம் அமைக்கபபட்டுள்ளது. அதே எட்டயபுரத்திலே பாரதி சாலையிலே பாரதி இல்லம் அமைக்கப்பட்டுள்ளது. பாரதியார் கல்லூரி மற்றும் பாரதியார் பல்கலைக்கழகமும் அமைக்கப்பட்டுள்ளன. மகாகவி பாரதியாருக்கு சென்னை கடற்கரைச் சாலையிலே முழு உருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் அவரது பிறந்த நாளையொட்டி ஒவ்வொரு ஆண்டும் அரசின் சார்பில் அவர் பிறந்த நாளான டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இவற்றைத் தவிர, இப்பொழுதுள்ள அரசின் நிதிநிலை நெருக்கடியில் எட்டயபுரம் அருகிலுள்ள பிதப்புரம் கிராமத்திலுள்ள மகாகவி பாரதியாரின் தந்தையால் தொடங்கப்பட்ட நூற்பாலை இருந்த இடத்தை அரசு கையகப்படுத்தி, மேலும் தொழில் தொடங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63, திரு. இ.ஏ. லியாவுதீன் சேட், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.



**63—**

## தடுப்பணை கட்டுதல்

**•27639—திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சி தொகுதி, க. பரமத்தி யூனியனில் மயில்ரங்கத்திற்கு அருகில் மூலத்துறை எனும் இடத்தில் அமராவதி ஆற்றில் தடுப்பணை கட்டி அங்கிருந்து தாதம்பாளையம் ஏரி வரை தண்ணீர் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரவக்குறிச்சி தொகுதியிலுள்ள பரமத்தி ஒன்றியத்தில் மயில்ரங்கத்திற்கு அருகில், மூலத்துறை என்னுமிடத்தில் அமராவதி ஆற்றில் தடுப்பணை ஒன்று கட்டினால், அங்கிருந்து தண்ணீர் ஓடந்தூர் ஊராட்சி, கூடலூர் கிழக்கு, மேற்கு, சின்னதாராபுரம், சூடாமணி ஊராட்சி, எலவனூர், தும்பிவாடி, தஞ்சைக்காடைக்குறிச்சி, வடகரை முதலிய பல ஊர்களின் வழியில் பெரியதாதம்பாளையம் என்னும் ஊரிலுள்ள 40 ஏக்கர் ஏரியில் விழச்செய்யும். அந்நீர் வரும் வழியிலுள்ள பல ஊராட்சிகளின் ஆயிரக்கணக்கான விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். எனவே இதை மறுபரிசீலனை செய்து அடுத்த ஆண்டிலாவது இந்தத் தடுப்பணை கட்டும் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் நிறைவேற்றிட அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தொகுதி க.பரமத்தி யூனியன், மயில்ரங்கத்திற்கு அருகில் மூலத்துறை என்னும் இடத்தில் அமராவதி ஆற்றில் தடுப்பணை கட்டி, அங்கிருந்து தாதம்பாளையம் ஏரி வரை தண்ணீர் கொண்டு

செல்லும் திட்டம் இல்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள அமராவதி ஆற்றின் குறுக்கே மயில்ரங்கத்திற்கு அருகில் மூலத்துறை என்னும் இடத்தில் தடுப்பணை அமைத்து தாதம்பாளையம் ஏரி வரை கால்வாய் அமைத்து தண்ணீர் கொண்டு செல்ல மட்ட அளவுகள் அனுமதிக்கவில்லை. இதனால் அமராவதி ஆற்றில் நஞ்சைதலையூர் என்னும் இடத்தில் ஏற்கெனவே உள்ள அணையின் மேல் மட்டத்திலிருந்து 24.50 கிலோமீட்டர் தூரத்திற்கு கால்வாய் வெட்டி, தண்ணீரை சின்னமுத்தம்பாளையம் ஏரி வரை கொண்டு செல்வதற்கும், அங்கிருந்து இயற்கையாக அமைந்துள்ள ஓடையின் வழியாக தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு, இடையிலுள்ள ஆறு, குட்டைகள் மற்றும் ஏரிகளை நிரப்பி, இறுதியாக பெரிய தாதம்பாளையம் ஏரியில் நீர் நிரப்பி, 2,313 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளிக்க முதல்நிலை அறிக்கை மதிப்பீடு ரூபாய் 1,210 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-10

மேலும் இத்திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக, அமராவதி ஆற்றின் நஞ்சைகாலக்குறிச்சி என்னும் இடத்திலிருந்து 13 கிலோமீட்டர் தூரத்திற்கு கால்வாய் வெட்டி, தண்ணீரை நேரடியாக பெரியதாதம்பாளையம் ஏரிக்குக் கொண்டு சென்று, 828 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளிக்க முதல்நிலை அறிக்கை மதிப்பீடு ரூபாய் 420 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்விரு மதிப்பீடுகளும் தலைமைப் பொறியாளர் ( திட்டம், உருவாக்கம் ) அளவில் பரிசீலனையில் உள்ளது. உரிய பரிசீலனைக்குப் பின் சாத்தியக்கூறுகள் இருப்பின், வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப பணி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பகுதி மக்களுக்குப் பாசன வசதி கிடைக்கின்ற வகையில் மாற்றுத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு அரசு உடனடியாக ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு, நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மயில்ரங்கம் என்ற அந்தக் கிராமம் வெள்ளக்கோவில் தொகுதி, வெள்ளக்கோவில் ஒன்றியம், வேலப்பநாயக்கன்வலசு ஊராட்சியைச் சேர்ந்த அது. என்னுடைய தொகுதியிலே வருகிறது. அந்த இடத்திலே தடுப்பணை கட்டுவது



சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே விளக்கம் அளித்திருக்கிறார்கள். அந்த இடத்திலே பாசனத்திற்காக தடுப்பணை கட்டுவதற்கு இப்போது நிதியாதாரமோ, வாய்ப்புகளோ இல்லையென்றாலும், தண்ணீர் தேங்கி செல்லக்கூடிய அளவிலே ஒரு தடுப்பணையை அமைக்க வேண்டும். அதே நேரத்திலே அந்தப் பகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கை அந்த இடத்திலே ஒரு பாலம் அமைப்பதாகும். நம்முடைய அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சொன்னதுபோல, அந்தப் பகுதியையும், ஈரோட்டையும் குறிப்பாக, மதுரைக்குக்கூட அந்த வழி குறுகிய சாலை- குறுக்குச் சாலை வழியாக அமைத்தால், இதன் மூலம் எரிபொருள்கூட மிச்சமாகக்கூடிய அளவிலே அமைய வாய்ப்பு உள்ளது. எனவே அந்தத் தடுப்பணையை தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய அளவிலும், அதே நேரத்திலே அதில் ஒரு பாலம் அமைத்துத் தருவதற்கும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையின்படி அங்கு இருபயன்கள் தரும் வகையில் பாலம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பின் அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 64, திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**64—**

## வருவாய்க் கோட்டம்

***35098— திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு வருவாய்க் கோட்டம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், காஞ்சிபுரத்திலிருந்து மூன்றாவது கிலோ மீட்டரில் ஆரம்பிக்கிறது. காஞ்சிபுரத்திலிருந்து தூசி மாமண்டூர், வெம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை போவது என்று சொன்னால் 140 கிலோ மீட்டர் போக வேண்டும். ஆனால் பக்கத்திலே, தூசி மாமண்டூர் பக்கத்திலேயே மாவட்ட ஆட்சியர் அலுவலகம் காஞ்சிபுரத்தில் இருக்கிறது. ஆனால் திருவண்ணாமலை போவதற்கு 140 கிலோ மீட்டர் போய்தான் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்திக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால் நான் சொல்கிற அந்த ஐயங்கார்குளம், தூசி மாமண்டூர், வெம்பாக்கத்திலிருந்து ஆரணி 70 கிலோ மீட்டரில் இருக்கிறது. அங்கிருந்து திருவண்ணாமலை 70 கிலோ மீட்டரில் இருக்கிறது. ஆக, நடுவிலேதான் ஆரணி இருக்கிறது. இதைச் சுற்றி 40 கிலோ மீட்டருக்குள் வந்தவாசி, செய்யார், பொளணமல்லூர் போன்ற பகுதிகள் இருக்கின்றன. பல்வேறு பகுதிகள் நடுவிலே ஆரணி இருக்கிறது. மையப் பகுதியாக உள்ள ஆரணியை வருவாய்க் கோட்டமாக ஆக்க வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகள் நீண்டகாலமாக வைத்திருந்தும் அது நடக்கவில்லை. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்வி எழவில்லை என்று சொன்னார்கள். அடுத்த ஆண்டாவது மறுபரிசீலனை செய்து காஞ்சிபுரத்திலிருந்து 140 கிலோ மீட்டர் போவதைத் தவிர்க்கும் வகையில் 70 கிலோ மீட்டரில் நடுநிலையாக இருக்கிற ஆரணியிலே இது தொடங்கப்பட வேண்டும் என்று பல்வேறு வியாபாரப் பிரமுகர்கள், அரிமா சங்கம் மற்றும் லயன்ஸ் சங்கம் போன்றவர்கள் கேட்டிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையை மறுபரிசீலனை செய்து அடுத்த ஆண்டிலாவது அந்தத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிருவாகம் மற்றும் மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு பெரிய வட்டங்கள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் கோட்டத்தில் செய்யார், வந்தவாசி மற்றும் ஆரணி ஆகிய வட்டங்களும், திருவண்ணாமலைக் கோட்டத்தில் திருவண்ணாமலை,



போளூர் மற்றும் செங்கம் ஆகிய வட்டங்களும் அமைந்துள்ளன. புதிய வட்டங்கள் போன்ற நிருவாக அமைப்புகளை உருவாக்கும்போது அவற்றிற்கான பணியாளர் நியமனம், கட்டடம், வாகனம், தொலைபேசி, யாத் தளவாடங்கள், உள்கட்டமைப்பு உள்ளிட்ட ஏனைய வசதிகள் செய்து கொடுக்க அரசுக்குக் கூடுதல் செலவினம் ஏற்படுகிறது. ஒரு புதிய கோட்டம் உருவாக்கினால அரசுக்கு உத்தேசமாக ரூ.52.94 இலட்சம் செலவினம் ஏறபடும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. எனவே அரசின் தற்போதைய நிதி நிலையைக் கருத்தில் கொண்டும், சட்டமன்ற, நாடாளுமன்ற தொகுதிகளின் எல்லை வரையறைப் பணி நடைபெறுவதால் நிருவாக அலகுகளைப் பிரிக்கவோ, மாற்றம் செய்யவோ கூடாது என்று தடை விதித்து பொது ( தேர்தல் ) துறை ஆணையிட்டுள்ளதாலும், புதிய கோட்டங்கள் போன்ற நிருவாக அமைப்புகளை உருவாக்க இயலாது. எனவே மேற்கண்ட சூழ்நிலையில் திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியை தலைமையிடமாகக் கொண்டு வருவாய்க் கோட்டம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு இருக்கின்ற கிராமங்களையும், ஆரணி வட்டம் உருவாக்கும்போது மக்களுக்கு ஏற்படுகின்ற சௌகரியங்களையும் எடுத்துச் சொன்னார்கள். அரசின் தடை நீக்கப்படும்போது உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-15

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிருவாகத்தின் நிலைமையை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் எடுத்துரைத்தார்கள். ஆனாலும், நான் சொன்ன கோரிக்கை, இங்கே 5 கிலோமீட்டரில் கலெக்டர் ஆபீஸ் இருக்கிறது. ஆனால் நாங்கள் 140 கிலோமீட்டர்வரை போய் கலெக்டரைப் பார்க்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதற்காகச் சொன்னேன். இடம் தேவை என்று சொன்னார்கள். இடம் தயாராக இருக்கிறது. அடுத்த ஆண்டாவது பரிசீலனை செய்து கட்டுவதற்கு அனுமதி தர வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து தங்கள் மூலமாக மீண்டும் அமைச்சரை வலியுறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ. வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்திலே செங்கம் தாலுகா என்பது ஒரு பெரிய

தாலுகா. அந்தத் தாலுகாவை இரண்டாகப் பிரித்து - அதைப்போல் புதிய கேள்விதான், திருவண்ணாமலை மாவட்டத்திலே revenue department கேள்விதான் இது - செங்கம் தாலுகா....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. ஆரணி பற்றித்தான் அமைச்சர் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

வினா எண் 65. திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

**65—**

## லாட்டரிச் சீட்டுகள்

***30101—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளி மாநில லாட்டரிச் சீட்டுகளின் விற்பனையால் தமிழக அரசுக்கு ஏற்படும் இழப்பு எவ்வளவு?

(ஆ) அந்த லாட்டரிகளைத் தடை செய்வதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) வெளி மாநில லாட்டரிச் சீட்டுகளின் விற்பனையால் அரசுக்கு நேரடி இழப்பு ஏதும் இல்லை. எனினும் தமிழ்நாடு மாநில மக்கள் வெளி மாநில லாட்டரிகளை வாங்கி பல ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இழக்கும் நிலை இருந்து வந்தது.

(ஆ) அரசாணை எண் 20, உள் (நி.ம. 2) துறை, நாள் 8-1-2003-ன்படி தமிழகத்தில் விற்பனையாகும் வெளி மாநில பரிசுச் சீட்டுகள் மற்றும் தமிழக அரசால் நடத்தப்படும் பரிசுச் சீட்டுகள் உட்பட அனைத்துப் பரிசுச் சீட்டுகளின் விற்பனைக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடை விதிக்கப்பட்டிருந்தாலும்கூட இன்றும் பல இடங்களில்



சுரண்டல் லாட்டரி, ஓர் இலக்க லாட்டரி போன்ற லாட்டரிகள் விற்கப்படுகின்றன. அவற்றை முழுமையாகக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாட்டரிக்குத் தடை விதித்ததே, ஏழை மக்களைச் சுரண்டுகிற ஒரு முறையில், தமிழ்நாடு அரசு லாட்டரியைப் போலவோ அல்லது வெளி மாநில லாட்டரியைப் போலவோ, போலி லாட்டரிச் சீட்டுகள் ஏராளமாகத் தமிழ்நாட்டில் விற்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. அதைத் தடுக்காததால் கிட்டத்தட்ட 3 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு லாட்டரிச் சீட்டுகள் தமிழகத்திலே விற்பனை ஆகிக்கொண்டு வந்தன. அதிலே தமிழக அரசினுடைய லாட்டரி வெறுமனே 132 கோடி ரூபாய்தான் விற்பனையானது. அரசுக்கு வெறுமனே 56 கோடி ரூபாய்தான் வருமானமாக வந்து கொண்டிருந்தது. இந்த நிலையில்தான், ஏழை எளிய மக்களை இந்த லாட்டரியிலிருந்து பாதுகாக்க இந்தத் தடை விதிக்கப்பட்டது. சுரண்டல் லாட்டரி என்பது திருட்டுத்தனமாக சில இடங்களில் செய்து வருவதாக, ஆங்காங்கே இருப்பதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. கடுமையான நடவடிக்கை எடுக்க காவல் துறைக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. எங்கெங்கே இப்படி இருக்கிறது என்று தகவல் வந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அவைக்குத் தருகிறபோது கட்டாயமாகக் காவல் துறை மூலம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் லாட்டரிச் சீட்டுகளை ஒழித்து ஏழை எளிய மக்களைக் காப்பாற்றியது போல, வணிகர்கள் தங்களது வியாபாரத்திற்காகக் கவர்ச்சிகரமான பரிசுத் திட்டங்களை அறிவித்து வருகின்றார்கள். இதனால் மக்கள் பொருட்களைக் கொள்முதல் செய்கிறபோது தரமற்ற பொருட்களைக் கொள்முதல் செய்கிற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே வியாபாரிகள் கவர்ச்சிகரமான பரிசுத் திட்டங்கள் நடத்தி வருவதைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுத் திட்டம் என்ற முறையில் தொழில் முனைவோர், தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள், எந்த ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தாலும் அதற்கும் அரசினுடைய அனுமதி வாங்க வேண்டும்.

அப்படி அரசினுடைய அனுமதி வாங்காமல் இப்படிப் பரிசுத் திட்டங்களை அறிவித்து மக்களுக்குப் பாதிப்பை உருவாக்குகின்ற தொழில் அமைப்புகள்மீது கட்டாயம் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வருவாய் இழப்பைப்பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே லாட்டரிச் சீட்டு நடத்தியவர்கள் சிலபேர் கோடிக்கணக்கான ரூபாயை வரி பாக்கி வைத்திருந்தாலும்கூட, அவர்களுக்கு விலாசமே இல்லையென்று தபால் திரும்பி வருகிறது என்று துறை அப்படியே நிதியை வசூலிக்காமல் இருந்துகொண்டிருக்கிறது. அதைப்பற்றி அமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்? அடுத்து, இந்தத் தீபாவளி நேரத்திலே பட்டாசுகளை சிவகாசியிலிருந்து வாங்கித் தருவோமென்று சீட்டுப் பிடித்து சிலபேர் பட்டாசே கொடுக்காமல் இந்த முறை நிறைய பேரை ஏமாற்றிவிட்டிருக்கிறார்கள். இதுபோல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாட்டரிச் சீட்டு தடை செய்யப்பட்டிருக்கிறது என்று நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இருந்தாலும், லாட்டரிச் சீட்டு பல இடங்களில் திருட்டுத்தனமாக விற்கப்படுகிறது என்பதையும் ஒப்புக்கொண்டார்கள். அதைக் கருத்தில்கொண்டு காவல் துறை மூலம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் அறிவித்தார்கள். அப்படியானால், தடை விதித்த பின்னால் இதுவரையில் தமிழகத்தில் எத்தனைக் குற்றவாளிகளை காவல் துறை கைது செய்திருக்கிறது? கைது செய்தவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது? அப்படிக் கைது செய்து தவறாகப் பணம் சேர்த்தவர்களிடமிருந்து பணம் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடை செய்யப்பட்ட பிறகு சட்டரீதியாக விற்கக்கூடிய பிற மாநில லாட்டரி டிக்கெட்டுகள் விற்கப்படுவது முழுவதுமாகத் தடுக்கப்பட்டு விட்டது. சுரண்டல் லாட்டரி என்பது, என்ன என்பதே மக்களுக்குத் தெரியாத அளவுக்கு மக்களை ஏமாற்றுகிற ஆங்காங்கு இருக்கிற கிரிமினல்ஸ், சமுதாயக் குற்றவாளிகள் மேற்கொண்டு இருக்கிற ஏமாற்று வேலை, இதில் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தமிழகத்திலே லாட்டரியே ban ஆகி விட்டது என்ற முறையில் சுரண்டல் லாட்டரியில் எப்படி அவர்களுக்குப் பரிசு கிடைக்கும்? ஏமாற்றுக்காரர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். மக்கள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவ்வப்போது தகவல் எங்கிருந்து வந்தாலும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. உதாரணமாக சேலத்தில் சில பகுதிகளிலும், கோவையில் சில பகுதிகளிலும் சுரண்டல் லாட்டரி விற்கப்படுவதாகத் தகவல் வந்தது. காவல் துறை உடனடியாக அவர்களைக் கைது செய்து கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும், அரசுக்கு ரூபாய் 350 கோடி அளவிலே வருமானம் இருந்தபோதிலும், ஏழையெளிய மக்களின்பால் அன்புகொண்டு இந்த லாட்டரிச் சீட்டை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒழித்ததற்குப் பிறகும், லாட்டரிச் சீட்டு தடை செய்யப்பட்டதற்கு முன்பு வெளிவந்து கொண்டிருந்த ஒருசில லாட்டரிச் சீட்டுக்கு உண்டான குலுக்கல் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, வெளிவந்துகொண்டிருந்த ஒருசில பத்திரிகைகள்—இன்னும் தொடர்ந்து, காலை மாலை என்று இரு வேளைகளிலும், லாட்டரிச் சீட்டுப் பரிசுக் குலுக்கலின் முடிவுகள் பத்திரிகைகளில் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இதிலே லாட்டரிச் சீட்டின் குலுக்கல் முடிவுகளை விளம்பரமாகக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற, அந்த லாட்டரிச் சீட்டுக் குலுக்கல்களை விளம்பரப்படுத்தி நடத்திக் கொண்டு இருப்போர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவேளை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது பிற மாநிலங்களில் விற்பனையாகும் வெளி மாநில லாட்டரிச் சீட்டுகளினுடைய முடிவுகள் குறித்து அந்த பத்திரிகைகளில் வெளிவருமோ என்று தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதை அரசு ஆய்ந்து அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள்.

[2003 நவம்பர் 6

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாட்டரிச் சீட்டுகளை ஒழித்து ஏழையெளிய மக்கள் வயிற்றில் பால் வார்த்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெளி மாநில லாட்டரிச் சீட்டுகளைத் தடை செய்ததன் மூலம் லாட்டரிச் சீட்டு விற்பனை செய்யும் கூலித் தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றோர்கள், கண் தெரியாதவர்கள், வேலைவாய்ப்பை இழந்து இன்று குடும்பம் நடத்த முடியாத சூழ்நிலையில் லாட்டரி விற்பனை செய்யும் தொழிலாளர்கள் சுயமாகத் தொழில் தொடங்கிட அவர்களுக்குக் கடன் வசதி மற்றும் நிதியுதவி செய்யும் திட்டம் ஏதாகிலும் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Self-employment Scheme— சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் அப்படிப் பாதிக்கப்பட்ட லாட்டரிச் சீட்டு விற்கும் தொழிலாளர்கள் முன்வருகிறபோது அவர்களுக்கு உதவுவோம் என்று அரசு தெரிவித்திருக்கிறது. அந்த அடிப்படையில் சிலர் உதவியையும் பெற்றிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநில லாட்டரிச் சீட்டு தடை செய்யப்பட்டிருந்தாலும், பல மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்பட்டு தங்கு தடையின்றி இங்கு லாட்டரிச் சீட்டுகல் விற்கப்படுகின்றன. அதே அளவில் அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் இழப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகளில், வெளி மாநிலங்களிலிருந்து வந்து திருட்டுத்தனமாக லாட்டரிச் சீட்டுகள் விற்கப்படுகின்றன என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்கு தருவார்களேயானால், கட்டாயமாக அவர்கள்மீது கடுமையான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.



2003 நவம்பர் 6]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களைச் சுரண்டிக்கொண்டிருந்த இந்த லாட்டரி முறையை ஒழித்தது உள்ளபடியே வரவேற்கக்கூடிய ஒன்று. அதேநேரத்திலே இந்த லாட்டரிச் சீட்டு விற்பனையாளர்கள், மீண்டும் தமிழக அரசாங்கம் எப்படியாவது லாட்டரிச் சீட்டுகளைக் கொணடு வந்துவிடும்; அதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அது எந்தக் காலத்திலும் வராது என்ற உத்தரவாதத்தை அரசு கொடுகக முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசு சொல்வதைத்தான் நம்ப வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாட்டரிச் சீட்டு விற்பனையில் ஈடுபட்ட தொழிலாளர்கள் இப்போது மறுவாழ்விற்காக அரசின் கடனுதவியை எதிர்பார்த்தால் self-employment மூலமாக உதவி செய்கிறோம் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இப்போது மதுரையிலே கிழக்குப் பகுதி— பொதுவாக தமிழ்நாடு முழுவதும் கைத்தறித் தொழில் நொடிந்து, விசைத்தறித் தொழில் நொடிந்து அவர்கள் எல்லாம் வாழ்க்கையை நடத்த இந்தப் பணியைச் செய்தார்கள். அரசிடம் அதிகாரபூர்வமாக உதவி பெற வரையறைகள்— என்னென்ன வழிமுறைகள் உள்ளன என்பதையும் தெரிவித்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப் பாதிக்கப்பட்ட தொழிலாளிகள் சுய தொழில் செய்ய முன்வருகின்றபோது 1 இலட்சம் ரூபாய்க்கு உட்பட்ட முதலீட்டில் இலாபகரமான தொழில் எது என்று கண்டறிந்து அந்தத் தொழிலைத் தொடங்க முன்வருகிறபோது collateral security அசையாச் சொத்துடைய, சொத்து ஜாமீன் இல்லாமல், நபர் ஜாமீன் மூலமாகவே அவர்களுக்கு 1 இலட்சம் ரூபாய் வரை அத்தகைய உதவிகளை வங்கிகள் மூலம் தரலாம். 25, 000 ரூபாய் வரைக்கும் நபர் ஜாமீன்கூட இல்லாமல் அவர்களுக்கு அந்த உதவியைத் தரலாம் என்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் லாட்டரிச் சீட்டுக்குத் தடை விதித்திருப்பதையும், அதை மீறி விற்பவர்கள் காவல் துறையினரால் கைது செய்யப்படுகிறார்கள் என்றும் இங்கே அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

சென்னை நகரில் பல இடங்களில் ** நடத்தப்பட்டு வருகிறது இந்த அரசு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலிவான, தகுதியற்ற பொருட்களுக்கு எல்லாம் மிக அதிகமான விளம்பரங்களைத் தந்து, அந்தப் பொருட்களை விற்கக்கூடிய மிகப் பெரிய மோசடி தமிழகத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தொலைக்காட்சிகளிலேயும், மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான ரேடியோ நிலையங்களிலேயும் அந்த விளம்பரங்கள் வருவதற்கு முன்னதாக, அரசாங்கம் அந்த விளம்பரங்கள் உண்மையான விளம்பரங்களா என்று கண்டறிந்து, இப்படிப்பட்ட விளம்பரங்களைத்தான் போட வேண்டும் என்று ஏதேனும் வரையறையை இந்த அரசு கொண்டுவருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தகைய பரிசுத் திட்டம் ஒட்டிய விளம்பரமாக இருந்தாலும், பரிசுத் திட்ட அறிவிப்புக்குக் கட்டாயமாக அரசினுடைய அனுமதியை வாங்க வேண்டும். அப்படி அனுமதி வாங்காமல் யார் அந்தச் செயலில் ஈடுபட்டாலும் அவர்கள்மீது கட்டாயம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். துறைக்குத் தக்க அறிவுறுத்தலைக் கூறி, இதுகுறித்துக் கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசு அறிவுறுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 66. செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



66—

## துணை மின் நிலையம்

**•31032—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பார—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, எம்.ஜி.ஆர். நகரில் துணை மின் நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) பேரணாம்பட்டு தொகுதி, எம்.ஜி.ஆர். நகர், ஏற்கெனவே இயங்கிவரும் பேரணாம்பட்டு துணை மின் நிலையத்திலிருந்து மிகவும் அருகில் (2 கி.மீ.) இருப்பதால் அந்த நகரில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் எதுவுமில்லை.

**செல்வி சி. கனகதாரா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இருளகன்ற தமிழகத்தின் ஈடு இணையற்ற தலைவி, பாரத நாட்டின் பூ முற்றத்தின் ஒரு பொன்நிலவு' மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றும் எங்கள் அன்னையின் இலட்சியத்தில் மாவட்டம்தோறும் நலத் திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்திக்கொண்டிருக்கும் தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எங்கள் வேலூர் மாவட்டத்திற்கு வருகை தந்து, 2002-2003-ல் ரூ.43 கோடி ஒதுக்கியதற்கு எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினை இம்மாமன்றத்தில் தங்கள் வாயிலாக அன்னையின் பாதமலர்களில் சமர்ப்பித்துக்கொள்கின்றேன்.

[2003 நவம்பர் 6

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10-40)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, [illegible] நகராட்சியில் மின் பயனீட்டாளர்கள், [illegible] அதிக அளவு வசிக்கின்றார்கள். இங்கே துணை மின் நிலையம் எதுவும் இதுவரை அமைக்கப்படவில்லை. இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் [illegible] அடிக்கடி power cut ஏற்படுகின்றது. இதனால் விவசாயிகளும் பொதுமக்களும் அதிகமாகப் பாதிக்கப்படும் சூழ்நிலை இருந்துகொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, [illegible] கொடுப்பவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், [illegible] கொடுப்பவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஏழை எளிய மக்களின் நலன் காக்கும் எங்கள் அம்மாவின் அரசு, துணை மின் நிலையம் அமைக்க மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, uninterrupted quality power supply தடை இல்லா தரமான மின் வசதியைப் பெற வேண்டும் என்கின்ற ஓர் உயர்ந்த எண்ணத்தோடுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவின் பேரில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். மின் தடை என்பது பறவைகள் அந்தக் கண்டக்டரில் உட்கார்ந்து ஒன்றோடொன்று பேசிக்கொண்டு இருக்கும்போது short circuit ஏற்படக்கூடிய அளவிற்கு வாய்ப்புகள் உண்டு. எனவே அதன் மூலமும் மின் தடை ஏற்படலாம். புதைவடம் [illegible] அந்தச் சாலைப் பணிகளைச் செய்யும்போது துண்டிக்கப்படும்போதுகூட மின் தடை ஏற்படலாம். இந்தியாவிலேயே Grid-disciplined State என்று சொன்னால் நம்முடைய தமிழ்நாட்டைத்தான் சொல்ல வேண்டும். எனவே 49.8 Hertz. Grid - discipline தமிழ் நாட்டில் maintain செய்யப்படுவதன் காரணமாக மின் விநியோகம் தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு முழுமையான அளவிற்குச் சீரமைப்பு செய்யப்பட்டு ஒரு மின் தடை இல்லா மின் வசதியைப் பெற்றிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலேகூட இந்தக் கேள்வியை எழுப்பிய பிறகு— கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு 100 கே.வி.ஏ. மின் விநியோக transformer ஒன்று நிறுவப்பட்டு, அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட கலந்துகொண்டிருக்கிறார்கள். எனவே





மாண்புமிகு உறுப்பினருடைய அந்த ஆர்வத்தை நான் பாராட்டுகின்றேன். ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு ஹாஸ்டல்—எங்கெங்கே தேவையோ, அதைக் கட்டுகின்ற அளவிற்கு ஒரு சூழ்நிலை இருக்கின்றபட்சத்தில் போடலாம். ஆனால், sub-station போடும்போது, அங்கே உண்மையாக அந்த இடத்திலே தேவை இருக்க வேண்டும். அப்படி அந்த இடத்திலே தேவை இருந்தால் அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிலத்தைக் கொடுத்தால், நிச்சயமாக அந்த இடத்திலே போடுவதற்கு மின்சார வாரியம் தயாராக இருக்கிறது என்கிற ஒரு தகவலைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின் விநியோகத்தைச் சீரமைப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும்— இந்த ஆண்டு கிட்டத்தட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 60 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர்களைக்கூட நான் வேண்டிக் கேட்டுக்கொள்வது, தங்களுடைய தொகுதியில் இதுபோன்ற துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்றால் இடத்தை நீங்கள் தேர்வு செய்து கொடுத்து, மின் வாரியத்திற்கு 5 ஏக்கர் நிலம் தேர்வு செய்து கொடுத்து, மின் வாரியத்திற்கு அல்லது எங்களுக்குத் தெரிவித்தால்கூட அந்த இடங்களிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிச்சயமாக நாங்கள் தயாராக இருக்கிறோம். Transmission and distribution asset என்று பார்த்தாலும்கூட மின் வாரியத்திற்கு 1,500 கோடி ரூபாய் asset இருக்கிறது என்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1000-ஆவது துணை மின் நிலையத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் நாட்டுக்கு விரைவிலே அர்ப்பணிக்க இருக்கின்றார்கள் என்ற ஒரு தகவலையும் நான் (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த ஆண்டு distribution-க்கு மட்டும் 353.29 கோடி ரூபாய், transmission-க்கு 268.65 கோடி ரூபாய்; ஆக 21.94 கோடி ரூபாய் ஒதுக்கி மின் விநியோகம் சீரமைக்கப்பட வேண்டும், தங்குதடையின்றி மின்சாரத்தைப் பெற வேண்டும் என்கின்ற வகையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையிலே இந்த ஆண்டு புதிய துணை மின் நிலையங்கள், மின் மாற்றிகள், distribution transformer, புதிய லைன்கள் எல்லாம் போடப்படவிருக்கின்றன. பழைய கண்டக்டர்கள் எல்லாம் மாற்றப்பட இருக்கின்றன, புதிய கெப்பாசிட்டர்கள் போடப்பட இருக்கின்றன என்கிற மகிழ்ச்சியான தகவலைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2003 நவம்பர் 6

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொகுதியில் எம்.ஜி.ஆர். நகரில் 5 ஏக்கருக்கு மேலான நிலம் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் எங்களுக்குத் துணை மின் நிலையம் அமைத்துத்தர உறுதியளித்துள்ளார்கள். ஆகவே அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாகூர் தொகுதியில் தேனூர், துங்கபுரம் என்ற இடத்தில் மாண்புமிகு அமைச்சர் சொன்னதுபோல 5 ஏக்கர் நிலத்தைச் சீர்படுத்தி, அந்த இடத்தையும் நான் போய்ப் பார்த்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த 60 துணை மின் நிலையங்களில் தேனூர், துங்கபுரமும சேர்க்கப்பட்டிருக்கிறதா, அது எந்த அளவிலே இருக்கிறது என்பதை உங்கள் வாயிலாக அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பிய வினாவிற்குப் பதில் சொல்ல வேண்டுமென்றால், இந்த ஆண்டு அந்த இடம் உடைமை உரிமை மாற்றம் மின் வாரியத்திற்கு செய்யப்பட்டிருந்தால், நிச்சயமாக இந்த ஆண்டே போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இல்லையென்றால் 2003-2004 ஆம் நிதி ஆண்டில் நிச்சயமாக 5 ஏக்கர் நிலம் கொடுக்கின்றபட்சத்தில் அந்த இடத்திலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராதாரவி.

**திரு. ராதாரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டிற்கு மட்டும் ஏறத்தாழ 11 கோடி ரூபாய் செலவில் மின்சார வாரியம் பல நல்ல திட்டங்களை என்னுடைய தொகுதியான சைதைக்குச் செய்திருப்பதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு



2003 நவம்பர் 6]

என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 60 துணை மின் நிலையங்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதில் எத்தனை சென்னை நகரில் என்பதையும்,— என்னுடைய தொகுதியான சைதை தொகுதிக்கு துணை மின் நிலையம் தேவைப்படுகிறது;— அது அதில் சேர்த்துக் கொள்ளப்படுமா என்பதையும் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்றால், இடம் மிக மிக அவசியத் தேவையாய் இருக்கின்ற நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இடத்தைக் கொடுத்தால், நிச்சயமாக தேவை கருதி துணை மின் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளிக்கின்றபோது துணை மின் நிலையங்கள் அமைவதற்கு இடத்தினை தேர்வு செய்வதற்கு உறுப்பினர்கள் உதவ வேண்டுமென்று சொன்னார்கள். என்னுடைய தொகுதி, திருப்புரமயம் ஊராட்சியில் 2000ஆவது ஆண்டு 5 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு மின் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டும் இதுவரை அந்த 110 கிலோவாட் மின் நிலையம் தொடங்கப்படவில்லை. இந்த ஆண்டிலாவது அதற்கான பணிகள் தொடங்கப்படுமா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய பதிலிலே சொல்லி இருக்கின்றேன். நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு 60 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. கிட்டத்தட்ட ஒரே ஆண்டிலே 200 துணை மின் நிலையங்கள் அமைப்பது என்பது முடியாத காரியம். எனவே இந்த ஆண்டில் அதை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கையை நாங்கள் நிச்சயமாக எடுப்போம். இல்லையென்றால் 2003-2004 ஆம் ஆண்டில் நில உடைமை உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கின்ற பட்சத்தில் அந்த இடத்திலே அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். தேவை இருக்கின்ற சூழ்நிலையில் நிச்சயமாக செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. அண்ணாதுரை.

185-085

**திரு. செ. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்கிற வாக்கிற்கு இணங்க கேட்காமலே கொடுக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே ஜெயங்கொண்டம் தொகுதியில், பலூர் ஒன்றியத்தில் நடுவலூர் என்கிற கிராமத்திலே துணை மின் நிலையம் அமைப்பதற்காக இடங்கள் கையகப்படுத்தப்பட்டு மின் வாரியத்திற்கென இட மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுடைய துயரத்தைத் துடைக்கின்ற வகையில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியில் இந்த ஆண்டே அந்த இடத்தில் துணை மின் நிலையம் அமைத்துத் தர அமைச்சர் முன்வருவாரா என்பதனை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய பதிலில் சொன்னது போல நில உடைமை உரிமை மாற்றம் மின் வாரியத்திற்கு செய்யப்பட்டிருந்தால், இந்த ஆண்டு அதிலே ஒரு top priority கொடுத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இல்லையென்றால் நிதியைக் கருத்தில் கொண்டு 2003-2004-ஆம் ஆண்டு நிறைவேற்றப்படும்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோல துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு, மருத்துவமனைகள் அமைப்பதற்கு, அரசே புறம்போக்கு நிலங்களை, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே கையகப்படுத்தி, அரசு சார்ந்த நிறுவனங்கள் அமைக்கின்ற ஒரு நிலை— துணை மின் நிலையங்கள், மருத்துவமனைகள் போன்றவற்றை அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களே அனுமதி வழங்குகின்ற நிலை ஒரு காலத்திலே சட்டமாக்கப்பட்டிருந்தது. இப்போது அந்த நிலை தொடர்ந்து நீடிக்கிறதா? அரசுக்கு வருகின்ற நேரத்திலே காலதாமதங்கள் ஏற்படுகின்றன என்கின்ற காரணத்திற்காகத்தான் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே, அரசு சார்ந்த பணிகளுக்கு அந்த இடத்தை எடுக்கலாம் என்கின்ற முறை இருந்தது. அந்த முறை எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இன்னும் அந்த அதிகாரம் இருக்கின்றது. அதிலே மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் துணை மின்



நிலையம் எந்த இடத்திலே, ஒரு uninterrupted quality power supply—ஒரு தடையில்லாத தரமான மின் வசதியைப் பெற வேண்டும் என்கின்ற ஒரு நிலையில் strengthen செய்ய வேண்டும்; improve செய்ய வேண்டும் என்கின்ற ஒரு நோக்கத்தோடுதான் அந்த இடத்திலே அமைக்கப்படுகின்றது. எனவே எந்த இடத்திலே அந்தப் பிரச்சினை இருக்கிறதோ அந்த இடத்திலே அமைக்க வேண்டுமென்றால் அந்த இடத்திலே நிலம் வேண்டும். நிலம் சில நேரத்திலே தனியாருக்குச் சொந்தமானதாக இருக்கும். அரசாங்கத்திற்கு சொந்தமானதாகவும் இருக்கும். அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கின்ற பட்சத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அதை acquire செய்யலாம். தனியாருக்குச் சொந்தமான நிலமாக இருக்கும் பட்சத்திலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கொஞ்சம் extension work செய்து மின் வாரியத்திற்கு உதவி செய்தால் அதுவும் உதவிகரமாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லிக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, திரு. எஸ்.ஏ.எம். உசேன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**67—**

## திருமண மண்டபம்

**•19044—திரு. எஸ்.ஏ.எம். உசேன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவல்லிக்கேணி தொகுதியிலுள்ள பார்த்தசாரதி திருக்கோயில் சார்பில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) ஆம்.

(ஆ) சென்னை, திருவல்லிக்கேணி தொகுதியிலுள்ள அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான, திருவல்லிக்கேணி

பெரிய தெரு, கதவு எண் 103-ல் உள்ள 5,512 சதுர அடி நிலத்தில் திருமண மண்டபம் கட்டுவது குறித்து அறநிலையத் துறையின் பரிசீலனையில் உள்ளது என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான திருவல்லிக்கேணி தொகுதியில் அருள்மிகு பார்த்தசாரதி ஸ்வாமி திருக்கோயிலுக்கு உட்பட்ட நிலத்தில் திருமண மண்டபம் கட்ட வேண்டுமென்று என்னுடைய தொகுதி மக்கள் நீண்ட காலமாக கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். செயற்குறிப்பில் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அது இந்த நிதி ஆண்டில் கட்டப்படுமா? எந்தத் திட்ட மதிப்பீட்டில் அது கட்டப்படும் என்ற விவரத்தையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி ஸ்வாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலமான, திருவல்லிக்கேணி, பெரிய தெரு, கதவு எண் 103-ல், 5,512 சதுர அடி நிலத்தில் கடந்த பல ஆண்டுகளாக ஒரு தபால் நிலையம் இயங்கி வந்தது. அந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்ததால் தபால் நிலையம் 30-9-2002 அன்று காலி செய்யப்பட்டது. மேற்படி இடத்தில் 300 சதுர அடியில் மின்சார டிரான்ஸ்ஃபார்மர் ஒன்றும் உள்ளது. இதனை வேறு இடத்திற்கு மாற்றியமைத்து அங்கு திருமண மண்டபம் கட்ட பரிசீலிக்கப்பட்டு வருகிறது. சுமார் 10 இலட்சம் ரூபாய் செலவில் உபயதாரரைக் கொண்டு திருமண மண்டபம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களிடத்திலே நான் கேட்டது, இந்த ஆண்டில் அது நிறைவேற்றப்படுமா என்றுதான் கேட்டேன். அதற்கு நிதி தேவை என்றால் என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தரத் தயாராக இருக்கின்றேன், என் தொகுதி மக்களுடைய நலன் கருதி. எனவே உடனடியாக அதற்கான அனுமதியை வழங்கி மாநகராட்சியிடம் அந்த இடத்தை ஒப்படைத்தால், மாநகராட்சிக்கு நிதி ஒதுக்கித்தர நான் தயாராக இருக்கின்றேன். மிக விரைவிலே, அவர்களுக்கு அது பயன் அளிக்கக்கூடிய வகையில், நீண்டகாலக் கோரிக்கையான எனது தொகுதி மக்களுடைய இந்தக் கோரிக்கையை நிறைவேற்றக்கூடிய வகையில் அதற்கு உதவி புரிய வேண்டுமென்றும், அதற்கான நிதி எவ்வளவு என்றாலும் அதை நான்



தரத் தயாராக இருக்கிறேன் என்பதையும் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து கட்டுவதற்கு, விதியில் இடம் இருந்தால், அந்த நிதியைக் கொடுப்பதற்கு முன் வருவார்களேயானால், இந்த ஆண்டே கட்டுவதற்கு அறநிலையத் துறையால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு திரு. பார்த்தசாரதி திருக்கோயிலுக்குச் சொந்தமான 10-ககும் மேற்பட்ட ஏக்கர்களைக் கொண்ட நிலங்கள் அண்டை மாநிலமான ஆந்திரா போன்ற மாநிலங்களில் இருப்பதாகவும், அதில் மிகக் குறைந்த அளவுக்கே அந்த நிலங்களுக்குண்டான குத்தகைப் பணம் வசூலிக்கப்படுவதாகவும், பல ஆண்டுகாலமாக அதற்கான குத்தகைப் பணம் செலுத்த வேண்டியவர்கள் செலுத்தாமல் இருப்பதாகவும் ஒரு நிலை இருக்கிறது. ஆகவே இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கையை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலுக்குச் சொந்தமாக ஆந்திரா மாநிலத்தில் 3.8 ஏக்கர் நஞ்சை நிலமும் 5.56 ஏக்கர் புஞ்சை நிலமும் உள்ளது. நஞ்சை நிலத்தில் நெல் பயிரிடப்பட்டு அதன்மூலம வருடக் குத்தகை 2,500 ரூபாய் மட்டுமே பெறப்படுகிறது. புஞ்சை நிலத்தில் சவுக்கு பயிரிடப்படுகிறது. 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏலம் விடப்படுகிறது. புதிய விதிகளின் அடிப்படையில் இப்போது உரிய குத்தகையை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 68, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**68—**

## சுரங்கப்பாதையை சீர்படுத்துதல்

***24175—திரு. ப. பொன்னம்பலம்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரை மீனாட்சி அம்மன் கோயில் முதல் திருமலை நாயக்கர் மஹால் வரை சுரங்கப்பாதை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது சீர் செய்யப்படும்?*

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மீனாட்சி அம்மன் கோயிலிலிருந்து திருமலை நாயக்கர் மஹால் வரை எவ்வித சுரங்கப்பாதையும் இல்லை. எனவே அதைச் சீர் செய்யும் அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை திருமலை நாயக்கர் மஹாலிலிருந்து மதுரை மீனாட்சி அம்மன் கோயில் வரை சுரங்கப்பாதை உள்ளதாக நீண்ட நெடுங்காலமாக கருத்து உள்ளது. திருமலை நாயக்கர் மஹாலில் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து சுரங்கப்பாதை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் செல்கிறது என்று மக்கள் இப்போதும் நம்புகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருமலை நாயக்கர் மஹாலில் உள்ள இடத்தைப் பார்வையிட்டு சுரங்கப்பாதை இருப்பதை உறுதி செய்ய இயலுமா என்பதையும், அவ்வாறு இருந்தால் சுரங்கப்பாதையை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. பொன்னம்பலம், நாம் கண்டுபிடித்துச் சொல்வோம். அதற்கு அப்புறம் எடுக்கச் சொல்வோம்.

வினா எண் 69. திரு. மா. சின்னசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.





**69—**

## சர்வ சிக்ஷா அபியான்

***6857—திரு மா. சின்னசாமி:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சர்வ சிக்ஷா அபியான் என்ற திட்டம் கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் பகுதிகளில் அமல்படுத்தப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலை, திருப்பூர் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் தற்போது அனைவருக்கும் கல்வி எனும் சர்வ சிக்ஷா அபியான் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி திட்டம் 2002-2003ஆம் கல்வியாண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.

**திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டு, முதன் முறையாக இந்த மன்றத்திற்கு வந்தபோது கொடுத்த வினா. இன்றைக்கு இரண்டு ஆண்டு காலத்திற்குப் பிறகு இந்த வினா வந்திருக்கிறது. இருந்தாலும்கூட, இதற்குமுன்பாகவே தமிழகத்தில் திருப்பூர் நகரில் சென்ற ஆண்டு மட்டும் 51 பள்ளிகளும், இந்த ஆண்டு 32 பள்ளிகளும், S.S.A. திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், விடுபட்டிருக்கின்ற 29 பள்ளிகளை மீண்டும் தொடங்கி கொடுக்குமாறு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்து இருக்கின்றேன். அதை கூடிய விரைவிலே தொடங்கிக் கொடுப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் கல்வி திட்டம் என்பது 6 முதல் 10 வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்து கட்டாயக் கல்வி அளிக்கிற திட்டம். இது 10 ஆண்டுகால திட்டம். இந்த 10 ஆண்டு காலத் திட்டத்திற்கு ரூ. 1619 கோடியை ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே 2001-2002ஆம் ஆண்டு மட்டும் 31 கோடி ரூபாயும், 2002-2003ஆம் ஆண்டு 181 கோடி ரூபாயும், 2003-2004ஆம் ஆண்டு 310 கோடி ரூபாயும் ஒதுக்கி, இந்தத் திட்டம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் மிகச் சிறப்பாக மத்திய அரசினுடைய பாராட்டுதலோடு நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்குதல், அதேபோல தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துதல், ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்தல், பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்டுதல், கழிவறை மற்றும் குடிநீர் வசதிகளுக்கான ஏற்பாடு செய்தல் போன்ற பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே திருப்பூர் வட்டத்திற்கு ஏற்கெனவே செய்யப்பட்டு முடிக்கப்பட்ட திட்டங்களோடு இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் கோரிக்கையாக வைக்கப்பட்டிருக்கிற திட்டங்கள் நிச்சயமாக 2003-2004ஆம் ஆண்டில்—விடுபட்ட திட்டங்கள் அடுத்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்டு நிச்சயமாக முடித்துக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முழு எழுத்தறிவுத் திட்டம் என்பது மதுரை மாநகராட்சிக்குட்பட்ட மாநகராட்சிப் பள்ளிகள், அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகள் இவற்றுக்கும் முழுக்கப் பொருந்துமா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். பொருந்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் கிராமப்புறம், மாநகராட்சி, நகராட்சி என்ற பாகுபாடு இல்லை. 6 முதல் 16 வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இந்தத் திட்டம் கட்டாயமாக்கப்பட்டு இருக்கிறது. எனவே அனைத்துப் பகுதிகளுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் கல்வி என்னும் சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின் மூலம் புதிய பாடத்தினை அறிமுகப்படுத்துவதற்காக, ஏற்கெனவே பணியில் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்காக அவர்களைப் பயிற்சிக்கு அழைக்கின்றார்கள். அந்தப் பயிற்சிக்கு அழைக்கின்ற காலமானது, பள்ளி நாட்களாக இருப்பதால், பயிற்சிக்குச் செல்கின்ற ஆசிரியர்களுக்குப் பதிலாக அங்கு மறு ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கின்றார்கள். ஆகவே பயிற்சிகளை விடுமுறை நாட்களில் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதத்திற்கு இரண்டு நாட்கள் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. வெள்ளிக் கிழமையும் சனிக்கிழமையும் அந்தப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. எனவே ஒரு நாள் அவர்கள் விடுமுறை எடுகக வேண்டியிருக்கிறது. இருந்தாலும், பள்ளி எந்த வகையிலும் பாதிக்காத அளவில், மற்ற ஆசிரியர்கள் அங்கே நியமிக்கப்பட்டு, அந்தப் பள்ளியைத் தொடர்ந்து நடத்துகிறார்கள். பள்ளிக்கு ஓர் ஆசிரியர்தான் அந்தப் பயிற்சிக்குச் செல்கிறார்கள். எனவே வகுப்புகள் எந்த வகையிலும் பாதிக்காது. அதையும் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறும்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளுக்கு முன்னுரிமை அளித்து திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று கூறியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே, இந்த ஆண்டு மட்டும் 10 தொடக்கப் பள்ளிகள் புதிதாக அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள். அந்த இடங்களிலே முன்னுரிமை அடிப்படையிலே இந்த ஆண்டு கட்டடங்களைக் கட்டித் தர முன்வருவார்களா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய பெரு முயற்சியின் காரணமாக இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு, இதுவரை தமிழகத்தில் 1,112 தொடக்கப் பள்ளிகளும், 1075 நடுநிலைப் பள்ளிகளும் தொடங்கப்பட்டுள்ளன. அனைத்து இடங்களிலும் 3 வகுப்பறைகள் கொண்ட வகுப்பறைக் கட்டடம், அதேபோல

இரண்டு வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு உத்தரவிட்டிருக்கிறோம். ஆக, புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கிற இந்தத் தொடக்கப் பள்ளிகள், தரம் உயர்த்தப்பட்டிருக்கிற அனைத்து நடுநிலைப் பள்ளிகளுக்கும் இந்த ஆண்டு, முடிந்த அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்து கட்டிக்கொண்டிருக்கிறோம். அப்படி விடுபட்ட இடங்களிலே, அடுத்த நிதியாண்டில் நிச்சயமாக அனைத்துப் பள்ளிகளுக்கும், தொடங்கப்பட்ட அனைத்துப் பள்ளிகளுக்கும் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இளவழகன்.

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்படக்கூடிய பள்ளிகளின கட்டுமானப் பணிகளை, இத்திட்டத்தின்கீழ் நியமனம் செய்யப்பட்டு இருக்கக்கூடிய, மாவட்ட அளவிலே ஒரேயொரு பொறியாளர் கவனித்து வருவதால், கட்டுமானப் பணிகளிலே காலதாமதம் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்கும்பொருட்டு, பள்ளிக் கட்டடக் கட்டுமானப் பணிகளை ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் கல்வித் திட்டம் என்ற திட்டத்தின்கீழ் கட்டப்படுகின்ற அனைத்துப் பள்ளிக் கட்டடங்களுமே கிராமக் கல்விக் குழுவின் மூலமாகக் கட்டப்படுகிறது. எந்தத் துறைக்கும் இந்தக் கட்டடம் கட்டும் பணி ஒதுக்கப்படவில்லை. எனவே கிராம கல்விக் குழுவின் மூலமாக. கிராம மக்களை உட்படுத்தி, கிராம மக்களுடைய ஒத்துழைப்போடு அவர்கள் ஈடுபாடு இருக்க வேண்டும் என்கிற அந்த எண்ணத்தின் அடிப்படையில், கல்விக் குழுவின் மூலமாகத்தான் இந்தக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எங்களுக்குக் கிடைத்த தகவல்படி, எல்லா ஊர்களிலும் அனைத்துப் பொதுமக்களும் இதிலே ஆர்வத்தோடு, முழு ஈடுபாட்டோடு இந்தக் கட்டடப் பணிகளிலே ஈடுபட்டு. அவர்களே கணக்கு வைத்துக் கொண்டு, இந்தப் பணிகளை மிகச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். எனவே வேறு துறையிடம் ஒப்படைக்கும் எண்ணம் தற்போதைக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சர்வ சிக்ஷா அபியான் திட்டம் மத்திய அரசாங்கத்தினுடைய திட்டம். இத்திட்டத்தின்கீழ் அனைவருக்கும் கல்வி கிடைக்க வேண்டும்





என்கிற நோக்கத்தோடு இது ஏற்படுத்தப்பட்டாலும், நகராட்சிகளிலே பல பள்ளிகள், மாணவர்கள் இல்லை என்ற காரணத்தால் கடந்த காலங்களிலே மூடப்பட்டிருக்கின்றன. ஆகவே அவையெல்லாம் மீண்டும் திறக்கப்படுமா? தனியாருடைய உதவிபெறும் பள்ளிகள் கட்டடம் கட்ட முடியாமல், நடத்த முடியாமல் இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்களை சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின் மூலம் அரசு எடுத்து நடத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பிச்சாண்டி அவர்கள் ஒரு முன்னாள் அமைச்சர். வெகு சாமர்த்தியமாகப் பேசுகிறார் என்று கருதுகிறேன. இநத அனைவருக்கும் கல்வித் திட்டம் என்பது ஏதோ மத்திய அரசுத் திட்டம் என்று சொல்லி, தமிழக அரசுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பது போல இங்கே பேரவையிலே பதிவு செய்கிறார். அது நல்லதல்ல. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் (குறுக்கீடு) இல்லை, இல்லை. இது மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்துகிற திட்டம். இதிலே ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டமானாலும் சரி, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டமானாலும் சரி, ஒதுக்கீடு இருக்கிறது. விகிதாச்சாரம் இருக்கிறது. 75:25 என்று இப்போது நிதி ஒதுக்கப்படுகிறது. அடுத்த நிதியாண்டில் 50-க்கு 50 - மத்திய அரசு பாதித் தொகை, நம்முடைய அரசு பாதித் தொகை. எனவே இது மைய அரசினுடைய திட்டம் என்று கூறிவிட முடியாது. அப்படியே மைய அரசு பணம் கொடுத்தாலும், அது நம்முடைய பணம்தான். நம்முடைய மக்கள் வரிபபணம்தான. அவர்கள் இதிலே பங்கு கொள்கிறார்கள் என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, முழுக்க முழுக்க இது மத்திய அரசுத் திட்டம் என்று சொல்லி, தமிழக அரசை தயவுசெய்து நீங்கள் இந்தத் திட்டத்திற்கு சம்பந்தம் இல்லை என்று ஒதுக்கி விடாதீர்கள். அப்படிச் சொல்வதனாலே மக்கள் நிச்சயமாக நம்ப மாட்டார்கள். நீங்கள் சொல்வதைப்போல பல நகராட்சிப் பள்ளிகள் நம்முடைய அரசினுடைய அரசுப் பள்ளிகளாக இப்போது செயல்பட்டு வருகின்றன. சில நகராட்சிப் பள்ளிகள், சில மாநகராட்சிப் பள்ளிகள், நகராட்சி, மாநகராட்சி நிர்வாகத்திலே இருக்கின்றன. ஏதாவது குறைபாடுகள் இருந்தால் சம்பந்தப்பட்ட துறைகளிடம் நாம் சொல்லி, அந்தப் பள்ளிகளை சீர்திருத்தம் செய்யலாம். அப்படி ஒருவேளை உள்ளாட்சி அமைப்புகள் அரசாங்கத்திடம இந்தப பளளிகளை ஒப்படைப்பதற்கு அவர்களாக முன்வருவார்களேயானால், கல்வித் துறை அதுபற்றி யோசிக்கும்.

[2003 நவம்பர் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடங்கள் கட்டுகிற பொறுப்பு, கல்விக் குழுவின் மூலமாகத்தான் கொடுக்கிறோம். இதர துறைகளிலே கொடுப்பதில்லை என்று நம்முடைய அமைச்சர் சொன்னார். இது சர்வ சிக்ஷா அபியான் கட்டடங்களுக்கு மட்டுமா, அரசுப் பள்ளிகளுக்குமா என்பது தெரிய வேண்டும், ஒன்று. அதோடு சிங்காநல்லூர் தொகுதிக்குள் இருக்கிற காளப்பட்டி என்கிற ஊரில் ஒரு அரசு மேல்நிலைப் பள்ளியில் 30 வருடங்களுக்கு முன்னால் கட்டப்பட்டிருக்கிற கட்டடம் பழுதடைந்து இருக்கிறது. 100 சதவிகிதம் அளவிற்கு பொது மக்கள், பிரமுகர்கள், 30 இலட்சம் ரூபாய்க்கு கிட்டத்தட்ட பொருள்களும், நிதியும் கொடுத்து கட்டடத்தை புதிதாகக் கட்டுவதற்கு கலெக்டர் அனுமதி கொடுத்துவிட்டார். Public Works Department அந்தக் கட்டடத்தை இடிக்கக் கூடாது, அந்த playground-லே கட்டிக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். அப்படிக் கட்டினால் playground இல்லாமல் போகும். ஆகையினால், முழுக்க முழுக்க அரசுப் பணம் இல்லாமல் பொதுமக்கள் நிதியுடன் இதுபோன்ற கட்டடங்களைக் கட்டுவதற்கு துறைகள் தடை விதிப்பதோ அல்லது தடையின்மைச் சான்றிதழ் வழங்குவதில் delay பண்ணுவதோ இல்லாமல் இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் கல்வித் திட்டம் என்கிற இந்தத் திட்டத்தின்கீழ் கட்டப்படுகிற கட்டடம்தான் நம்முடைய கிராமக் கல்விக் குழுவின் மூலமாகக் கட்டப்பட்டு வருகிறது. இப்பொழுது மற்ற உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டப்பட்டு வருகிற கட்டடம் தமிழகத்திலேயே நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் நபார்டு மூலமாக நிதி உதவி பெற்று, அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு இப்பொழுது கட்டடம் கட்டி வருகிறோம். இதுவரை நபார்டு வங்கி, கிராமப்புறக் குடிநீர் மற்றும் சாலை வசதிக்குத்தான் நிதி உதவி கொடுத்தார்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் காரணமாக நபார்டு வங்கி சுகாதாரத் துறைக்கும், கல்வித் துறைக்கும் இப்பொழுது நிதி ஒதுக்க முன்வந்திருக்கிறது. இதற்கு மிக மிக முக்கிய காரணம், நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த இரண்டு ஆண்டுகாலத்தில் செய்த நிதிச் சீர்திருத்தமும்,



நிர்வாகச் சீர்திருத்தமும்தான். எனவே ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நபார்டு வங்கி, உலக வங்கி போன்ற நிதி நிறுவனங்களை அவர்கள் நாடியும், அவர்கள் கொடுக்க முன்வராததற்குக் காரணம், அந்த நிர்வாகச் சீர்திருத்தம், நிதிச் சீர்திருத்தங்களை அவர்கள் செய்வதற்கு முன்வராத காரணத்தினால்தான். எனவே இப்பொழுது நபார்டு வங்கி மூலமாகப் பெறப்படுகிற நிதியின் மூலம் பள்ளிக் கட்டடங்கள் கட்டுகிறபொழுது, பொதுப் பணித் துறையின் மூலமாக நாங்கள் கட்டி வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்கிறபொழுது, தனியார் முன்வந்து நிதியைக் கொடுத்து, பள்ளிக்கூடங்களைக் கட்டுகிறபொழுது அதற்கு சில பிரச்சினைகள் இருப்பதாகச் சொன்னார்கள். இந்த அரசை, நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், கல்வித் துறையைப் பொறுத்தவரையிலே, பொதுமக்கள் ஈடுபாடு இதிலே அதிகமாக இருக்க வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. எனவே அப்படி நிதி கொடுத்து அவர்கள் கட்டடம் கட்டுவதற்கு முன்வந்தால், நிச்சயமாக அவர்களுக்கு இடம் கொடுத்து, அதற்கான வசதி வாய்ப்புகளைச் செய்து கொடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியினால், கல்வித் திட்டங்களுக்கு நபார்டு வங்கியிலிருந்து கடன் வழங்குவதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். நகர்ப்புறங்களில் இருக்கிற கல்வி நிலையங்களைப் புதுப்பித்துக் கட்டுவதற்கும் நபார்டு வங்கித் திட்டத்திலிருந்து கடன் பெற்றுத் தர முடியுமா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கி மூலமாக மாநகராட்சி, நகராட்சிப் பள்ளிகளுக்கு இப்போது நிதி பெற்றுத் தருவதற்கு முயற்சிகள் எடுக்கவில்லை. அந்த உள்ளாட்சிகளைப் பொறுத்தவரையில், அப்படி கட்டடம் கட்டுவதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதில் முடிகிற வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** அப்படி கட்டணம் கட்டுவதற்கு நிதியுதவியைப் பெற்றுத் தருவதற்கு அரசிடம் கோரிக்கை வரும்பட்சத்தில் நிச்சயமாக அதற்கும் இந்த அரசு முயற்சிகளை எடுத்துக்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

*(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)*

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெடுஞ்சாலை ரோந்துக் குழுக்கள் வாகனங்களை நிறுத்தி கட்டணம் வசூலிப்பதாக எழுந்த கருத்து குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெடுஞ்சாலையில் Highways Patrol காரில் வரும் காவலர்கள் அவ்வழியில் வரும் வாகனங்களை நிறுத்தி கட்டணம் வசூலிப்பது குறித்து திரு. சி. ஞானசேகரன் அவர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பாகக் கொடுத்துள்ளார்கள். இதை நான் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக அனுமதித்து திரு. சி. ஞானசேகரன் அவர்களை இதுகுறித்து சுருக்கமாக விளக்குமாறு அழைக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதியதாக இந்த Highways Patrol என்கிற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து, அதற்காக மிக அழகான புதிய குவாலிஸ் கார்களையெல்லாம் நிறைய வாங்கிக் கொடுத்து, இப்போது அதிலே காவலர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் மற்றும் Head-Constables, Constables என்று நியமனம் செய்யப்பட்டு, தமிழ்நாடு முழுக்க அவர்கள் ரோந்து வந்துகொண்டிருக்கிறார்கள். நேற்றுகூட இந்த மதுபானக் கடை சம்பந்தமாக இந்த அவையிலே எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதிலளிக்கிறபோது, இந்தக் குடிகாரர்களால் சட்டம்-ஒழுங்கு நிச்சயமாக தமிழகத்திலே எந்த வகையிலேயும் கெடவில்லை; இனியும் கெடாது என்பதற்காக ஒரு கருத்தைச் சொல்கிறபோது, தமிழகம் முழுவதிலும் இந்த Highways Patrol என்கிற திட்டத்தின் வாயிலாக புதிய



புதிய வாகனங்களிலே இப்போது காவலர்கள் எல்லாம் 24 மணி நேரமும் ரோந்து வந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே எநதவிதமான பயமோ, அச்சமோ தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையில்லை என்கிற கருத்தை வலியுறுத்தினார்கள். அந்தக் கருத்தை வரவேற்கிறோம். ஆனால் ரோந்துக்கு, பாதுகாப்பிற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிற இந்தக் காவலர்கள், ஆங்காங்கே போகிற வருகிற வாகனங்களை, லாரியாக இருந்தாலும் சரி, அது ஏதாவது கொஞ்சம் லோடு ஏற்றியிருந்தால், அது over load என்று சொல்கிறார்கள். இல்லாவிட்டால் உயரமாக ஏற்றியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இல்லையென்றால் ஏதோ ஒரு கேமராவை வைத்துக்கொண்டு வேகமாக வருவதாகச் சொல்கிறார்கள்—சாதாரணமாக, பொதுவாக வேலூரிலிருந்து இங்கே சென்னைக்கு வருகிறபோது—இந்த நான்கு வழிச்சாலை, பாரதப் பிரதமருடைய தங்க நாற்கரச் சாலை என்கிற திட்டம் ஒன்று வந்தது. அந்தத் திட்டத்தை மிக வேகமாக இந்த டிசம்பருக்குள் முடிக்க வேண்டும் என்று சொல்லி, அடுத்த டிசம்பர் மாதம் வரைக்கும் ஒரு வருடம் extend செய்துவிட்டு, சாலையில் எங்கு பார்த்தாலும் குழி, நம்மால் வேகமாக வரமுடியாது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், கவனத்தைச் சிதற விடாதீர்கள்; இது சிறப்புக் கவன ஈர்ப்பு.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, அவ்வளவு வேகமாக வரமுடியாத இடத்தில், overspeed என்று சொல்லி, இவர்கள் நிறுத்தி, ஆங்காங்கே பிரச்சினைகள் பல இடங்களிலே வருவதாகக் கருத்துகள் எங்களுக்குச் சொல்லப்படுகின்றன. சிலபேர் புகாரும் சொல்கிறார்கள். ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு ஒரு சரியான வழிமுறையைச் செய்து, சாதாரண மக்களுக்கு, காரிலே வருகிறவர்களோ, பஸ்களிலே வருகிறவர்களோ அல்லது வாகனங்களில் வருகிறவர்களோ அல்லது போர்வெல் போடுவதற்குரிய rig போன்றவையெல்லாம் போனால், அவற்றையெல்லாம் நிறுத்திவிடக்கூடிய ஒரு சூழல் இருக்கிறது. அவர்கள் இதுபோன்று எந்தவிதமான தொல்லையும், தராத வகையிலே இவற்றிற்கெல்லாம் ஒரு பொது அறிவிப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளிக்க வேண்டும். பாதுகாப்பிற்காக மட்டும், இது தேவைப்படுகிற நேரத்திலே, சட்டம்-ஒழுங்கு, ஏதாவது ஒரு தவறு நடக்குமேயானால் அவர்கள் இதிலே தலையிடலாம். ஆனால் போகிற வருகிற வாகனங்களையெல்லாம் தடுத்து நிறுத்தி, மக்களுக்குப் பிரச்சினையை உருவாக்கக்கூடிய ஒரு சூழல் இருந்துகொண்டிருக்கிறது.

இதிலிருந்து தமிழ்நாட்டு மக்களைக் காப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலை ரோந்துக் குழுக்கள்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இப்போது தெரிவித்த குற்றச்சாட்டுக்கள், புகார்கள், கருத்துகள் அனைத்துமே உண்மையற்றவை; அடிப்படையே இல்லாதவை என்பதை முதலிலேயே, ஆரம்பத்திலேயே தெரிவித்துவிட்டு, மேலும் என் பதிலை நான் தொடருகிறேன்.

நெடுஞ்சாலைகளில் நிகழும் குற்றங்களைத் தடுக்கவும், போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி, நெடுஞ்சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி செய்து, தக்க தருணத்தில் அவர்களுக்கு மருத்துவ வசதி கிடைக்கச் செய்வதன்மூலம் அவர்களது உயிரைக் காப்பதற்கும், கடந்த 1994 ஆம் ஆண்டில் Highways Patrol Scheme என்னும் நெடுஞ்சாலை ரோந்துத் திட்டம் என்னால் துவக்கி வைக்கப்பட்டது. இந்த நெடுஞ்சாலை ரோந்துக் குழுக்களுக்கு உதவி புரிய 1996 ஆம் ஆண்டு 13 போக்குவரத்து உதவி மையங்கள், அதாவது Traffic Aid Posts—தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்படுத்தப்பட்டன. ஆயினும், நெடுஞ்சாலைகள் பெருமளவில் விரிவுபடுத்தப்பட்டதாலும், போக்குவரத்து மிக அதிகமான அளவில் பெருகிவிட்டதாலும், நெடுஞ்சாலை விபத்துகளின் எண்ணிக்கை கவலைப்படும் அளவிற்கு உயர்ந்துவிட்டது. இதைக் கருத்திற்கொண்டுதான், கடந்த 9-4-2003 அன்று, காவல் துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்தில், இந்த நெடுஞ்சாலை ரோந்துக் குழுக்கள் மற்றும் போக்குவாத்து உதவி மையங்கள் ஆகியன ஒன்றிணைக்கப்பட்டு, இவற்றின் செயல்பாடுகள் சீரமைக்கப்படுவதுடன் போக்குவரத்துத் துறையினரால் நிறுவப்படும் அவசர விபத்து உதவி மையங்களுடன், அதாவது, Emergency Accident Relief Centres-உடன் நெடுஞ்சாலை ரோந்துக் குழுக்கள் இணைந்து செயல்படும் வண்ணம் புதிய திட்டம் ஒன்றினை நான் அறிவித்தேன். இதன் அடிப்படையில் 5-6-2003 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இதன்படி, மாநிலம் முழுவதுமுள்ள நெடுஞ்சாலைகளில் அதிக அளவில் வாகனப் போக்குவரத்து நடைபெறும் மற்றும் அடிக்கடி விபத்துகள் நடைபெறும் 80 நெடுஞ்சாலைப் பிரிவுகள் கண்டறியப்பட்டு, அவற்றில் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் ரோந்துப் பணி புரிய 160 நெடுஞ்சாலை ரோந்துக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்தக் குழுக்களின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சியரின் தலைமையில் அமைந்துள்ள மாவட்டச் சாலைப் பாதுகாப்புக் குழு—District Road Safety Council சீராய்வு செய்வதற்கும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.





முற்பகல் 11-05

1-8-2003 நாளிட்ட அரசாணை எண் 653 (உள் துறை)-ன்படி, இந்த 80 நெடுஞ்சாலைப் பிரிவுகளுக்கும் 80 புதிய Toyota Qualis வாகனங்கள் வழங்கப்படவும், வேகத்தைக் கண்டறியும் Radar கருவி, வாகன ஓட்டி மது அருந்தியுள்ளாரா என்பதைக் கண்டறியும் கருவி; Video Camera, Mobile Phone, முதலுதவிப் பெட்டி, ஒலிபெருக்கி அமைப்பு, தீயணைப்புக் கருவிகள், ஒளி உமிழும் விளக்குகள் ஆகியவை ஒவ்வொரு வண்டியிலும் பொருத்தப்படவும் ஆணையிடப்பட்டது. அதுமட்டுமின்றி, ஒவ்வொரு வாகனத்திற்கும், மாதத்திற்கு 500 லிட்டர் என்ற அளவுக்கு, எரிபொருள் உயர்த்தி வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவினம் 5 கோடியே, 33 இலட்சம் ரூபாயாகும். வருடந்தோறும் இதற்கான தொடர் செலவு, 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 22-8-2003 அன்று, 80 நெடுஞ்சாலைப் பிரிவுகளில் பணிபுரியும் 160 நெடுஞ்சாலை ரோந்துக் குழுக்களுக்கும் மேற்கண்ட அனைத்து வசதிகளும் பொருத்தப்பட்ட புதிய வாகனங்கள் என்னால் வழங்கப்பட்டன.

இரவும் பகலும், 24 மணி நேரமும், இந்தக் குழுவினர் தொடர்ந்து பணியாற்றி, விபத்துகளைத் தடுத்தல்; நெடுஞ்சாலையில் நிகழும் குற்றங்கள் குறித்து, உடனடியாக நடவடிக்கை எடுத்தல்; விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக முதலுதவி மற்றும் மருத்துவ வசதி கிடைக்கச் செய்து, அதன் மூலம் உயிரிழப்புகளைத் தவிர்த்தல் ஆகிய நோக்கங்களுடன் செயல்பட்டு வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மிக அதிக அளவில் வாகனப் போக்குவரத்து நடைபெற்று வருவதும், மிக அதிக அளவில் விபத்துகள் நிகழக்கூடியதுமான GST நெடுஞ்சாலையில் 72 கிலோமீட்டர் மற்றும் GWT நெடுஞ்சாலையில் 62 கிலோமீட்டர், ஆக மொத்தம் 134 கிலோமீட்டர் தூரமுள்ள நெடுஞ்சாலை, ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் 5 வாகனங்கள் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

இந்த ரோந்துக் குழுக்கள் தங்கள் பணியின் ஒரு பகுதியாக தேசிய நெடுஞ்சாலையில் மோட்டார் வாகனங்களைத் தணிக்கை செய்து, மோட்டார் வாகனச் சட்ட விதி மீறல்கள் மீதான வழக்குகளைப் பதிவு செய்து, அதற்குரிய குற்றப் பத்திரிகையை சம்பந்தப்பட்ட காவல் நிலையம் மூலமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்கின்றனர். நீதிமன்றங்களில் வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு, அபராதத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டு, இந்த அபராதத் தொகை குற்றம் சாட்டப்பட்டவர்களால் நேரடியாகச் செலுத்தப்படுகிறது; அல்லது நீதிமன்ற உத்தரவின்பேரில் உள்ளூர் போலீசாரால் அபராதத் தொகை வசூல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களில் செலுத்தப்படுகின்றது.

ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ள காவல் துறை உதவி ஆய்வாளர்களுக்கு சம்பவ இடத்திலேயே அபராதத் தொகையை வசூலிக்கும் அதிகாரம் இல்லை; ரோந்துக் குழுவினர் யாருக்கும் அந்த அதிகாரம் வழங்கப்படவுமில்லை; அபராதத் தொகை ரோந்துக் குழுவினரால வசூலிக்கப்படுவதும் இல்லை.

நெடுஞ்சாலை ரோந்து வாகனங்களில் அனைவருக்கும் தெரியும் வகையில் ரோந்து வரிசை எண்கள் தெளிவாக வாகனங்களின் பக்கவாட்டில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 4,5,6,7 மற்றும் 8 ஆகிய எண்கள் கொடுக்கப்பட்ட வாகனங்கள் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளன. எனினும் வாகனங்களை நிறுத்தி, காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள நெடுஞ்சாலைகளில், எந்தவித கட்டணமும் வசூல் செய்யப்படுவதாக, மாநில நிலையிலோ அல்லது மாவட்ட நிலையிலோ பணிபுரியும் அதிகாரிகளால், புகார்கள் எதுவும் இதுவரை பெறப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

முற்பகல் 11-10

மாறாக ரோந்து வாகனங்களின் இடைவிடாத சுற்றுப் பணியினால், இம்மாவட்டத்தில் அமைந்துள்ள நெடுஞ்சாலைகளில், 2003 ஆம் ஆண்டில், இதுநாள் வரையில், எந்த ஒரு கொள்ளையோ, கூட்டுக்கொள்ளையோ நடைபெறவில்லை என்பது பாராட்டுக்குரிய செய்தியாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 2002 ஆம் ஆண்டு, ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடந்த நெடுஞ்சாலை விபத்துகள், உயிர்ச்சேதம் குறித்த புள்ளிவிவரங்களை, இந்த ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர்



மாதங்களுக்கான புள்ளி விவரங்களுடன் ஒப்பிடும்போது, நெடுஞ்சாலை ரோந்துக் குழுவினரின், இடையறாத செயல்பாட்டினால், இந்த ஆண்டு 2003-ல், தமிழ்நாடு முழுவதுமே, சாலை விபத்துகளின் எண்ணிக்கை, கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, குறைக்கப்பட்டுள்ளது என்பது தெரியவரும். மேலும், விபத்து நடந்த ஒரு மணி நேரத்திற்குள், தக்க மருத்துவ உதவி அளிக்கபபடுவதால், விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையும், பெருமளவில் குறைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 2002 ஆகஸ்ட் மாதத்தில் நிகழ்ந்த, 1,222 சாலை விபத்துகளில், 337 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால் 2003 ஆகஸ்ட் மாதத்தில், சாலை விபத்துகளின் எண்ணிக்கை, 1057 ஆகக் குறைந்து, 228 மரணங்கள் மட்டுமே நிகழ்ந்து உள்ளன. அதுபோன்றே, செப்டம்பர் 2002-ல் நிகழ்நத 1,239 சாலை விபத்துகளில், 260 பேர் உயிரிழந்தனர். ஆனால் 2003 செப்டம்பரில் நிகழ்ந்த சாலை விபத்துகள் 1,178 தான். அவற்றில் 206 மரணங்கள் மட்டுமே நிகழ்ந்துள்ளன. மேலும், 2002 அக்டோபர் மாதத்தில், தேசிய நெடுஞ்சாலைகளில், 1,683 சாலை விபத்துகளில், 393 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால் இந்த வருடம் அக்டோபர் மாதத்தில், இந்த விபத்து விகிதம் குறைந்துள்ளது. அதாவது, 2003-ல் 1,325 சாலை விபத்துகளில், 315 மரணங்கள் மட்டுமே நிகழ்ந்துள்ளன. 2002 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2003 அக்டோபரில் நிகழ்ந்த விபத்துகளின் எண்ணிக்கை, 21 விழுக்காடு குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. விபத்து நடந்த ஒரு மணி நேரத்திற்குள் உயிர் காக்கும் அந்தப் பொன்னான கால வரம்பிற்குள், அதாவது Golden Hour-க்குள் நெடுஞ்சாலை ரோந்துக் குழுக்கள் விரைந்து செயல்பட்டு, தக்க மருத்துவ உதவிகள் அளித்ததால் மட்டுமே, பல அரிய மனித உயிர்கள் காப்பாற்றபபட்டுள்ளன. 2003 ஆம ஆணடு ஆகஸட் மாதத்தில, நெடுஞ்சாலைகளில் ரோந்துக் காவல் பணி தொடங்கப்பட்டதிலிருந்து, அக்டோபர் இறுதி வரை, 2,221 நபர்களுக்கு, மருத்துவ உதவி வழங்கப்பட்டுள்ளது.

அதிக அளவு எரிபொருளுடனும், நவீன வசதிகளுடனும் டொயோட்டா குவாலிஸ் வாகனங்களை அறிமுகப்படுத்தியிருப்பது, நெடுஞ்சாலைகளில் விபத்துகளின் எண்ணிக்கையைக் குறைத்ததோடு மட்டுமல்லாமல், காவலர்களின் நடமாட்டத்தை அதிகப்படுத்தி உள்ளதால், நெடுஞ்சாலைகளில் குற்றங்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைத்துள்ளது. வேகமாக வாகனங்களை ஓட்டுதல, மது

அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டுதல் போன்றவை குறித்த மோட்டார் வாகனச் சட்ட மீறல் வழக்குகள் பதிவு செய்யப்படுவது, பல மடங்கு உயர்ந்துள்ளது. உதாரணமாக, மாநிலத்தில் 2002 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், நெடுஞ்சாலைகளில் குடித்துவிட்டு, வாகனத்தை ஓட்டியது தொடர்பாக, பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 103-ஆக இருந்தது. 2003 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், 1,315-ஆக உயர்ந்துள்ளது. இதைப்போன்றே, மாநிலத்திலுள்ள அனைத்து நெடுஞ்சாலைகளிலும், வேகமாக வாகனங்களை ஓட்டியது தொடர்பாக, பதிவு செய்யப்பட்ட வழக்குகள், அக்டோபர் 2002-ல், 422 ஆக இருந்தது. இந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில், நெடுஞ்சாலை ரோந்துக் குழுக்களின் தீவிரக் கண்காணிப்பின் பயனாக, இது 16,053-ஆக உயர்ந்துள்ளது. மாநில அளவில், மோட்டார் வாகனச சட்ட மீறல்கள் தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட சிறு வழக்குகளின் மொத்த எண்ணிக்கை, கடந்த ஆண்டு அக்டோபரில், 6,552-ஆக இருந்தது. இது இந்த ஆண்டு அக்டோபர் மாதம், 36,933-ஆக உயர்ந்துள்ளது. மோட்டார் வாகனச் சட்டத்தை, முறையாகவும், கடுமையாகவும் அமல்படுத்துவதன் மூலம், தேசிய நெடுஞ்சாலைகளில் விபத்துகள் நடப்பது, பெருமளவு குறைந்துள்ளது.

(முற்பகல் 11-15

இவ்வாறு, ரோந்து வாகனங்கள், பணியில் ஈடுபடுத்தப்பட்ட பிறகு, வாகன விபத்துகளால், நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து பாதிப்பு என்பது, மொத்தமாகவே இல்லை எனலாம். ரோந்து வாகனங்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவதற்கு முன்பு வாகன விபத்துகளால் 3 மணி நேரம் 4 மணி நேரம் என போக்குவரத்து பாதிப்பும், அதனால் போக்குவரத்தை மாற்று வழியில் திருப்பி விடுவதும் இதுவரை வழக்கமாக நடந்து வந்தன. ஆனால் தற்போது அதிநவீன தொலைத் தொடர்பு வசதிகளுடன் கூடிய ரோந்து வாகனங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்ட பிறகு வாகன விபத்து நடந்த இடத்திற்கு ரோந்து வாகனம் 15 முதல் 30 நிமிடங்களுக்குள் விரைந்து சென்று உடனடியாக போக்குவரத்து சரிசெய்யப்பட்டு, வழக்கமான போக்குவரத்து தடையின்றி நடைபெற ஏற்பாடு செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் தற்போது மாற்றி அமைக்கப்பட்டு அதிநவீன தொலைத் தொடர்பு மற்றும் உபகரணங்களுடன் செயலாற்றிவரும் நெடுஞ்சாலை ரோந்துக் குழுவினரின் செயலாக்கத்தினால் உயிர் இழப்புகள் பெருமளவில் தடுக்கப்படுகின்றன. மேலும், நெடுஞ்சாலைகளில் நடைபெறும் குற்ற நிகழ்வுகள் காவலர்களின் பார்வையிலிருந்து தப்பிவிடாமல் வழக்குகள் கூடுதலாக பதிவு



செய்யப்படுவதால், நெடுஞ்சாலைகளில் நடைபெறும் குற்றங்கள் பெருமளவில் தடுக்கப்படவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

## (ஆ) விழுப்புரம் நகர் மன்றம் செயல்படாமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விழுப்புரம் நகர்மன்றம் செயல்படாமல் உள்ளது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பொன்முடி, பரிதி இளம்வழுதி ஆகியோர் அறிவிப்புகள் கொடுத்துள்ளார்கள். இவற்றை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொண்டு, திரு. பொன்முடி அவர்களை இது குறித்து சுருக்கமாகப் பேச அழைக்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் நகராட்சி சுமார் கடந்த 1½ ஆண்டுகளாக செயலாற்ற முடியாமல் அதனுடைய பணிகள் முடக்கி வைக்கப்பட்டு இருக்கின்றன. இதை நான் ஒரு அரசியல் கட்சிப் பிரச்சினையாகக்கூடக் கருதாமல் மாண்புமிகு முதலமைச்சருடைய பார்வைக்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகவே இந்த அறிவிப்பைக் கொடுத்திருக்கிறேன். குறிப்பாக, விழுப்புரம நகராட்சியைப் பொறுத்தவரையில், அங்கே ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் என்றுகூட நான் சொல்வதறகுத் தயாராக இல்லை. அதிலேகூட பெரும்பாலானவர்கள் நகராட்சியினுடைய கூட்டங்கள் நடக்க வேண்டுமென்றுதான் எண்ணுகிறார்கள். ஒரு சிலர் அந்தக் கூட்டத்தை நடத்தக்கூடாது என்று சில நேரங்களிலே தகராறுகள் செய்ததன் அடிப்படையிலேயும், பெரும்பானமையின் அடிபபடையோடு நகர்மன்றக் கூட்டத்திலே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தன. 36 பேர்கள் உள்ள அந்த நகராட்சி மன்றத்தில் 21 பேர்கள் ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களும்கூட, அது பொதுமக்கள் பிரச்சினை என்ற நோக்கத்தோடு அவர்களும் ஆதரித்து இருக்கிறார்கள். கட்சி பிரச்சினையேகூட அங்கே இல்லை. எல்லாம் சாலை போடுவது. (குறுக்கீடு) தயவுசெய்து நான் சொல்லிவிடுகிறேன். நான் சொல்லிவிடுகிறேன். அப்புறம் நீங்கள் பேசுங்கள். நான் என் கருத்தைச் சொல்லிவிடுகிறேன். அப்புறம் நீங்கள் பேசுங்கள். ஆக, அவர்களும் சேர்ந்து அங்கே 89 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதிலே சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நானும்கூட கலந்து கொண்டேன். அந்தத் துறைச் செயலாளரையும் சந்தித்துப் பேசி இருக்கிறேன். அதேபோல, நகராட்சி நிர்வாக ஆணையரிடமும் நான் மனு கொடுத்து இருக்கிறேன். அந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படாதது மட்டுமின்றி, தொடர்ந்து நகர்மன்றக் கூட்டத்தையே நடத்த முடியாத

அளவிற்கு அங்கே அதிகாரிகள் தடை செய்துகொண்டு இருக்கிறார்கள். ஆக, ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள் அனைவரும் இல்லாவிட்டாலும், ஒரு சிலர் அதிலே அதிகாரிகளை கையிலே வைத்துக்கொண்டு நகர்மன்றம் நடைபெறாமல் இருப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். 27 உறுப்பினர்கள்-36 உறுப்பினர்களில் 27 உறுப்பினர்கள் திமுக., அதிமுக., காங்கிரஸ் மற்றும் அனைத்து சுயேட்சை உறுப்பினர்கள்; ஆக 27 உறுப்பினர்கள் நேராக நகராட்சி நிர்வாக ஆணையரைச் சந்தித்தும், மாவட்ட ஆட்சியரைச் சந்தித்தும் நகர்மன்றக் கூட்டத்தை நடத்த வேண்டுமென்று கையெழுத்திட்டு மனுவை கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்மொழி ஒப்புதல் கொடுத்ததாகத்தான் தகவல் இருக்கிறது. அவர்கள் முறைப்படி அவர்களுடைய கடிதத்திலோ மற்றவை மூலமோ ஒப்புதல் தரவில்லை என்பதுதான் உண்மை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாய்மொழி ஒப்புதல் கொடுத்ததாக ஏற்றுக்கொண்டு இருக்கிறார். அதற்கு என்னுடைய உளமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, அந்த உறுப்பினர்கள் 27 பேரும், அவர்களும் நல்ல எண்ணத்துடன்தான். நான் அதைத்தான் முதலிலேயே சொன்னேன். இதை நான் அரசியலாக்கவே விரும்பவில்லை. 27 உறுப்பினர்களும் மாவட்ட ஆட்சியரையும் சந்தித்து இருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற செயலாளரையும் சந்தித்து இருக்கிறார்கள். அவர்களைச் சந்தித்து இந்த மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். கூட்டத்தை நடத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அங்கே இப்போது ஆணையர் இல்லாத காரணத்தினால் பொறுப்பு ஆணையரிடமும் அந்தக் கடிதத்தைக் கொடுத்து இருக்கிறார்கள்.

நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, நீங்கள் அந்த அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டு மீண்டும் அந்தக் கூட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், அந்த நகரத்து மக்களுக்கு நான் ஒதுக்கிய தொகை, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலேயிருந்து 11.5 இலட்சம் ரூபாய் நான் 2001-2002 பணிகளுக்காகவே ஒதுக்கி இருந்தேன். 10 நாட்களுக்கு முன்பு மாவட்ட ஆட்சியர் ஒரு கடிதம் எழுதுகிறார், நீங்கள் விழுப்புரம் நகரத்திலே பணிகளைச் செய்வதற்காக ஒதுக்கீடு செய்த தொகையினை இங்கே செலவிட முடியாது. வேறு இடத்திற்கு அதை





மாற்றிக் கொடுங்கள் என்று எழுதுகிறார். திருப்பி நான் சொன்னேன், 1½ இலட்சம் மக்கள் வாழக்கூடிய அந்த விழுப்புரம் நகரத்திற்காக இந்த நிதியை ஒதுக்கி இருக்கிறேன். ஆகவே, மாவட்ட ஆட்சியருக்கு இருக்கிற அதிகாரத்தை வைத்துக்கூட இதை நீங்கள் செய்யலாம் என்று நான் பதில் கொடுத்ததற்குப் பிறகு, ஆட்சியர் மறுபடியும் ஒரு கடிதத்தைக் கொடுத்து இருக்கிறார். நீங்கள் இந்த ஆண்டு வேண்டுமானால் கொடுங்கள், கடந்த ஆண்டுகளிலே இந்தப் பணியைச் செய்வதற்கு இயலாது; இந்த ஆண்டு நிதியிலே நீங்கள் ஒதுக்கிக்கொடுங்கள் என்று எழுதி இருக்கிறார்.

என்னைப் பொறுத்தவரையில், அந்த நகராட்சியினுடைய மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். அடிப்படைப் பணிகளைக்கூட நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஏதோ ஒருசிலர், ஒரு சுயநலத்திற்காக சில பிரச்சினைகளை உருவாக்குகிறபோது, அவற்றை நடுநிலையோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்— நீங்கள் வேண்டுமானால், உங்கள் அதிகாரிகளை நடுநிலையோடு கேளுங்கள். அங்கே இருக்கிற உங்களுக்கு வேண்டிய உங்கள் கட்சிக்காரர்களைக்கூட அழைத்துவைத்துப் பேசுங்கள்— நடுநிலையோடு பேசி, அந்த நகராட்சி நடைபெறுவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமாய நான கேட்டு அமர்கிறேன்.

*முறபகல் 11-20*

**•மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்திரமாகப் பேசுவது, உண்மை விவரங்களை மூடி மறைத்து, சாமர்த்தியமாகப் பேசுவது ஒரு கலைதான். எல்லோருக்கும் வராது. அந்தக் கலையில் கை தேர்ந்தவர் மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக எனது பாராட்டுகள்.

விழுப்புரம் நகராட்சி, ஏன் செயல்படவில்லை என்பதைப் பற்றிய உண்மை விவரங்களை இப்போது இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

விழுப்புரம் நகர்மன்றம் செயல்படாத நிலைமை, 26-4-2002 முதல் தொடர்கிறது. விழுப்புரம் நகர்மன்ற சாதாரணக் கூட்டம், 25 பொருட்கள்மீது முடிவு செய்ய, 26-4-2002-ல் கூட்டப்பட்டது. நகர்மன்ற

36 உறுப்பினர்களில், 18 உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால், நகர்மன்றக் கூட்டம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் 17-5-2002-ல், 50 பொருட்கள்மீது முடிவுசெய்ய, நகர்மன்றம் கூட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் 20 நகர்மன்ற உறுப்பினர்கள், நகர்மன்றக் கூட்டம் நடத்த எதிர்ப்பு செய்ததால், ஒரு முடிவும் எடுக்காமல் கூட்டம் முடிவுக்கு வந்தது.

மேற்கண்ட நிகழ்வுகள் பற்றிய விவரம், 20-5-2002-ல் விழுப்புரம் நகராட்சி ஆணையரால், நகராட்சி நிர்வாக ஆணையருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், தனது 1-6-2002 தேதியிட்ட கடிதத்தில், நகராட்சித் தலைவர், உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் கூட்டம் நடத்துமாறு அறிவுறுத்தினார். அதையடுத்து, 25-6-2002-ல், 89 பொருட்கள் அடங்கிய நிகழ்வு அட்டவணை Agenda மீது நடவடிக்கை எடுக்க, மற்றுமொரு நகர்மன்றக் கூட்டம் கூட்டப்பட்டது. இக்கூட்டத்திலும், அமைதியான சூழ்நிலை நிலவாத நிலையில், எல்லாப் பொருட்களும் நிறைவேற்றப்பட்டதாக, நகர்மன்றத் தலைவரால் பதிவு செய்யப்பட்டது. இதற்குத் துணைத் தலைவர் மற்றும் 21 நகர்மன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடந்த அன்றே நகர்மன்றத் தலைவரிடம் ஆட்சேப மனு அளித்தனர். அதன் நகல், ஆணையாளருக்கு வழங்கப்பட்டது. நகர்மன்றம், சரியாக இயங்காத நிலையைக் கருத்திற்கொண்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள்"சட்டம், பிரிவு 39, உட்பிரிவு 6-ன்கீழ், ஓர் அலுவலரை நியமிக்கலாம் என அரசுக்குத் தமது கடித எண் 33506/2002/ எம் 3-ல் பரிந்துரைத்துள்ளார். தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 39, உட்பிரிவு 6-ன்படி, நடவடிக்கை எடுக்க, நகர்மன்றத் தலைவரின் கடிதம் ஏதும் இல்லா நிலையில், அரசு நகராட்சிகளின் நிர்வாக இயக்குநரின் கருத்துருவை ஏற்கவில்லை.

25-6-2002 முதல் 14-11-2002 வரை நகர்மன்றக் கூட்டம் நடத்தப்படவில்லை. மீண்டும், தனது 16-11-2002 ஆம் தேதிய கடிதத்தில், விழுப்புரம் நகர்மன்ற ஆணையாளர், 15-11-2002-ல் நடந்த இரண்டு நகர்மன்றக் கூட்டங்களில் முதற்கூட்டம், மாலை 5.15 மணிக்கும், இரண்டாவது கூட்டம், மாலை 530 மணிக்கும் நடந்தது. 137 பொருட்கள், அன்று வருகை புரிந்திருந்த 20 நகர்மன்ற உறுப்பினர்களால், கையை உயர்த்துவது மூலம் நிறைவேற்றப்பட்டதாக அறிக்கை சமர்ப்பித்தார். மூன்று நகர்மன்ற உறுப்பினர்கள் கடத்தப்பட்டுவிட்டதாகப் பெற்ற



புகார்களின் அடிப்படையில், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை எழக்கூடும் என்பதால், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் 15-11-2002 ஆம் தேதிய கூட்டத்தை நடத்த வேண்டாம் என்று நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்பட்டதையும் மீறி, இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.

15-11-2002 ஆம் தேதிய கூட்ட நிகழ்வுகளில், நகர்மன்றக் கூட்டங்கள் நடத்துவதற்கான நடைமுறை மீறல்கள் உள்ளன.

(அ) மாலை 5.15 மணியளவில் நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் 48 பொருட்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. அந்தப் பொருட்கள் யாவும் அவசரமாகத் தீர்மானிக்கப்பட வேண்டியவை அல்ல.

ஆனால் அவசரம எனக் கருதி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920, அட்டவணை-III பிரிவு 2, உட்பிரிவு (1)-ன்படி நகர்மன்ற உறுப்பினர்களுக்கு நிகழ்ச்சிநிரல் வழங்க மூன்று நாட்கள் இடைவெளி வேண்டும் என்பதைத் தவிர்க்கும் நோக்கத்துடன், வேண்டுமென்றே அட்டவணை-III பிரிவு 2, உட்பிரிவு (2)-ன்படி ஒரு நாள் மட்டும் இடைவெளியில், விதிகளுக்கு மாறாக கூட்டம் கூட்டப்பட்டுள்ளது. இந்த விதி மீறலுக்காக, அரசின் கடித எண் 45444/நநி/வி/2002-1, நாள் 29-11-2002-ல் நகர்மன்றத்திடம் விளக்கம் கோரப்பட்டது.

முற்பகல் 11-25

(ஆ) மாலை 530 மணிக்கு, நகர்மன்ற உறுப்பினர்களின் வேண்டுகோள் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. அக்கூட்டத்திற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920, அட்டவணை-III விதி 3, உட்பிரிவு (1)-ன்படி குறைந்தது பத்து நாட்கள் அவகாசம் இல்லாமலும், விதிப்படி முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் கருத்தில் கொள்ளாமல் 89 பொருட்கள் சேர்க்கப்பட்டு, நகர்மன்றக் கூட்டம் நடத்துவதற்கான விதி மீறல்கள் உள்ளன. அந்த 89 பொருட்களும் அவசரமாகப் பரிசீலிக்க வேண்டிய பொருட்கள் இல்லை. இந்த விதி மீறல்களுக்கு அரசு தன் கடித எண் 45444/நநி.வி/2002-2, நாள் 29-11-2002-ல் நகர்மன்றத்தின் விளக்கம் கோரியது.

நகர்மன்றத்திற்கு 29-11-2002-ல் அனுப்பிய இரு அறிவிப்புகள் மூலம், 15-11-2002-ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஏன் ரத்து செய்யக்கூடாது என்று அரசு விளக்கம் கோரியது. நகர்மன்றத் தலைவர் மூன்று நீதிப் பேராணை மனுக்களை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். இவைமீது உயர் நீதிமன்றம் 9-12-2002 அன்று இடைக்கால ஆணை பிறப்பித்தது.

மன்றத்தால் அனுப்பப்படும் விளக்கத்தின்மீது அரசு எவ்வித முடிவும் நீதிமன்ற இறுதி ஆணை வரும் வரை எடுக்க வேண்டாம் என்று ஆணை பிறப்பித்துள்ளது. உயர் நீதிமன்றத்தில் அரசு எதிர் மனு தாக்கல் செய்து, இந்த வழக்குகள் நிலுவையில் உள்ளன.

15-11-2002 அன்று நடந்த கூட்டங்களில் அடங்கிய பொருட்கள், நீதிமன்ற உத்தரவுக்கு உட்பட்டிருப்பது. நகர்மன்றக் கூட்டங்கள் பிறகு நடத்துவதற்குத் தடையாக இல்லை. ஆயினும், நகர்மன்றத் தலைவர், நகர்மன்றக் கூட்டம் நடத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆதலால் நகர்மன்றம் செயல்பாட்டில் இல்லை. அபிவிருத்தி திட்டப் பணிகள் ஏதும் நடைபெறவில்லை. நகர்மன்றத் தலைவரின் ஒத்துழையாமையால், நகராட்சி சொத்துக்கள் பொது ஏலத்தில் கொண்டுவரப்படவில்லை. இதனால் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. நகர்மன்றத் தலைவரின் பிடிவாதத்தால், விழுப்புரம் நகராட்சியில் உள்ள பொதுமக்களுக்குப் பயனளிக்கும் எந்த வளர்ச்சிப் பணிகளும் நடைபெறவில்லை.

பின்னர் 5-9-2003 ஆம் தேதிய கடிதத்தில், விழுப்புரம் நகராட்சி ஆணையாளர் நகர்மன்றம் தொடர்ந்து தனது கடமையைச் செய்யாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டி, தக்க தீர்வு தருமாறு கூறியிருந்தார். மேற்கூறிய நிலையில், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 11-ன்கீழ் செயல்படாத நகர்மன்றத்தைக் கலைக்கலாம் என்ற கருத்துரு அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையரால் 9-9-2003 அன்று அனுப்பப்பட்டது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், 1920, பிரிவு 13-ன்படி நகர்மன்றத் தலைவர், நகர்மன்றக் கூட்டங்களை நடத்த வேண்டும்; மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தில் அளிக்கப்பட்ட கடமைகளைச் செய்வதுடன் அதிகாரங்களையும் செலுத்த வேண்டும். நகர்மன்றத் தலைவரின் செயலற்ற தன்மையால், நகர்மன்ற நிர்வாகம் இயங்காத நிலை ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

### பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டம், திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறந்து விடுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்)



## 2. சிறப்புக் கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) விழுப்புரம் நகர்மன்றம் செயல்படாமை-தொடர்ச்சி

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே-(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் விவாதத்திற்கு இடம் இல்லை. (குறுக்கீடுகள்) நகர்மன்றத் தலைவருக்கு அறிவுரை சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

## 3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டம், திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறந்து விடுதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. ஜெயராமன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** இது என்ன? (குறுக்கீடுகள்)

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)..

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)..

## 4. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகள்

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறோம்; கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இன்றைக்கு நீர்வள நிதிநிலை அறிக்கை மீது விவாதம் இருக்கிறது. எனவே இன்றைக்கு உங்களுடையதை எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்)...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இன்னும் ஒரு நாள்தான் இருக்கிறது. எதையுமே எடுக்கப் போவதில்லை. (குறுக்கீடுகள்) ** (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** விளக்கம் சொல்ல வாய்ப்பு கொடுங்கள் (குறுக்கீடுகள்)

## 3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டம், திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறந்து விடுதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதத்திற்கு இடமில்லை. (குறுக்கீடுகள்) திரு. வி. ஜெயராமன். (குறுக்கீடுகள்).

*முற்பகல் 11-30*

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரம்பிக்குளம் ஆழியாறு அணைக்கட்டுத் திட்டத்தில் திருமூர்த்தி அணையின் முதலாம் மண்டலத்திலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் விட வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

#### அறிக்கை

தற்போது அணையிலுள்ள நீரின் இருப்பு ஒரு முழுப் பயிர் காலத்திற்கும் நீர் விட போதுமானதாக இல்லை. எனினும் தற்போது இருப்பில் உள்ள நீர் அளவைக் கவனத்தில் கொண்டு மற்றும் விவசாயிகளின் கோரிக்கையின் படியும் சிறப்பு நனைப்பாக (Special Wetting)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இருமுறை 16 நாட்களுக்கு அதாவது 32 நாட்களுக்கு தண்ணீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்து அணையின் நீர் இருப்பு அதிமாகும்பொழுது தொடர்ந்து பாசனத்திற்குத் தண்ணீர் வழங்குவது குறித்து ஆராயப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயராமன், ஒரு கேள்வி கேளுங்கள்.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அணையின் நீர் இருப்பு குறைவாக இருப்பதால் இரண்டு முறை ஒரு மாத காலத்திறகுத் தண்ணீர் விட முடியும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை இரண்டு மாத காலத்திற்கு நீட்டித்துக் கொடுத்து சிறு பயிர்கள், தானிய பயிர்கள் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப் பாசனத்தில் இன்றைய நீர் இருப்பு............ (மணியடிக்கப்பெற்றது)

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (ஆ) விழுப்புரம் நகர்மன்றம் செயல்படாமை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், எதிர்கட்சித் தலைவர் ஏதோ சொல்கிறார், கேட்டுக்கொள்ளுங்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் நகராட்சி மன்றம் சார்பாக இங்கே எழுப்பப்பட்ட இந்தப் பிரச்சினையில் முதலமைச்சர் அவர்கள் கடுமையான குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, குற்றச்சாட்டு இல்லை. உண்மை நிலையை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நிலைமையை அவர்கள் விளக்கி இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

[2003 நவம்பர் 6

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொன்ன காரணத்தால் அந்தக் குற்றச்சாட்டு உண்மை அல்ல. பொய், என்று சொல்ல எனக்கு வாய்ப்பு இல்லை. அது முறையல்ல. ஆனால் பிரச்சினையை எழுப்பியவர் விளக்கம் சொல்வதற்கு ஒரு வாய்ப்பு அளித்தால் இவ்வளவு பெரிய குற்றச்சாட்டு சொன்னதற்குப் பின்னர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றச்சாட்டு ஒன்றுமே சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நகராட்சி மன்றம் செயல்படாதது குறித்த அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**பேராசிரியர் க. அன்பழகன்:** அப்படியானால் பேரவைத் தலைவர் அவர்கள் முதலமைச்சர் சொன்ன எதுவும் குற்றச்சாட்டு அல்ல என்று இந்த அவைக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நகரமன்றத் தலைவருடைய பொறுப்பற்ற தன்மையின் காரணமாக இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** அது குற்றச்சாட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆகவே நகரமன்றத் தலைவருக்கு அறிவுரை சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**பேராசிரியர் க: அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு குற்றச்சாட்டு. குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்று கூட சொல்ல எனக்கு உரிமை இல்லை. குற்றச்சாட்டு உண்மை அல்ல என்று மறுப்பதற்கு எங்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டாமா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசியல் ரீதியாக இங்கே பேசவில்லை. எந்தக் குற்றச்சாட்டையும் கூறவில்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு பிரச்சினையை எழுப்பினார். அதற்கு துறையிடமிருந்து, உரிய துறையிடமிருந்து அறிக்கை பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் தந்த தகவல்களின் அடிப்படையில் துறை தயாரித்த அறிக்கையை நான் இங்கே வாசித்தேன். இதில் நான் சொல்வதை எப்படி குற்றச்சாட்டு என்று சொல்ல முடியும்? அந்த வார்த்தையே தவறானது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)



2003 நவம்பர் 6]

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை குற்றச்சாட்டு சொன்னதாகக் கூறுவது என்னுடைய கருத்து அல்ல. முதலமைச்சர் அவர்கள் படித்த அறிக்கையில் சொல்லப்பட்ட பல செய்திகள் மூலம் விழுப்புரம் நகராட்சி மன்றத் தலைவரும், நகராட்சி மன்ற அமைப்பும் செயல்படுவதில் குறை இருப்பதாக இங்கே அறிக்கையிலே படிக்கப்பட்டது. அது அதிகாரிகள் தந்த செய்தி. அதிலே கருத்து மாறுபாடு இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. பொன்முடி அவர்கள் சொன்னது தவறு என்று சொல்வதற்கு எப்படி உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறதோ, அதேபோல அதிகாரிகள் சொன்னது தவறு என்று சொல்ல ஒரு அவசியம் இருக்கிறது. ஆகவே முதலமைச்சர் அவர்கள் அவ்வளவு நீண்ட ஓர் அறிக்கையைப் படித்ததற்குப் பின்னர் ஒரு சிறு விளக்கம்கூட சொல்வதற்கு, பிரச்சினையை எழுப்பியவருக்கு வாய்ப்பு இல்லாமல் போவது நல்லது அல்ல. அதற்குத் தாங்கள் அனுமதி தரவில்லை என்று சொன்னால், இந்தப் பிரச்சினையை எழுப்பிய எங்களுடைய நோக்கமே, பொது நோக்கமே இதனாலே பாழ்பட்டுப் போகிறது. அந்த வருத்தத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை. கவன ஈர்ப்புத் தீர்மானம், சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பது அரசாங்கத்திற்கு ஒரு விவாதத்தைச் சொல்லி, அரசாங்கத்தினுடைய பதிலைப் பெறுவதுதானே தவிர, அதிலே தொடர்ந்து விவாதிப்பதற்கு ஒன்றும் இடம் கிடையாது. (குறுக்கீடுகள்) விவாதத்திற்கு ஒன்றும் அதிலே இடம் கிடையாது.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினிடத்திலே நல்ல எண்ணத்தோடு ஒரு பிரச்சினையைக் கொண்டுவந்து அதன் மூலமாக அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதறகு முயற்சிக்கிறோம். அதற்கு நேர்மாறான ஒரு கருத்து அரசாங்கம் சார்பாக, அதிகாரிகள் சார்பாகச் சொல்லப்படுகிறபோது விளக்கம் சொல்ல வாய்ப்பு இல்லை, என்றால், சட்டமன்றத்திலே உறுப்பினராக இருந்தும் பலன் இல்லாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. இதைத்தான் பேரவைத் தலைவர் அவர்கள் வலியுறுத்துகிறார்கள் என்று சொன்னால் நாங்கள் எங்களது கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஆகவே நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

## 4. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் பல்வேறு பிரச்சினைகளை இங்கே எழுப்பியிருக்கிறோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், நிகழ்ச்சிக்கு நடுவில நிற்கிறோம்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..** (மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் விளக்கமாகச் சொல்ல வேண்டும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. எஸ்.ஆர். பி. அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள்.*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *இல்லை, இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. பொதுப் பணித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5-11-2003 நிலவரப்படி... (குறுக்கீடு)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *நியாயம் இல்லை. முதலமைச்சர் அவர்கள் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். அதனால் சொல்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, இல்லை.*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.*



## 3. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

### பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டம், திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறந்து விடுதல்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மொத்தம, பரம்பிகுளம், ஆழியாறு திட்ட அணைகளினுடைய மொதத நீர், 30,156 மிலலியன் கன அடி (குறுக்கீடு) அந்த நீரின் உபயோகமான நீர் 22,500 மில்லியன் கன அடி (குறுக்கீடு) இன்றைய நீர் இருப்பு 5,672 மில்லியன் கன அடி. நாம் கேரளாவிற்குக் கொடுக்க வேண்டியது சோலையாறு அணையிலிருந்து 1,383 மில்லியன் கன அடி. (குறுக்கீடு)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *பேச அனுமதிக்காததைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.*

*(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மணக்கடவிலிருந்து நாம் கேரளாவிற்குக் கொடுக்க வேண்டியது 441 மில்லியன் கன அடி. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். நீங்கள் எல்லாம் உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *ஆக மொத்தம் கேரளாவிற்கு நாம் கொடுக்க வேண்டியது 1,824 மில்லியன் கன அடி.*

*ஆக இன்றைய நீர் இருப்பு 3,848 மில்லியன் கன அடி. தற்போது அணையினுடைய நீர் இருப்பினை கவனத்தில் எடுத்துக்கொண்டு, திருமூர்த்தி அணையில் இருந்து இரண்டு நனைப்பிற்காக, ஒரு நனைப்பிற்கு நாளொன்றுக்கு 1,520 கன அடி வீதம் 16 நாட்களுக்கும், தேவைப்படும்போது தொடர்ந்து 16 நாட்களுக்கும் ஆக மொத்தம் 3,040 மில்லியன கன அடி. முதல் மண்டலம் ஆழியாறு அணையிலிருந்து பொள்ளாச்சி வாய்க்கால், வேட்டைக்காரன் புதூர் வாய்க்கால் ஆழியார் ஊற்றுக் கால்வாய், சேத்துமடை வாய்க்கால் இரண்டு நனைப்பிற்காக தினமும் 400 மி. கன அடி வீதம்—800 மில்லியன் கன அடி வீதம் 32 நாட்களுக்கும் ஆக*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2003 நவம்பர் 6

மொத்தம் 3,840 மில்லியன் கன அடி தேவைப்படுகிறது. அதில் நீர் சேதாரம் 381 மில்லியன் கன அடி. ஆக மொத்தம் 4,224 மில்லியன் கன அடி இன்றைய நிலவரப்படி தேவைப்படுகிறது. நவம்பர், டிசம்பர் மாதங்களில் எதிர்பார்க்கப்படும் நீர் வரத்து 200 கன அடி என கொண்டால் எதிர்பார்க்கும் நீர் வரத்து 1,032 மில்லியன் கன அடி ஆகும். இன்றைய இருப்பு 3,818 மில்லியன் கன அடி. நவம்பர், டிசம்பர் மாதங்களில் எதிர்பார்க்கப்படும். நீரின் வரத்து 1,032 கன அடியாக இருந்தால் 1,850 மில்லியன் கன அடி வந்து சேருகின்றது. இந்த இரண்டு மண்டலங்களுக்கும் அதாவது, பரம்பிக்குளம்- ஆழியாறு திட்டத்தின் கீழ், இரண்டு மண்டலங்களுக்கும் சேர்த்து மொத்தமாக 4,224 மில்லியன் கன அடி தேவைப்படுகிறது. ஆகவே இன்றைய நீர் இருப்பின் அளவை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, முழுப் பயிர் காலத்திற்கும் நீர் விட போதுமானதாக இல்லை. எனினும், தற்போது இருப்பில் உள்ள நீர் அளவைக கவனத்தில் கொண்டும, மற்ற விவசாயிகளின் கோரிக்கையின்படியும், சிறப்பு நனைப்பாக முதலில் 16 நாட்களுக்கும், பிறகு தேவைப்படும்போது, இரண்டாம் நனைப்பாக 16 நாட்களுக்கும், ஆக மொத்தம் 32 நாட்களுக்கு தண்ணீர் வழங்க ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அதன்பின் வடகிழக்குப் பருவ மழை தீவிரமடைந்து அணையின் நீர் இருப்பு அதிகமாகும்போது, தொடர்ந்து பாசனத்திற்கு தண்ணீர் வழங்குவது குறித்து ஆராய்ந்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன். அவரை திரு. எஸ்.ஆர்.பி. அழைத்துச் சென்றுவிட்ட காரணத்தால் போய்விட்டார்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள், அளித்தல், திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினுடைய 179 முதல் 187 வரையிலான ஒன்பது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.



2003 நவம்பர் 6]

### (ஆ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல், திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 22-வது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 33 முதல் 42 வரையிலான 10 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**THIRU J. HEMACHANDRAN:** I vehemently oppose.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அறிமுக நிலையிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு வரம்பிகந்த அளவில் வட்டி விதிக்கப்படுவதைத் தடை செய்தல் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரம்பிகந்த அளவில் வட்டி விதிக்கப்படுவதைத் தடை செய்தல் சட்டமுன்வடிவு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரம்பிகந்த அளவில் வட்டி விதிக்கப்படுவதைத் தடை செய்தல் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர்-தீர்வை (திருத்த) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர்-தீர்வை (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர்-தீர்வை (திருத்த) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர்-தீர்வை (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை & வருவாய்த் துறை அமைசசர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றுட் கூடுதல் தண்ணீர்-தீர்வை (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஈ) தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவினைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஊ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு போரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





### (எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழநாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2003-2004, மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003-2004 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:—

"In pursuance of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly the Demands for further grants for the year 2003-2004".

[2003 நவம்பர் 6

# 8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும்—வாக்கெடுப்பும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கைமீது விவாதமும் வாக்கெடுப்பும். மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"2003-2004 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 3-11-2003 ஆம் தேதியிடப் பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2003-2004 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 113, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீதித் துறையில் காலியாக உள்ள பணியாளர்களை நிரப்பிட வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,08,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 452, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில் மகளிர் நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,08,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்"



2003 நவம்பர் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 689, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தலித் மற்றும் பழங்குடியினர் நல அமைப்பு சீராக செயல்படுவதை உறுதி செய்ய அனைத்துக் கட்சியாளரும் கொண்ட குழு அமைக்கப்படுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,14,34,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானமும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. பேரவை விதிகளின்படி இன்று விவாதமும், பதிலுரையும் சரியாக 1-30 மணிக்குள் முடிக்கப்பட்டு துணை மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்பிற்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும். இதை மனதில் கொண்டு உரை நிகழ்த்துகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், அளிக்கப்பட்ட கால அளவிற்குள் தங்களது உரையை அமைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. ஹேமச்சந்திரன் அவர்களை முழங்குமாறு அழைக்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கைகளில் பிரதானமான வறட்சி சம்பந்தமாக ஏற்பட்ட நிலையை சரிபண்ணுவதற்கு அரசால் செலவு செய்யப்பட்ட பணம் என்ற முறையில் சில அறிவிப்புகள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், சென்ற ஆறு மாத காலத்திலே, தமிழகத்திலே இருக்கிற மக்கள் தாங்க முடியாத துயரங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நாடு நன்கு அறியும். கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு நிலை உருவாவதற்குக் காரணம், தமிழக அரசினுடைய தவறான கொள்கைகளும், தவறான அணுகுமுறைகளும் என்பது எங்களுடைய கருத்து. அண்டை மாநிலமான கர்நாடக அரசோடு பேசி நமக்குத் தேவையான தண்ணீரை காவிரி நதியிலிருந்து பெற வேண்டுமென்று இந்த அவையிலேயே எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிறவர்களெல்லாம் வலியுறுத்தினோம்.

ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திட்டத் தெளிவாகச் சொன்னார்கள்; நாங்கள் கர்நாடக மாநில அரசோடு பேசுவதாக இல்லை என்று. அதன் காரணமாக கர்நாடக மாநிலத்தை அணுகி தண்ணீர் பெறுவதற்கான வாய்ப்பை நாம் இழந்துவிட்டோம். அதற்குப் பிறகு யாரை நம்பி தமிழக அரசு அந்த நிலையை எடுத்துக் கொண்டார்கள் என்று நாங்கள் கருதுகிறோம் என்றால், மத்திய அரசை நம்பி அப்படிப்பட்ட ஒரு நிலையை எடுத்தார்கள். ஆனால் மத்திய அரசு ஆதரவு கொடுத்தார்களா? வாஜ்பாயி அவர்களுடைய அரசு இதுசம்பந்தமாக கர்நாடக அரசு பிரதிநிதிகளையும் தமிழகத்தினுடைய பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசி, ஒரு நல்ல தீர்வு, தமிழகத்திலே இருக்கிற விவசாயிகளுக்கு ஏற்படுததிக கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்தார்களா? நாங்கள் ஏற்கெனவே இந்த அவையிலே பேசுகின்ற நேரத்திலே திட்டத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். காவிரி நதியிலே உள்ள தண்ணீரை, தமிழக மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு தமிழக அரசுக்கு எந்த அளவுக்குப் பொறுப்பு இருக்கிறதோ, அந்த அளவுக்கு மத்திய அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது. ஆனால் மத்தியிலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்துகொண்டிருக்கிற பி.ஜே.பி. தலைமையிலுள்ள தேசிய ஜனநாயக முன்னணியிலுள்ள அரசு அதைக் கண்டுகொள்ளாமல் இருந்துகொண்டிருக்கிறது. அப்படி மத்திய, மாநில அரசுகளுடைய தவறான அணுகுமுறை காரணமாக, தவறான நடவடிக்கை காரணமாக, தமிழகத்திலே பல இலட்சக்கணக்கிலே உள்ள விவசாயிகள் இன்றைக்கு கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது எங்களுடைய குற்றச்சாட்டு.

பிற்பகல் 11-50

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் அபாண்டமான குற்றச்சாட்டுகளைச் சொல்லி, இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். மாநில அரசின் தவறான அணுகுமுறையின் காரணமாகத்தான் காவிரி நீரில் நமக்குக் உரிய பங்கு நமக்குக் கிடைக்கவில்லை என்பது சரியில்லாத, தவறான குற்றச்சாட்டு. மத்திய அரசை நம்பித்தான் கர்நாடக அரசோடு தமிழக அரசு பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்கிறார்; இதுவும் அர்த்தமற்ற ஒரு குற்றச்சாட்டு. ஏற்கெனவே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் பல முறை - அவர் முதலமைச்சராக இருந்தபோது - கர்நாடக முதலமைச்சரோடு பல சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்தினார். அதனால் எந்தப் பயனும் இல்லை. அதன்பிறகு, கடந்த முறை, 1996 முதல் 2001



வரை தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, அன்றைய முதலமைச்சர் கருணாநிதி, பல முறை கர்நாடக முதலமைச்சரோடு பெங்களூருக்கே சென்று பேச்சுவார்த்தை நடத்தினார். அதனால் எவ்விதப் பயனும் இல்லை. அதன்பிறகுதான், பேச்சுவார்த்தை நடத்துவதில் எந்தப் பயனும் இல்லை என்பதில் தமிழக அரசு உறுதியான ஒரு முடிவு எடுத்தது.

அதுமட்டுமல்ல. சில உண்மைகளை நான் நினைவூட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே தமிழக அரசின் வழக்கு, காவிரி நதிநீர் தாவா, Tribunal முன் இருக்கிறது. Tribunal இடைக்கால தீர்ப்பை அளித்ததே தவிர, இன்னும் இறுதித் தீர்ப்பை அளிக்கவில்லை. Tribunal முன்பு வழக்கு இருக்கிறது; நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. பலமுறை நீதியைப் பெறுவதற்கு, நம்முடைய உரிய பங்கை காவிரி நீரில் பெறுவதற்கு, நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, உச்ச நீதிமன்றத்தை அணுகினோம். ஆனால் உச்ச நீதிமன்றம் திரும்பத் திரும்ப, நாம் உச்ச நீதிமன்றத்தை அணுகும்போதெல்லாம், நீங்கள், Cauvery River Authority—காவிரி நதிநீர் ஆணையத்திடம்தான் செல்ல வேண்டும் என்று திரும்பத் திரும்ப தமிழக அரசை அங்கே திருப்பிவிட்டது. Cauvery River Authority கூட்டங்கள் பிரதமருடைய தலைமையில் நடைபெற்றன. ஆனால் காவிரி நதிநீர் ஆணையம்-Cauvery River Authority கொடுத்த உத்தரவின் பேரில் ஒரு முறைகூட கர்நாடக அரசு அந்த உத்தரவை மதித்து, அதன்படி தண்ணீரைத் திறந்துவிடவில்லை. உச்ச நீதிமன்றமும் சில ஆணைகளை வழங்கியது. அவ்வப்போது நாங்கள் - தமிழக அரசு - உச்ச நீதிமன்றத்தை அணுகியபோதெல்லாம், குறிப்பிட்ட அளவு தண்ணீரை, குறிப்பிட்ட நாட்களுக்குத் திறந்துவிட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம வழங்கிய ஆணைகளையும் கர்நாடக அரசு மதிக்கவில்லை. இவ்வாறு Tribunal 1991-ல் வழங்கிய இடைக்கால ஆணையை இன்று வரை கர்நாடக அரசு மதிக்கவில்லை; மதித்துச் செயல்படவில்லை. அந்த இடைக்கால ஆணையின்படி ஒவ்வொரு ஆண்டும் கர்நாடகம் தமிழகத்திற்கு காவிரியில் 205 டி.எம்.சி. அடி தண்ணீரைத் திறந்துவிட வேண்டும். ஆனால் இன்று வரை ஒரு முறைகூட அதை முழுமையாக கர்நாடக அரசு நிறைவேற்றவில்லை. இவ்வாறாக இதற்காகவே அமைக்கப்பட்ட Tribunal இடைக்காலத் தீர்ப்பு வழங்கிய பின்னரும், இடைக்கால ஆணை வழங்கிய பின்னரும் அதையும் கர்நாடக அரசு மதித்துச் செயல்படுத்தவில்லை. உச்ச நீதிமன்றம் வழங்கிய ஆணைகளையும் கர்நாடக அரசு மதித்துச் செயல்படுத்தவில்லை. உச்ச நீதிமன்றத்தின் ஆணைப்படி அமைக்கப்பட்ட Cauvery River Authority வழங்கிய உத்தரவுகளையும் கர்நாடக அரசு மதித்துச் செயல்படுத்தவில்லை. கர்நாடக அரசு இப்படி இந்திய அரசியல்

சாசனப்படி என்னென்ன அதிகாரங்கள், எந்தெந்த அமைப்புகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறதோ எந்த ஒரு Authority-யையும் எந்த ஒரு அதிகாரத்தையும் மதிக்காமல் அவர்கள் தன்னிச்சையாக நடந்துகொண்டிருக்கும்போது தமிழக அரசு கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதால் என்ன பயன் ஏற்படப் போகிறது? ஆகவே உச்ச நீதிமன்றத்திற்கே சென்றோம். Cauvery River Authority-க்கும் சென்றோம். ஆனால் இதுவரை உச்ச நீதிமன்றமும், Cauvery River Authority-யும் வழங்கிய எந்த ஒரு உத்தரவையும், ஆணையையும் கர்நாடக அரசு மதித்துச் செயல்படுத்தவில்லை. கடந்த 6 மாத காலமாக மக்கள் பெரும் துயரத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு மாநில அரசுதான் காரணம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் பேசியது பொருத்தமற்ற, அபாண்டமான குற்றச்சாட்டு ஆகும்.

முற்பகல் 11-55

மழை பெய்யவில்லை என்றால் அதற்கு மாநில அரசா பொறுப்பு? வறட்சி நிவாரணத்திற்காக என்னென்ன செய்ய முடியுமோ, எவ்வளவு செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் வாரி வாரி வழங்கி இருக்கிறோம். மக்களுடைய துயர் துடைக்க என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்பதை பலமுறை இந்த அவையிலேயே பட்டியல் போட்டுச் சொல்லி இருக்கிறோம். அவற்றுக்குள்ளே நான் மீண்டும் செல்ல விரும்பவில்லை. காரணம், விவசாயிகளின் துயர் துடைக்க இந்த அரசு எவ்வளவு அக்கறையுடன் உதவிக்கரம் நீட்டியிருக்கிறது என்பது விவசாயிகளுக்குத் தெரியும். பொதுமக்களுக்குத் தெரியும். ஆகவே இப்போதுகூட காவிரியில் நமக்கு உரிய பங்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக Cauvery River Authority meeting-ஐக் கூட்ட வேண்டும் என்று நான் ஏற்கெனவே பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்துக் கடிதம் அனுப்பியிருக்கிறேன். என் கடிதம் கிடைக்கப் பெற்றது என்று பிரதமரிடமிருந்து பதிலும் வந்துவிட்டது. ஆனால் இன்று வரை அந்தக் கூட்டத்தைப் பிரதமர் கூட்டவில்லை. ஆகவே இது மத்திய அரசின் தவறான அணுகுமுறை என்று வேண்டுமானாலும் சொல்லலாமே தவிர, மாநில அரசின் தவறான அணுகுமுறை என்று சொல்லுவதே தவறு. இது அபாண்டமான, ஏற்க முடியாத ஒரு குற்றச்சாட்டு ஆகும். ஏதோ மத்திய அரசின்மீது நம்பிக்கை வைத்துத்தான் மாநில அரசு அலட்சியமாக இருக்கிறது என்பதுபோல மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் பேசுவதை ஏற்க முடியாது. நான் இந்தக் காவிரி நதிநீர்ப் பிரச்சினையில்



அவ்வளவு கடுமையாக மத்திய அரசைச் சாடியிருக்கிறேன். அவ்வளவு கடுமையாக பிரதமரையும் பேசி இருக்கிறேன். அதற்கு உச்ச நீதிமன்றமே இப்படி எல்லாம் பேசக்கூடாது என்று எனக்குக் கண்டனம் தெரிவித்து இருக்கிறது. கண்டனம் இல்லை. ஒரு stricture- ஒரு comment pass செய்திருக்கிறார்கள், உச்சநீதிமன்றத்தில். ஆகவே இப்பொழுதும் சொல்கிறேன் தனிப்பட்ட முறையில் நான் யாரையும் எதுவும் பேசவில்லை. தமிழக மக்களுக்கு, குறிப்பாக டெல்டா பகுதியில், காவிரி டெல்டா பகுதியில் விவசாயிகளுக்கு நமக்குரிய பங்கைப் பெற்றாக வேண்டும் என்பதற்காகத்தான் அவ்வளவு கடுமையாக நான் போராடினேன். அதற்கு உச்ச நீதிமன்றமே இப்படி எல்லாம் பேசக்கூடாது என்று கூட கூறியது. ஆகவே ஏதோ மத்திய அரசை திருப்திபடுத்த வேண்டும் என்பதற்காக மத்திய அரசை நம்பி தமிழக அரசு பாராமுகமாக இருக்கிறது என்று சொல்வதெல்லாம் தவறு.

இன்னொன்றையும் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன. அதை மீண்டும் சொல்வதில் தவறில்லை என்பதால், அப்படிச் சொன்னால் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் போன்றவர்களுக்குப் புரியும் என்பதால் மீண்டும் நான் அதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். தொடர்ந்து காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் தமிழகத்திற்கு அநீதி இழைக்கப்பட்டு வருகிறது. அதற்கு என்ன காரணம் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். மத்தியிலே காங்கிரஸ் ஆட்சியில் இருந்தாலும் சரி, ஜனதா தள் தலைமையில் ஒரு கூட்டணி ஆட்சி அங்கே ஆட்சி செய்தாலும் சரி அல்லது இப்போது பி.ஜே.பி. தலைமையில் ஒரு கூட்டணி அரசு ஆட்சி செய்தாலும் சரி, அவர்களுக்கெல்லாம் கர்நாடகத்தில் அரசியல் ரீதியாக ஒரு base இருக்கிறது. Political stakes இருக்கின்றன. அங்கே அவர்களுக்கு ஒரு ஓட்டு வங்கி இருக்கிறது. அதனால் கர்நாடக மாநிலத்திலுள்ள வாக்காளர்களை பகைத்துக்கொள்ளக் கூடாது என்று காங்கிரஸும் நினைக்கிறது. பி.ஜே.பி.-யும் நினைக்கிறது. ஜனதா தள்ளும் நினைக்கிறது. அதனால்தான் தொடர்ந்து காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது யார் பிரதமராக இருந்தாலும் தமிழகத்திற்கு நீதி கிடைக்கவில்லை. முன்பு ஜனதா தள் தலைமையில் திரு. தேவேகவுடா தலைமையில் அவர் பிரதமராக இருந்தபோது ஒரு மத்திய அரசு அமைந்தது. அப்போதும் தமிழகத்திற்கு நீதி கிடைக்கவில்லை. அதன் பிறகு பி.ஜே.பி. தலைமையில் ஒரு கூட்டணி ஆட்சி அமைந்திருக்கிறது மத்தியிலே. இப்போதும் தமிழகத்திற்கு நீதி

கிடைக்கவில்லை. ஏன்? காங்கிரஸானாலும் சரி, பி.ஜே.பி.யானாலும் சரி, ஜனதா தள் ஆனாலும் சரி, எந்தக் காலத்திலும் தமிழகத்தில் அவர்கள் ஆட்சியைப் பிடிக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

*நண்பகல் 12-00*

காவிரிப் பிரச்சினையில் தொடர்ந்து தமிழக மக்களை, குறிப்பாக தமிழக விவசாயப் பெருங்குடி மக்களை வஞ்சித்து வருகின்ற காங்கிரஸ் கட்சியானாலும், பி.ஜே.பி. கட்சியானாலும், ஜனதா தள் கட்சியானாலும் எந்தக் காலத்திலும் அவர்கள் தமிழக மக்களின் வாக்குகளைப் பெற முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் அவர்கள் தமிழகத்தை வஞ்சிக்கிறார்கள். அதனால்தான் தமிழகத்திற்கு அவர்கள் அநீதி இழைக்கிறார்கள் என்பதை மீண்டும் சொல்லியிருக்கிறேன், இப்போதும் அதை வலியுறுத்திச் சொல்கிறேன். ஆகவே மத்திய அரசை திருப்திபடுத்துவதற்காக தமிழக அரசு அலட்சியமாக இருக்கிறது என்பதை மட்டும் மீண்டும் சொல்லாதீர்கள். அதனால்தான் சொல்கிறேன். ஒரு புதிய ஆட்சி மத்தியிலே அமைய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் தலைமை ஏற்காத, பி.ஜே.பி. தலைமை ஏற்காத, ஜனதா தள் தலைமை ஏற்காத ஒரு புதிய மத்திய அரசு உருவாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையிலேயே தமிழக விவசாயிகளுக்கு, குறிப்பாக, காவிரி டெல்டா விவசாயிகளுக்கு நீதி கிடைக்க வேண்டுமானால், காவிரியில் தமிழகத்திற்கு உரிய பங்கு கிடைக்க வேண்டுமானால், மாண்புமிகு ஹேமச்சந்திரன் சார்ந்திருக்கின்ற கட்சி போன்ற கட்சிகள் எல்லாம் இதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) நமக்கு நீதி கிடைக்கும்படியாக, நம்முடைய குரலை மதிக்கின்ற ஒரு அரசு அங்கே அமைவதற்கு நீங்கள் எல்லாம் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே மீண்டும் சொல்கிறேன், தமிழ்நாட்டிற்கு காவிரி நதி நீரில் உரிய பங்கு கிடைக்கவில்லையென்றால் அது இந்த மாநில அரசின் குற்றமல்ல. என்னென்ன முயற்சிகள் எடுக்க முடியுமோ, எப்படியெல்லாம் அதற்குப் போராட முடியுமோ அதைச் செய்திருக்கிறோம், தொடர்ந்து செய்துகொண்டே இருக்கின்றோம். ஆனால் இதுதான் இதற்கு நிரந்தர தீர்வு; மத்தியிலே ஆளுகின்றவர்கள் மாற வேண்டும். தமிழகத்தின் குரல் அங்கே ஓங்கி ஒலிக்க வேண்டும். அப்போதுதான் நமக்கு நீதி கிடைக்கும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு வகையில் இவ்வளவு விவரங்களை வெளிக்கொணர வைத்ததற்காக திரு. ஹேமச்சந்திரனுக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்பினேன். அதை இப்போது சொல்லிவிடுகிறேன். நான் ஏற்கெனவே சொன்னேன். காங்கிரஸானாலும் சரி, பி.ஜே.பி.யானாலும் சரி, ஜனதா தள் ஆனாலும் சரி, எந்தக் காலத்திலும் தமிழக விவசாயிகளை வஞ்சிக்கும் இந்தக் கட்சிகள் தமிழகத்தில் ஆட்சிக்கு வர முடியாது. தமிழக விவசாயிகளின், தமிழக பொதுமக்களின் வாக்குகளைப் பெற முடியாது என்று சொன்னேன். ஆனால் அவர்களுக்கெல்லாம் கர்நாடக மாநிலத்தில் வலுவான ஒரு அரசியல் அஸ்திவாரம் இருக்கிறது. அங்கே அவர்களுக்கு ஓட்டு வங்கி இருக்கிறது. தேர்தல்கள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன. அதனால்தான் பி.ஜே.பி. கட்சியானாலும் சரி, காங்கிரஸ் கட்சியானாலும் சரி, ஜனதா தள் கட்சியானாலும் சரி, கர்நாடக மாநிலத்தில் ஆட்சிக்கு வர வேண்டும் என்று அவர்கள் ஆசைப்படுகிறார்கள். வரப் போகின்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தல்களிலும் கணிசமான இடங்களை அங்கே பெற வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள்.

அதனால்தான் காவிரி நதிநீரில் நமக்கு உரிய பங்கைக் கொடுத்துவிட்டால், கர்நாடகத்தில் எங்கே அவர்களுக்கு தேர்தலில் வாய்ப்புகள் பாதிக்கப்பட்டுவிடுமோ என்பதற்காகத்தான் தமிழ்நாட்டை வஞ்சித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொடர்ந்து தமிழகத்தை காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் வஞ்சித்துக்கொண்டிருக்கிற பி.ஜே.பி.யும் சரி, ஜனதா தள்ளும் சரி, காங்கிரஸும் சரி, தேர்தல் நேரத்தில் இங்கே வந்து ஓட்டு கேட்டால் தமிழக மக்கள் குறிப்பாக, டெல்டா பகுதியில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் அவர்களை விரட்டியடிப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காவிரி பிரச்சினையைப் பொறுத்த அளவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியினை தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மக்களும் உணர்வார்கள். அவர்கள் உச்ச நீதிமன்றத்திலே சென்று ஆணையைப் பெற்று, அப்பாதுயிருந்துங்கூட, அவர்கள் உரிய தண்ணீரை (குறுக்கீடு)...

பிற்பகல் 12-05

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அவர் கருத்தை அவர் பேசும்போது சொல்லட்டும்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை, இல்லை, ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன். நான் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு கருத்தை மட்டும்தான் சொல்கிறார். அவர் பேசவில்லை.

**திரு. லா. சந்தானம்:** ஆணை பெற்றும், தண்ணீர் வழங்கவில்லை என்கின்ற நிலைதான் உண்மையான நிலை. முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, கர்நாடகத்தைப் பொறுத்த அளவிலே அங்கே இருக்கிற அத்தனை கட்சிகளும் அவர்கள் மாநிலத்தினுடைய பிரச்சினை என்று வருகின்றபோது ஒட்டுமொத்தமாக குரல் கொடுக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, இங்கே இருக்கின்ற அரசியல் கட்சிகள் மத்திய அரசிலே பங்கு பெற்றிருந்தாலும்கூட அங்கு இருக்கிற மத்திய அரசை, பிரதமரை வலியுறுத்தி, தமிழகத்தினுடைய காவிரிப் பகுதி விவசாயிகளினுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், தண்ணீர் பெறுவதில் முனைப்பைக் காட்டுவதைக் காட்டிலும், தமிழக அரசைக் குறை சொல்வதிலேயே தங்களுடைய முனைப்பைக் காட்டுகிறார்கள் என்கின்ற நிலையிலேதான் தமிழகம் புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்கின்ற உண்மையான நிலை இருக்கிறது. இன்றைக்கு நமது முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் மத்திய ஆட்சியை நிர்ணயிக்கின்ற நிலைமை தமிழகத்தின் முதலமைச்சருக்கு இருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) கொல்கத்தாவிலிருந்து வெளி வருகின்ற The Telegraph என்ற ஆங்கில பத்திரிகை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. 2004 பாராளுமன்றத் தேர்தலில் ஆட்சியை நிர்ணயிக்கும் முக்கிய தலைவர்கள் - அதிலே நமது தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் மிகப் பெரிய பங்கினை வகிக்கிறார்கள் என்கின்ற நிலையை எடுத்துச் சொல்லியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)



அவர்களுடைய எண்ணத்தையும் இங்கு வெளியிட்டிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்த அளவிலே நாங்கள் இந்த நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து பார்வேர்டு பிளாக் இயக்கத்தைச் சார்ந்தவர்கள். காங்கிரஸும் இந்த நாட்டுக்கு பல்வேறு துரோகங்கள் செய்து இருக்கிறது. அதேபோல பாரதிய ஜனதாவும் ஒரு மதச் சார்புள்ள கட்சி என்கின்ற நிலையில், கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலே, பாரதிய ஜனதா ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு வாக்களித்த கட்சி பார்வேர்டு பிளாக் கட்சி. அதோடு, காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைப்பதற்கு இடது சாரி கட்சிகளாக இருக்கின்ற இடது கம்யூனிஸ்டு, வலது கம்யூனிஸ்டு கட்சிகள் எங்களைக் கேட்டுக்கொண்டும்கூட, நாங்கள்தான் காங்கிரஸ் ஆட்சி அமைப்பதற்கு முழுமையாக மறுப்பு தெரிவித்தவர்கள். ஆர்எஸ்பி. கட்சியைச் சேர்ந்தவர்களும், பார்வேர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் மறுப்பு தெரிவித்ததன் காரணமாகத்தான், காங்கிரஸ் ஆட்சி அமையவில்லை என்பது இந்த நாடு அறிந்த உண்மை. எனவே, வருகின்ற காலத்தில் இரண்டையும் புறக்கணித்து ஒரு ஆட்சியை இந்த நாட்டுக்கு ஒரு நல்லாட்சி அமைக்க வேண்டுமென்று நினைக்கின்ற நமது முதலமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாக இடதுசாரி கட்சிகள் ஆதரவு தரவேண்டுமென்பதுதான் என்னுடைய முழுமையான கருத்து என்பதைக் கூறி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட விளக்கத்தைச் சொன்னார். இது புதிய விளக்கம் அல்ல. ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இதே கருத்தை பலமுறை பேசியிருக்கிறார். Opinions may differ—ஆனால் எங்களுடைய கேள்வி, what is the net result? அந்த இடத்தில்தான் நாங்கள் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறோம். அதாவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதனாலே நாங்களும் சில விஷயங்களைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். சென்ற சட்டமன்றத் தேர்தலிலே நாங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கட்சியோடு இணைந்து மக்களிடம் போய், இன்றைக்கு தமிழக மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற பாதிப்புகளுக்கு பி.ஜே.பி. அல்லாத, காங்கிரஸ் அல்லாத ஒரு அரசு உருவாக வேண்டுமென்று மக்களிடம் போய் ஓட்டு கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கட்சி, அந்த அணியினுடைய பிரதான கட்சியாக இருந்ததன் காரணமாக, மக்கள் அவர்களுக்குத் தனிப் பெரும்பான்மை ஏற்படுத்திக் கொடுத்ததன் காரணமாக, [illegible] யிலே வந்தது. நாங்கள் எல்லாம் இன்றைக்கு மகிழ் [illegible] அந்த மகிழ்ச்சியைப் பார்க்க

[illegible stamp]

முடியவில்லையே. அதற்குத்தான் சில காரணங்களை விளக்குவதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஒரு தாழ்மையான வேண்டுகோள். முதலமைச்சர் அவர்கள் இதைச் சொன்னதன் காரணமாக நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு எனக்குப் போதுமான நேரம் தரவேண்டும். அதாவது, எங்களுடைய கட்சி, மாற்றுக் கட்சிகள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற மாநிலங்களிலேயும், அந்த அரசுகளோடு மக்களுடைய பிரச்சினைகள் பற்றிப் பேசி தீர்வு காணுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு கட்சி. அந்த முறையிலே உள்ள ஒரு கட்சி. ஆகவேதான், கர்நாடக அரசு.....

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு ஹேமச்சந்திரன், இல்லை, இதுபற்றி, காவிரிப் பிரச்சினை குறித்து முதலமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தை, உரிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். மறுபடியும் அதை விவாதப் பொருளாக்க வேண்டாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் அந்த விஷயத்திற்குப் போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த பிரச்சினை வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இன்று முதலமைச்சர் அவர்களால் ஒரு பிரதான அரசியல் பிரச்சினைபற்றி இங்கே அவை வழியாக இந்த நாட்டுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, காங்கிரஸ் அல்லாத, பி.ஜே.பி. அல்லாத ஒரு அரசு ஆட்சிப் பொறுப்பிலே வருவதற்கு ஹேமச்சந்திரனுடைய கட்சியும் ஒத்துழைக்க வேண்டும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இதுபற்றி நான் சொல்வதற்குக் கடமைபபட்டிருக்கிறேன். ஆகவே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இன்று மத்திய அரசினுடைய மக்கள் விரோதக் கொள்கை என்று நாங்கள் சொல்கிற globalisation and liberalisation, அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் காரணமாகத்தான், தமிழகத்து மக்களுக்குத் தேவையான நிவாரணத்தைக்கூட, வறட்சி நிவாரணத்தைக்கூட, மத்திய அரசு நமக்குத் தரவில்லை. நான் தமிழக அரசை மட்டும் சொல்லவில்லை. நான் ஏற்கெனவே இந்த அவையிலே பேசிய நேரத்திலே, அதாவது, முதலமைச்சர் கட்சியிலேயிருந்து, சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருப்பவர்கள் அல்லது எங்களைப் போன்றவர்கள் வாங்கியிருப்பதைப் போன்று, ஒரு ஓட்டு நாங்கள் வாங்கியிருந்தால் அல்லது நாம் வாங்கியிருந்தால்—ஒரு ஓட்டு அவர்கள்



வாங்கியிருக்கிறார்கள்; மத்திய அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரு ஓட்டு வாங்கியிருக்கிறார்கள். இன்றைக்குப் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சியினுடைய தலைமையிலே இருக்கிற பாரதிய ஜனதா கட்சியினுடைய தலைமையில் உள்ள தேசிய ஜனநாயக முன்னணி அரசு தமிழகத்தைப் புறக்கணித்துக்கொண்டிருக்கிறது என்பது மட்டுமல்ல. அதிலே அங்கம் வகிக்கிற, இங்கே இந்த அவையிலே இருக்கிற பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியும், அதிலே ஏனோதானோ என்ற முறையிலேதான் விஷயங்களை அணுகுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை நாங்கள் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஒன்றை இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நாம் அன்றைக்கு சட்டமன்றத் தேர்தல் வந்த நேரத்திலே, மக்களுக்குக் கொடுத்த பிரதானமான வாக்குறுதிகளை அதாவது— மத்திய அரசு பின்பற்றிக்கொண்டிருக்கிற தாராளமயம், உலகமயம் என்ற கொள்கை இன்று தமிழக அரசினால் மத்திய அரசினுடைய நிர்பந்தத்திற்குப் பணிந்து அமல்படுத்தப்படுகிறதா, இல்லையா?

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களுடைய கற்பனை. மேற்கு வங்க அரசு W.T.O குறித்து எத்தகைய நடைமுறைகளை, கொள்கைகளைக் கடைப்பிடிக்கிறதோ, அதைத்தான் இங்கும் தமிழகத்தில் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் அரசும் கடைப்பிடிக்கிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொச்சைப்படுத்துவதற்காக வேண்டி சொல்லவில்லை. இன்று சீமச்சாராயக் கடையையும், மணல் வாருவதையும் நாட்டுடைமை ஆக்குவதற்குத் துடிக்கிற தமிழக அரசு இன்றைக்கு கூட்டுறவு நூற்பாலைகளையும், அதேபோல் போக்குவரத்துத் துறையையும், பல ஆண்டுகளாக மக்கள் பயன் பெற்றுக்கொண்டிருக்கிற துறைகளையும் தனியாருக்குத் தாரை வார்க்கத் துடித்துக்கொண்டிருக்கிறது. இது மக்களைப் பாதுகாக்குமா? இது எதன் காரணமாக?

[2003 நவம்பர் 6

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோவியத் நாடும், பிற உலக கம்யூனிஸ்ட் நாடுகள் எல்லாம் கம்யூனிஸ்ட் தத்துவத்தை விட்டுவிட்டு முதலாளித்துவ தத்துவத்திற்குச் சென்றுவிட்டார்கள்; குழப்பத்தில் உள்ளார்கள். இங்கே இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சிகளும் இத்தகைய குழப்பத்திற்குத் தங்களை ஆளாக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது.

மேற்கு வங்க அரசைப் பொறுத்தவரைக்கும், நஷ்டத்திலே தொடர்ந்து இயங்குகிற ஆலைகளைத் தனியாருக்குக் கொடுக்க கொள்கை முடிவு எடுத்து, சிலவற்றை நடைமுறைப்படுத்திவிட்ட உண்மையும் உங்களுக்குத் தெரியும். இங்கு நீங்கள் போக்குவரத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள். மேற்கு வங்கத்திலே போக்குவரத்துத் துறையை தனியார்வசம் ஒப்படைத்துவிட்டு, தனியார் முதலாளித்துவக் கொள்கைக்கு அங்கு ஊக்கத்தைத் தந்துவிட்டு பேசுகிறீர்கள். இங்கே நாங்கள் நடவடிக்கையை இன்னும் எடுக்கவில்லை. எந்தப் போக்குவரத்துக் கழகத்தையும் நாட்டுடைமை ஆக்குவோம் என்று நாங்கள் சொல்லவில்லை. (குறுக்கீடு) நட்டத்தில் இயங்குகின்ற எந்தப் போக்குவரத்துக் கழகத்தையும் தனியார்மயம் ஆக்குவோம் என்று எந்தக் காலத்திலும் இந்த அரசு சொல்லவில்லை; கற்பனையில் கூறுகிறீர்கள். இத்தகைய தனியார்மயக் கொள்கை, மேற்கு வங்கத்தில் உங்கள் இயக்கத்தில்தான் அதிகம் இருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும்; ஒத்துக்கொள்ள வேண்டும்; உங்கள் கொள்கையை நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டும்.

*பிற்பகல் 12-15*

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிவிடட்டும்.

**செல்வி க. பாலபாரதி:** ஒரே செகண்ட். உணவுப் பொருளுக்கான மானியம் நிறுத்தப்பட வேண்டும் என்பது உலக வங்கியினுடைய நிபந்தனைகளில் ஒன்று. மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. மேற்கு வங்க அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கிறது. இன்னும் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடவில்லை. தமிழக அரசாங்கம் ஏற்றுக்கொண்டதனால்தான் 1,510 கோடி ரூபாயிலிருந்து நீங்கள் 600 கோடி ரூபாயாகக் குறைத்திருக்கிறீர்கள். ஆகவேதான் உலகமயம், தனியார்மயம் என்று மத்திய அரசு ஏற்றுக்கொண்ட கொள்கையை தமிழக அ.தி.மு.க. அரசாங்கமும் நடைமுறைப்படுத்துகிறது என்ற குற்றச்சாட்டை தோழர் ஜே.எச். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.



2003 நவம்பர் 6]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மானியத்தை ரத்து செய்வோம் என்று எந்தக் காலத்திலும் நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. மாண்புமிகு உறுப்பினர் தொடர்ந்து குழப்பத்தில் அரசுக்குத் தவறான தகவலை இரு தினங்களாகக் கூறிக்கொண்டே இருக்கிறார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் விவரங்களை சரியாகப் படித்துவிட்டு இங்கே வந்து அவையில் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர் தொடர்ந்து தவறான தகவல்களையே இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார். உலக வங்கியோடு, உணவு தானியங்களுக்கு, குறிப்பாக அரிசிக்கு கொடுக்கப்படுகின்ற மானியத்தை ரத்து செய்வோம் என்று எந்த ஒப்பந்தத்திலும் மாநில அரசு கையெழுத்திடவில்லை. இப்போதுகூட மானிய விலையில்தான் ரூ.3.50 என்ற விலையில் அரிசியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.—ரேஷன் கடைகளில்.— நேற்றுதான இந்த அவையில் விளக்கமாகச் சொன்னேன். மத்திய அரசு அதிக விலைக்கு ரேஷன் அரிசியைக் கொடுக்கிறது. அதை அதிக விலைக்கு வாங்கி மானிய விலையில் குறைந்த விலைக்கு கிலோ ரூ.3.50 என்ற விலையில் இங்கே கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்போதுகூட தமிழக அரசுக்கு ஆண்டுக்கு 800 கோடி ரூபாய் மானிய சுமை ஏற்படுகிறது என்பதை நேற்றுதான் சொன்னேன். ஆகவே இது தவறான, உண்மையற்ற குற்றச்சாட்டு.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி வேறு வரப்போவதாக தகவல் கிடைத்திருக்கிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதுவெல்லாம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 5 மணித்துளிகள், பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நீங்கள்தான் முதலமைச்சர் அவர்களுக்கு விளக்கம் கொடுப்பதற்கு சந்தர்ப்பம் கொடுத்து, சில முக்கியமான அரசியல் பிரச்சினைகளையே எங்களுக்கு எதிராகப் போட்டுவிட்டு, அதற்குப் பதில் சொல்வதற்கு சந்தர்ப்பம் தர மாட்டேன்கள் என்றால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 5 மணித்துளிகள், பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சோவியத் யூனியனிலோ அல்லது மற்ற நாடுகளிலோ சோஷலிசத்திற்கு பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது என்றாலும், இன்று அந்த நாடுகள் திரும்ப கம்யூனிஸத்தினுடைய பாதைக்கே சென்றுகொண்டிருக்கின்றன என்பது வரலாறு. அதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எங்களுடைய கட்சி, அவர்களோடு— ஒத்துழைத்து மத்தியிலே நாடாளுமன்றத் தேர்தல் வரப்போகிறது— அப்போது காங்கிரஸ் அல்லாத, பி.ஜே.பி. அல்லாத ஒரு அரசை உருவாக்குவதற்கு முன்வர வேண்டும் என்ற ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களோடு அவர்கள் கட்சி ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்கவில்லை. அடுத்து வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தல்களுக்குப் பிறகு மத்தியிலே காங்கிரஸ் அல்லாத, பி.ஜே.பி. அல்லாத ஒரு மாற்று அரசு ஏற்படுவதற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றுதான் சொன்னேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** காங்கிரஸ் அல்லாத, பி.ஜே.பி. அல்லாத ஒரு மாற்று அரசு ஏற்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய அடிப்படையான கொள்கை. ஆகவேதான்,. சென்ற சட்டமன்றத் தேர்தலிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னாலே போதும். (சிரிப்பு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அப்படி நான் சொல்லவில்லை, அதுவல்ல, நான் ஒன்றைச் சொல்கிறேன். இன்று அப்படிப்பட்ட உழைப்பாளி மக்களுடைய ஆதரவோடு அல்லாமல், மத்தியிலே காங்கிரஸ் அல்லாத, பி.ஜே.பி. அல்லாத ஒரு அரசு வர இயலாது. நான் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. முதலமைச்சர் அவர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. அதாவது, தமிழக அரசு இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கிற அணுகுமுறை, அப்படிப்பட்ட ஒரு அரசு



மத்தியிலே வருவதற்கு உதவுமா என்று சாந்தமாக சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதாவது தங்களுடைய கோரிக்கைகளுக்காக, கோரிக்கை வைத்து, கோரிக்கைகளை அடைவதற்காக ஒரு வேலைநிறுத்த அறிவிப்பு கொடுப்பது என்பது இந்த நாடு ஏற்றுக்கொண்டிருக்கின்ற கொள்கை. அப்படிப்பட்ட ஒரு நோட்டீஸ் கொடுத்தார்கள் என்பதற்காக வரலாற்றிலே நாம் காணமுடியாத 1 3/4 இலட்சம் ஊழியர்களை dismiss செய்த வரலாறு என்பது இந்த உலகத்திலே வேறு எங்காவது உண்டா?

பிற்பகல் 12-20

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1 3/4 இலட்சம் தொழிலாளர்களை dismiss செய்ததென்று தவறான தகவலை அவைக்கு மாண்புமிகு உறுப்பினர் சொல்லிக்கொண்டிருக்கிறார். இதிலே உச்ச நீதிமன்றத்தினுடைய ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். அதிலே உங்களுக்கு ஒரு கொள்கைத் தெளிவு இருந்தால், உள உரம் இருந்தால் அந்த உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை எதிர்த்து நாடு தழுவிய ஒரு போராட்டத்தை நடத்துங்களேன். நாங்கள் வேண்டாம் என்று உங்களுக்குக் கூறவில்லையே!

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** உச்சநீதிமன்றத்தினுடைய கருத்தை எதிர்த்து நாடு தழுவிய போராட்டத்தை நடத்துவதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இன்று ஆயத்தம் ஆகிக்கொண்டு இருக்கிறது என்பதை நான் தெளிவாகச் சொல்லிக்கொள்வதோடு, அதற்கு நீங்கள் ஆதரவு தாருங்கள் என்று.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்து வெகு நாட்கள் ஆகிவிட்டன. இன்னும் போராட்டத்திற்கு ஆயத்தப்படுத்திக்கொண்டே இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்கள் ஆயத்தப்படுத்திக்கொண்டு போராடுவதற்குள் அடுத்த தேர்தலே வந்துவிடும்போல் இருக்கிறது. ஆகவே இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன், கம்யூனிஸ்ட் இயக்கம் ஒத்துழைத்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி, எப்படியும் மத்தியிலே B.J.P அல்லாத காங்கிரஸ் அல்லாத ஒரு புதிய அரசு அமைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதற்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்ததற்குப் பிறகு, இன்று அதற்கு ஆபத்தும் ஆகிக்கொண்டிருக்கின்றது என்று சொல்கின்ற நேரத்திலே, சமீபத்தில் நடந்த Indian Labour Conference-லேகூட உழைப்பாளி மக்கள் C.I.T.U.வினுடைய பிரதிநிதிகளும், A.I.T.U.C-யினுடைய பிரதிநிதிகளும் இந்தக் கருத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல; வருகின்ற 2004 பிப்ரவரியிலே நாடு தழுவிய ஒரு போராட்டத்திற்கு இன்றைக்கு அறைகூவல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த அவை வழியாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த முறையிலே...... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியில் முடித்து விடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அந்த முறையிலே, மிக முக்கியமான ஒரு பிரச்சினையைப் பொறுத்த அளவிலே, அதாவது அடிப்படையான உரிமை என்ற முறையிலே இன்றைக்கு வேலைநிறுத்த உரிமை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு வேலைநிறுத்தம் செய்ய உரிமை கிடையாது என்று உச்ச நீதிமன்றமே தெளிவாகக் கூறிவிட்டது. தீர்ப்பு அளித்து விட்டது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அறியாதது அல்ல. Industrial Disputes Act-லே தொழிலாளிகளுக்கு, அதாவது Trade Union Workers வேலைநிறுத்தம் செய்வதற்கு, 14 days notice கொடுத்து வேலைநிறுத்தம் செய்யலாம். ஆனால் அதே உச்ச நீதிமன்றம் என்ன சொல்கிறது என்றால், தொழிலாளர்களுக்கு வேலைநிறுத்தம் செய்வதற்கான அடிப்படை உரிமை இல்லை. அதனாலே அது, உச்ச நீதிமன்றத்திலே இருக்கிறவர்களுடைய opinion. அதற்குக் காரணம் அவர்கள் வழக்கறிஞர்களுடைய போராட்டத்தை பார்த்துக்கொண்டு வேறே என்னென்னமோ பேசுகின்றார்கள். அதற்கு நான் பதில் சொல்வது சரியாக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளிலே முடித்துவிடுங்கள்.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவது, இன்று இப்படிப்பட்ட ஒரு பிரதானமான பிரச்சினை எதிலேயிருந்து ஏற்பட்டிருக்கிறது என்றால், மக்களுடைய ஜனநாயக உரிமைகளை மீறுவது என்ற ஒரு கருத்தினுடைய அடிப்படையிலே, ஒரு கண்ணோட்டத்தினுடைய அடிப்படையிலே ஏற்பட்டிருக்கிற ஒன்று. அந்த முறையிலே தமிழக அரசும் சில நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்றது. நாங்கள் ஏற்கெனவே இந்த அவையிலே அது சம்பந்தமாக எல்லாம் பேசி இருக்கிறோம். இன்றைக்குக் கூட்டங்கள் நடத்துவதற்குக்கூட எங்களுக்கு அனுமதி இல்லை. நான் இந்த நேரத்திலே முதலமைச்சரிடம் ஒரு வேண்டுகோளை வைத்துக்கொள்கிறேன். அவர்கள் இன்று மக்களுடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்பதிலே அக்கறை காட்டி இருப்பதனாலே, இன்றைக்குத் தொழிலாளர்களுடைய அடிப்படையான உரிமையைப் பாதுகாத்துக்கொள்வதற்கு C.I.T.U., அதனுடைய அகில இந்திய மாநாடு டிசம்பர் 9-லேயிருந்து 13 வரை இங்கே நடத்துவதையொட்டி, 13 ஆம் தேதி ஒரு பேரணிக்கு அனுமதி கேட்டதற்குப் பிறகுகூட எங்களுக்கு அனுமதி தரவில்லை. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இன்று அப்படிப்பட்ட ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கு..... (மணியடிக்கப் பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியிலே உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நடவடிக்கை எடுககப்பட வேண்டும். அதேபோன்று ஒரு முக்கியமான பிரச்சினையைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிவாரணம்—வறட்சி நிவாரணம் என்ற முறையிலே அறிவிக்கப்பட்டிருக்கிற நிதி இன்று சரியான முறையிலே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும், குளங்களை ஆழப்படுத்துவதற்கு, அதேபோன்று தண்ணீர் பற்றாக்குறையைச் சரிகட்டக்கூடிய முறையிலே நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். ஒரு குளத்தை ஆழப்படுத்துவதற்கு ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் ரூபாய் என்ற முறையிலே இப்போது நாம் நிதி ஒதுக்கீடு செய்வதால் அது பயன்படாது. அதற்குக் காரணமாக இருப்பது என்னவென்றால், நாம் போதுமான நிவாரணத்தை மத்திய அரசிடமிருந்து பெற முடியவில்லை என்பதுதான். அதற்கு நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்தை நாங்கள் இந்த அவையிலே தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கின்றோம்.

[2003 நவம்பர் 6

பிற்பகல் 12-25

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து போராடி நாம் அனைவரும் அதைப் பெற வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இயக்கம், மத்திய அரசிலே அங்கம் வகிக்கிற தி.மு.க.-வோடு தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாது. 1991-லேயிருந்து 1996 வரை அரசு ஊழியர்களாக இருக்கட்டும், தொழிலாளர் வர்க்கம் யாராக இருந்தாலும் அம்மாவினுடைய ஆட்சிக்காலத்தில் சரியான, சீரான நிதி நிர்வாகம் இருந்த காரணத்தினால், அவர்கட்கு தாராளமாக தாயுள்ளத்தோடு நிதியை வழங்கினார்கள். ஆனால் நாங்கள் தற்போது ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், கஜானா காலி என்ற நிலையிலே ஆட்சிப் பொறுப்பை எங்களிடம் ஒப்படைத்தார்கள். அதற்குக் காரணம் தி.மு.க.; உங்களுக்குத் தெரியும். தி.மு.க.-தான் தற்போது டெல்லியிலேயும் ஆட்சியிலே இருக்கிறது. முறைப்படி எங்களுக்கு வர வேண்டிய பணமே, மத்திய அரசு ஒத்துக்கொண்ட பணத்தைக்கூட தராமல் தடுத்திருக்கிறார்கள்; 1300 கோடி ரூபாய் வர வேண்டிய பணத்தை எங்களுக்கு வாராமல் செய்துவிட்டார்கள். அப்படிச் செய்து, ஊழியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும், தொழிலாளர் வர்க்கத்திற்கும் எதிராகச் செயல்படுகின்ற தி.மு.க.-வோடு நீங்கள் லாலி பாடாமல் இருந்தால்தான் உண்மையான கம்யூனிசத் தத்துவத்தை நீங்கள் கடைப்பிடிப்பவர்கள் ஆவீர்கள் எனக் கூறிக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, தி.மு.க.-வினுடைய இரட்டைக் கொள்கையை நாங்கள் தொடர்ந்து விமர்சனம் பண்ணிக்கொண்டிருக்கிறோம் என்பதை நம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறியாதது அல்ல. அவர்களுடைய அந்தக் கொள்கைகளோடு நாங்கள் உடன்படவில்லை என்றும், அதே நேரத்திலே மத்திய அரசிடமிருந்து நமக்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கு நாம் அனைவருமே ஒத்துச் செயல்படுவோம் என்று நாங்கள் தொடர்ந்து இந்த அவையிலே வலியுறுத்திக்கொண்டிருக்கின்றோம். அதற்கான ஒரு நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும்.

நான் இன்றைக்கு இந்தப் பின்னணியிலே ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்....



2003 நவம்பர் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள். திரு. ஹக்கீம். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, ஒரு முக்கியமான பிரச்சினை. அதாவது நீங்கள் பேசுவது என்பது ஒரு சரியான பார்வையோடு என்றால், இன்று அரசு ஊழியர்களுடைய போராட்டத்தை ஆதரித்தார்கள் என்பதற்காக எங்களுடைய கட்சித் தலைவர்கள் மேலேயும், அதேமாதிரி C.P.I. கட்சித் தலைவர்கள் மேலேயும், மற்ற அரசியல் கட்சித் தலைவர்கள் மேலேயும் எஸ்மா சட்டத்திலே வழக்குப் போடுவது என்பது சரிதானா? நியாயம்தானா? அதை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள். திரு. ஹக்கீம். இன்னும் 5 தலைவர்கள் பேச வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, அப்படிப்பட்ட அணுகு முறையிலேயிருந்து அரசு பின்வாங்க வேண்டும்; அந்த வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பிறகு மீன்பிடித் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உரையை முடித்துக்கொள்ளுங்கள். திரு. ஹக்கீம். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒரு நிமிடத்திலே உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவற்றை திரு. பழனிசாமி அவர்கள் பேசுவார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மீன்பிடித் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற மக்கள் மற்ற மாநிலங்களிலே போய் மீன் பிடிக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவர்களைப் பொறுத்த அளவிலே, எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உரையை முடித்துவிடுங்கள். திரு. ஹக்கீம். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** உரையை முடித்துவிடுகிறேன், ஒரேயொரு நிமிடம்.

அந்த ஆட்களை, மீனவர்களைப் பொறுத்த அளவிலே, இப்போது பிற மாநிலங்களிலே சென்று அவர்கள் அந்தத் தொழிலைச் செய்கிற நேரத்திலே, அவர்கள் தாக்கப்படுகிறார்கள். அவர்களுடைய பொருட்கள் சேதப்படுத்தப்படுகின்றன. அதற்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இந்த மீன்பிடித் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற மக்களுடைய நலனைப் பாதுகாத்துக்கொள்வதற்கு மீன்பிடித் துறைமுகங்கள், குறிப்பாக, தேங்காய்ப்பட்டினம், முட்டம், குளச்சல் போன்ற இடங்களிலேயும், அதேபோன்று தமிழகத்தினுடைய மற்ற பகுதிகளிலேயும் ஏற்படுத்துவதற்கு அரசு போர்க்கால வேகத்தோடு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** **

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்ன கருத்துகள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. திரு. ஹக்கீம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



*பிற்பகல் 12-30*

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே கலந்துகொண்டு பேசுவதற்குண்டான இந்த வாய்ப்பினை, அனுமதியை அளித்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இது புனித ரமலான மாதம். இறைவன் எங்களுக்கு நல்ல வழி காட்ட வேண்டும் என்று சொல்லி, உலகத்திலே இருக்கின்ற எல்லா இஸ்லாமிய மக்களும் புனிதமாக வணங்கக்கூடிய இந்த மாதத்தில் புரட்சித் தலைவி இந்த நாட்டிலே இருக்கிற அத்தனை சிறுபான்மை மக்கள், இஸ்லாமிய மக்கள், இன்னும் இந்தப் பாதிப்பிலிருந்து விடுபட முடியாதா என்று ஏங்கித் தவிக்கின்ற மக்கள் அத்தனை பேருடைய மனதையும் நிறைவுபடுத்துகின்ற விதத்திலே ஓர் அற்புதமான விளக்கத்தை இந்த மன்றத்திலே இன்றைக்கு எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஓர் அரசியல் பூகம்பத்தையே இன்றைக்கு புரட்சித் தலைவி இந்த நாட்டிலே உருவாக்கிவிட்டார், அவர் இன்றைக்குத் தந்த விளக்கத்தின் மூலம் என்பதை நாளை காலை எட்டுக்கால தலைப்பிலே இந்த தேசத்திலே இருக்கிற அத்தனை பத்திரிகைகளும் அதை கட்டம் கட்டிக் கொண்டுவருகிறபோதுதான் 105 கோடி மக்களும் அதைப் பார்க்கப் போகின்றார்கள், வியப்படையப் போகின்றார்கள். அந்த அற்புதமான கருத்துக்கு தமிழகத்தின் மக்கள் நாளை ஆதரவு தரப் போகிறார்கள் என்ற அபூர்வமான செய்தியும் அடுத்தடுத்து வர காத்திருக்கின்றது என்பதைப் பெருமையோடு மனநிறைவாக இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) — ஏனென்று சொன்னால், மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு இன்னும் தயக்கம் தேவையே இல்லை. புரட்சித் தலைவிக்குப் பின்னாலே வாருங்கள்; புதிய பாரதத்தைக் காணுவோம், புரட்சிகரமான பாரதத்தை உருவாக்குவோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் தயக்கம் காட்ட வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்று சொன்னால் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளையும் மேடையிலே வைத்துக்கொண்டு ஒரு கட்சி, ஒரு பழைய காங்கிரஸ்காரர் காமராஜர் அரங்கத்திலே பேசுகிறபோது தி.மு.க.வும் காங்கிரஸும்தான் நாட்டிலே இருக்க வேண்டும். பிற கட்சிகள் எல்லாம் இருக்கக் கூடாது என்று உங்களை

வைத்துக்கொண்டே பேசியிருக்கிறார். அது உங்களுக்கு ஆபத்து என்பதற்காக இப்போதும் நாங்கள் சொல்கிறோம்; கவனமாக புரட்சித் தலைவிக்குப் பின்னாலே வாருங்கள். பாரதிய ஜனதா கட்சி இல்லாத, காங்கிரஸே இல்லாத ஒரு புதிய ஆட்சி டெல்லியிலே மலர வேண்டும் என்று சொல்லக்கூடிய இந்த தைரியம், இந்திரா காந்தியும், ஜான்சி ராணியும், பிரிட்டனை ஆண்ட மார்க்கிரட் தாட்சரும் இணைந்து வந்து ஒன்றாக நின்றது போல புரட்சித் தலைவியின் வடிவத்திலே இன்றைக்கு இந்தக் கருத்து அறிவிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தேசமே இன்றைக்கு ஆச்சரியத்தில் ஆழக்கூடிய அற்புதமான கருத்தைச் சொல்லியிருக்கிறார். இவ்வளவு தைரியம் அம்மாவைத் தவிர இந்த நாட்டு அரசியலிலே வேறு யாருக்கும் இதுவரை வந்தது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள்மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கைதான் அதற்குக் காரணம். மக்களின்மீது வைத்திருக்கிற அழுத்தமான நம்பிக்கை. இங்கே நம்முடைய மரியாதைக்குரிய திருநிறைச் செல்வர் ஹேமச்சந்திரன் அவர்கள் பாரதிய ஜனதா கட்சியும் வேண்டாம், காங்கிரஸ் கட்சியும் வேண்டாம் என்று சொல்கிறாரே தவிர, இந்த இரண்டும் வேண்டாம் என்று சொல்லி விட்டு வருகிற இடத்திலே புரட்சித் தலைவி அறிவிக்கின்ற அறிவிப்பை ஏற்றுக்கொண்டு, நாங்கள் வருகிறோம், வாருங்கள் தாயே, தாயகத்தைக் காப்போம் என்று சொல்கிற தைரியம் ஏன் வர மறுக்கிறது? ஏதோ இன்னொரு உறவை மனதிலே கொஞ்சம் வைத்துக்கொண்டு (குறுக்கீடு) நான் பேசி முடித்த பிறகு பேசுங்கள் தலைவா, உட்காருங்கள். (குறுக்கீடு)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கைமீது நடைபெறுகிற விவாதத்திற்கு இது தொடர்புடையதுதானா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** அண்ணே, அண்ணே, ஒரு நிமிடம் சுதந்திரமாக என்னுடைய கருத்துகளைச் சொல்லவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன், திரு. ஹேமச்சந்திரன் பேசிய பேச்சினுடைய தொடர்ச்சியைத்தான் அவர் பேசுகிறார்.



**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** நாட்டிற்குத் தேவையான கருத்தைச் சொல்கிறபோது, அதிலே எந்தவிதமான தடையும் இருக்க வேண்டாம் என்பதற்காகச் சொல்கிறேன். அதே மாதிரியாகத்தான் நாங்கள் நாடு முழுக்கச் சொல்லி வந்தோம். இன்றைக்கு எங்கள் மனம் நிறைவுபடுகிற விதத்திலே அந்தக் கருத்துக்கு இவ்வளவு சீக்கிரம் இப்படி நம்முடைய தாயின் வாயிலிருந்தே இந்த வார்த்தைகள் வரும் என்பதைத்தான் இந்த நாடே எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை நாம் சொல்லிக் கொண்டிருந்தோம். இன்றைக்கு அந்தப் புனிதத் தாய் தன்னுடைய வாயைத் திறந்து அவ்வார்த்தைகளை இங்கே மலர்ந்தருளி இருக்கின்றார். மனப்பூர்வமாக நன்றியைச் சொல்வதற்கு என்ன காரணம் என்று சொன்னால், பாரதிய ஜனதா, காங்கிரஸ் கட்சிகள் வேண்டாம்: நாளை புதிய ஆட்சி. யார்? யார் புதிய ஆட்சி? ஆங்கிலமா, ஆங்கிலத்திலே பதில்; தமிழா, தமிழிலே பதில்; சமஸ்கிருதமா, சுலோகத்தை திருத்திச் சொல் என்று அதிலே சொல்லக்கூடிய ஆற்றல்; பன்மொழிப் புலமை; ஹிந்தியா; சரிக்குச் சரி ஹிந்தியிலே பதில் சொல்கிற ஆற்றல்; நாளை இந்த பாரதத்தின் பிரதமராக வரக் கூடிய சகல தகுதியும் பெற்றிருக்கக் கூடியவர் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-35*

தமிழை வைத்துக்கொண்டு வியாபாரம் நடத்தக்கூடிய கூட்டத்திற்கு மத்தியில் தமிழ்நாட்டில் ஒரு புரட்சித் தலைவியை இந்தத் தேசத்திற்கு நாங்கள் நம்பிக்கை நட்சத்திரமாகக் காட்டுகிறோம். இந்தத் தேசத்தின் தலைமையை ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்திலே—தலை போனது, வாலும் பின்னாலே போய்விட்டது. பார்த்தீர்களா, கொஞ்ச நேரத்திற்கு முன்னால். இவையெல்லாம் என்ன அடையாளம் என்று கருதுகிறீர்கள்? நாங்கள் எல்லாம் ஏன் டாக்டர் குமாரதாஸ் தலைமையில் அம்மாவுக்குப் பக்கத்தில் வந்தோம் என்று சொன்னால், நாய்க்குத் தலையாக இருப்பதைவிட, சிங்கத்திற்கு வாலாக இருப்பதுதான் எங்களுக்கு அரசியல் பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிங்கத்தை தமிழ்நாட்டு முதலமைச்சராக நாட்டு மக்கள் ஆக்கிவைத்து இருக்கிறார்கள். அந்த பெருமைக்குரிய இடத்திலேயிருந்துதான்—அவர் சொன்னமாதிரி, இவர்கள் கேட்டுக்கொண்ட மாதிரி—நாங்களெல்லாம் ரொம்ப மிகுந்த மரியாதையோடு, உயர்ந்த உணர்வோடு இன்றைக்கு நிறைந்த மனத்தோடு இந்த இடத்தில் பேசுவதற்குக் காரணமே அதுதான். நல்லவேளை, அந்த நாசக்காரக் கூட்டத்தோடு, இந்த மோசக்காரக் கூட்டத்தினோடு நானும் சிக்கியிருப்பேன். நாங்களும் சிக்கிச் சீரழிந்திருப்போம். இறைவன் எங்களைக்

காத்தார். புரட்சித் தலைவிக்கு பக்கத்திலே இன்றைக்கு எங்களைக் கொண்டு போய்ச் சேர்த்தார். அதனால் பெருமையோடு இந்த வரலாற்றைப் பேசக் கூடிய பெருமை படைத்தவர்களாக இருக்கிறோம். யார், யார் தந்த பின்னாலே போனது?

இதையெல்லாம் நாடு இன்றைக்கு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் போனால் ஆக்கம் தலைவர், அந்தக் கட்சியினுடைய தலைவர் வந்தார், வாராண்டாவில் அமர்ந்தார், கையெழுத்துப் போட்டார், படிப் பணத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டார், புறப்பட்டுப் போய்விட்டார். தலைவரும் வருவதில்லை; தளபதியும் வருவதில்லை. தமிழ்நாடு பார்க்கிறது. விரைவில் உங்களுக்குச் சரியான தண்டனையை இன்னும் அழுத்தமாகத் தருவதற்கு தமிழ்நாடு பார்த்துக்கொண்டிருக்கிறது. அது புரியாமலே போய் தேசியம் பேசுகிற ஒரு கட்டம், திசை தெரியாமல் சென்றாலே போய்க் கொண்டிருக்கிறது. அதை அன்றைக்கும் சொன்னோம், இன்றைக்கும் சொல்கிறோம்.

சரி, ஓர் அற்புதமான துணை நிதிநிலை அறிக்கையை இங்கே அளித்திருக்கிறார்கள். மனம் நிறைந்த பாராட்டுகளைச் சொல்கிறோம் மனம் நிறைந்த நன்றிகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். காய்ந்துபோன அல்லது தீய்ந்துபோன, நைந்துபோன புடவைகளை, வேட்டிகளை அல்ல, பாலியெஸ்டர் புடவை-பாலியெஸ்டர் சேலை என்று அந்தத் தாயினுடைய புனித உள்ளத்தில், இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழை மக்களை அரவணைக்க வேண்டுமென்பதற்காக 120 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்து, பொங்கலன்று இந்த நாட்டு மக்களுக்குத் தரப்படும் என்றார்கள் ஏன்? எது வந்தபோதும் பொதுவென்று வைத்து வாழ்கின்ற பேரை வாழ்த்திடுவோம் என்று சொன்ன புரட்சித் தலைவருடைய அடிப்படையில், அவர் சொன்ன வார்த்தைகளை இன்றைக்கு மெய்யாக்குகின்ற இடத்திலே ஓர் அற்புதமான திட்டத்தை நேற்று முழுக்க முழுக்க விளக்கம் சொன்னார்கள். இன்றைக்குக் காலையிலும் அம்மா அவர்கள் விளக்கம் சொன்னார்கள். 2,491 கோடி ரூபாய் 25 இலட்சம், இந்த மின்சாரத்திற்காக, மக்களுக்காக, மக்களுடைய நன்மைக்காக, ஏழைகளுக்காக, விவசாயத் தொழிலாளர்களுக்காக இந்த அரசாங்கம் இழப்பைத் தாங்கிக்கொண்டு அந்தத் திட்டத்தை இன்றைக்கு அறிவித்திருக்கின்றது என்று. எல்லாம் திரும்பத் திரும்பக் கேட்கிறீர்கள். எனக்கு என்னவென்றே புரியமாட்டேன் என்கிறது



எல்லாவற்றையும் கேட்கிறார்கள். அம்மா அவர்கள் போன தடவை நான்கு மணி நேரம் பேசினார்கள். நிதி அமைச்சர் அவர்கள் $3\frac{1}{2}$ மணி நேரம் பேசியிருக்கிறார்கள். மின்சாரத் துறை அமைச்சர் $1\frac{1}{2}$ மணி நேரம் சொல்லியிருக்கிறார். யூனிட் மின்சாரம் தயாரிக்க ரூ. 3.07 ஆகிறது; ரூ 2.87 நட்டம் ஆகிறது, 20 காசுகளுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். நாடு முழுவதும் இருக்கக்கூடியவர்களுக்குக் கொடுப்பதற்கு 2,491 கோடியே 25 இலட்சம் ரூபாய் அரசாங்கத்திற்கு இழப்பு வருகிறது. இந்தக் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் எவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும் தாங்கிக் கொண்டு, அந்த மக்களுக்கு நன்மை செய்வதற்காக இந்தக் காரியத்தை நாங்கள் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இன்றைக்கு இருக்கிறோம், மனதாரச் செய்கிறோம். இந்தத் தேசத்து மக்களுக்காக என்று இவ்வளவும் சொன்னதற்குப் பிறகு, விடிய விடிய இராமாயணம் கேட்டுவிட்டு, விடிந்ததற்குப் பிறகு, மாமா தயாநிதி கிட்ட தம்பி வணங்காமுடி கேள்வி கேட்டிருக்கிறான். சீதைக்கு சித்தப்பன் இராமன்தானா அப்படியென்று கடைசியாக. ஏன் மாமா, விடிய விடிய இராமாயணத்தைக் கேட்டீங்க, இராமன் யார்? சீதைக்கு சித்தப்பாவா என்று கேட்டானாம். அதிலே கடைசியிலே தயாநிதி சொன்னாராம், வணங்காமுடி கிட்டே, அது கடைசி வரைக்கும் நாட்டு மக்களுக்கு விளங்கவே வேண்டாம், என் பின்னாடியே நீயும் வந்து கொண்டிரு என்று. அது விளங்காமல் போவதற்கு என்ன மாமா காரணம் என்றதற்கு—விளங்காமல் இருக்கிற வரைக்கும்தான் நீயும் என் பின்னாடி இருப்பே, நாடும் என் பின்னாடி, உன்னைச் சேர்ந்தவர்களும் இருப்பார்கள் என்கிற மாதிரி இவ்வளவு கதையையும் கேட்டுவிட்டு, இவ்வளவையும் சொல்லிவிட்டு இவ்வளவும் சொன்னதற்குப் பிறகு பழையபடி பேசுகிறார்கள், பழையபடி தெரியாத மாதிரி கேட்கிறார்கள் என்று சொன்னால், இது நாடகம் இல்லையா? இதை நாடு ஏற்குமா?

பிற்பகல் 12-40

அதேபோலத்தான் இங்கே நமது மரியாதைக்குரிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே திரும்பத் திரும்ப ஒன்றைச் சொல்லிக்கொண்டே இருந்தார்கள். அவர்கள் சொல்கிறபோது எல்லாம் எனக்கு மனதிலே ஒன்று பட்டது. ஒரு காலத்திலே, கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒன்றாக இருந்த காலத்திலே பெரிய தலைவர் ஜீவா, அவர் சொன்னார், "ஆற்றுக்குள்ளே நின்றுகொண்டு அரோஹரா, அரோஹரா என்று கத்தினாலும் சேற்றுக்குள்ளேதான்டா சொக்கலிங்கம் இருக்கிறாரு."

அதனாலே அந்த சோத்துப் பிரச்சினையை வைத்துத்தான் இந்த நாட்டிலே போராட்டம், புரட்சி எல்லாம் வெடிக்கிறது. அதெல்லாம் இவர்களுக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன் என்று சொல்லமாட்டேன். இல்லையா? அந்த சோத்துப் பிரச்சினை, அந்த காவிரி வறண்டு, மழை இல்லை என்ற நிலைமை ஏற்பட்டு, அந்த வறட்சி வந்த காரணத்தினால், சோத்துப் பிரச்சினை இன்று வந்த காரணத்தினாலேதான் புரட்சித் தலைவி அவர்கள் 30 கிலோ அரிசி திட்டத்தை அறிவித்து, வறண்டு கிடக்கிற டெல்டா பிரதேச மக்களுக்கு அதைச் செய்ய வேண்டுமென்று அந்தக் குடும்பங்களை, அன்றைக்கு பல இலட்சோப இலட்சம் குடும்பங்களுக்கு உதவி செய்தார். 75 கோடி ரூபாய் நஷ்டம். 75 கோடி ரூபாய் நஷ்டம் என்று கணக்கெழுதிவிட்டுச் செல்லவில்லை. அந்த நஷ்டத்தையும், கஷ்டத்தையும் தாங்கிக்கொள்ளக்கூடிய சக்தி எங்கள் அரசாங்கத்திற்கு இருக்கிறது, அதைச் சரி பண்ணக்கூடிய சக்தி எனக்கு இருக்கிறது என்று சொல்லி, அன்றைக்கு அந்த மக்களுக்கு அதைச் செய்தார். அது மாத்திரமா, 3½ ரூபாய்க்கு 20 கிலோ அரிசி இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது அறிவிக்கப்பட்டிருக்கிற மாத்திரத்திலேயே அதனுடைய நஷ்டக் கணக்கு எத்தனை, 800 கோடி ரூபாய் என்று இப்பொழுதும் கணக்கு சொல்கிறார். ஆனால் அந்த நஷ்டத்தைத் தாங்கிக் கொண்டு ஏழைகளுக்கு நாங்கள் செய்ய வேண்டுமென்ற கடமையைத் தவறாது, சரியாகச் செய்வோம். ஏனென்றால், அன்றைக்குக்கூட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கேட்டார். எவ்வளவு நாள்? ஆட்சி உள்ள வரை. எங்கள் அரசாங்கம், எங்கள் தலைமை, புரட்சித் தலைவரின் பெயர், எங்கள் கூட்டம் இருக்கிற வரை இந்த நாட்டு ஏழைகளுக்கு தொடர்ந்து செய்வோம் என்று சொல்லக்கூடிய அந்த திராணி, புரட்சித் தலைவிக்கும், அவர் தலைமைக்கும், அவர் பின்னால் இருக்கின்ற இந்த அரசுக்கும் இருக்கிறது என்பதை அன்றைக்கும் தெளிவுபடுத்தினோம். அதைத்தான் இங்கே மீண்டும் தெரிவிக்கிறார்.

அரிசி கொடுப்பது மாத்திரம் அல்ல. எவ்வளவு கஷ்டம், எவ்வளவு வறட்சி, எவ்வளவு பெரிய பஞ்சம் இருந்தாலும், நாட்டிலே இருக்கிற அந்த ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கக்கூடிய அந்த மகத்தான சக்தியாக புரட்சித் தலைவியினுடைய தலைமை இன்றைக்கு இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டவர்கள். இப்படி ஒரு அரசியல் பூகம்பம்



கிளம்பி வருகிறது என்ற வேகத்தை தெரிந்தவர்கள் தானாகவே பிய்த்துக் கொண்டு வெளியே போகக்கூடிய காட்சிகளையும் இன்றைக்கு தமிழகத்தினுடைய மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

இவை அத்தனைக்கும் மீறி, இவ்வளவு கஷ்டங்களையும், இவ்வளவு நஷ்டங்களையும் தாங்கி, இந்த அரசாங்கத்தை நடத்திச் செல்லக்கூடிய இந்த மகத்தான பணிக்கு மத்தியிலே, இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற இந்த அரசியல் மாற்றத்தில் மிக தைரியமாக, வெளிப்படையாக, துணிச்சலாக எந்த ஒரு அரசியல் எதிர்ப்பையும் தாங்கக்கூடிய சக்தியாக இன்றைக்கு ஒரு மிகப் பெரிய சக்தியாக, எழுச்சி பெற்ற மிகப் பெரிய ஓர் அரசியல் மஹா வடிவமாக எங்களுடைய அன்னை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் எழுந்து வரக்கூடிய இந்த எழுச்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இன்னும் இடதுசாரி கட்சிகள் என்று சொல்லக்கூடிய அனைவரும், இன்றைக்கு ஒன்றாகத் திரண்டு அந்தத் தாயின் தலைமைக்குப் பின்னாலே வர வேண்டுமென்ற கட்டாயத்தை அரசியல் நிலைமைகள் உருவாக்கி வைத்துவிட்டன.

நான் இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மன நிறைவோடு ஆரம்பத்தில் நான் அதைத்தான் சொன்னேன். அதை மன நிறைவோடு, தாயினுடைய முடிவு இன்றைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்க வருகிறபோது, சாதாரணமாக இந்த நாட்டிலே இருக்கக்கூடிய யாரும் அவ்வளவு சுலபத்திலே இதைப்பற்றிச் சிந்தித்து வெளியிட்டுவிட முடியாது. ஏனென்று சொன்னால், பெரிய கட்சி என்று சொல்கிற கம்யூனிஸ்ட் கட்சியிலே சேர்ந்த— இந்திய தேசத்தில், இந்திய அரசியலில், நாடாளுமன்றத்தில் இன்றைக்கு அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சிகளாக இருக்கக்கூடியவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிற கட்சிகளும் அதை தைரியமாகச் சொல்ல முடியாத நேரத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 30, 32 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கக்கூடிய கால கட்டத்திலேயும், இந்தியாவில் இப்படிப்பட்ட ஓர் அரசியல் முடிவை தைரியமாகச் சொல்ல முடியாத கட்டத்தில், இன்றைக்கு புரட்சித் தலைவியினுடைய தலைமை இந்த தைரியமான முடிவை எடுக்கிறது என்றால், தேசத்தின் எதிர்காலத்திற்கு காங்கிரஸால் விபத்து வந்துவிடக்கூடாது, பாரதிய ஜனதா கட்சியால் பதற்றங்கள் ஏற்பட்டுவிடக்கூடாது என்று ஒரு புதிய neutral power in between these two forces, இந்த இரண்டுக்கும் மத்தியிலான ஒரு புதிய சக்தியை,

ஒரு புதிய வழியைத் தெரியமாகச் சொல்லி, வெளியே வந்து மக்களைச் சந்திப்பதற்கு இன்றைக்குத்தான், இந்த நவம்பர் 6-ஆம் தேதிதான் இந்தியாவின் எதிர்கால அரசியலுக்கு இவர்களை விட்டால் வேறு வழி இல்லை என்று (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லக்கூடிய இடத்தில் இதோ மாற்று வழி.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லை, அவர் முடித்துவிட்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வந்திருக்கும் பத்திரிகைகளிலே, ஒரு மத்திய அமைச்சர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சித் தலைவியினுடைய தலைமையில் தேசிய ஜனநாயக முன்னணியிலே சேர்வதற்கு அவர்கள் குதித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அதைப்பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் என்ன சொல்கிறார்? (குறுக்கீடு)

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

பிற்பகல் 12-15

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தனது கொள்கையைத் தெளிவாகக் கூறிவிட்டார். அதைக் கேட்டுவிட்டு மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உறுப்பினரிடம் பேசுவது முறையற்ற ஒன்று. (குறுக்கீடு) அம்மாவே சொல்லிவிட்டார்களே, அதற்குப் பிறகு பேசினால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. ஹேமச்சந்திரன்; அதற்குத்தான் திரு. ஹக்கீம் அவர்கள் சொன்னார்; 'விடிய விடிய இராமாயணம் கேட்டுவிட்டு' என்று ஒரு கதையைச் சொன்னார். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

**THIRU J. HEMACHANDRAN:** It is stated by the Honourable Minister who is sitting in the Government of India.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் குறிப்பிடுகின்ற செய்தியை நான் படிக்கவில்லை. எந்த அமைச்சர் என்ன



சொன்னார் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் யார் என்ன பேசியிருந்தாலும், எந்தப் பத்திரிகையில் என்ன செய்தி வந்திருந்தாலும், எல்லாவற்றிற்கும் பதிலடியாக என்னுடைய கொள்கை, என்னுடைய கட்சியினுடைய கொள்கை என்ன என்பதை ஏற்கெனவே தெளிவுபடுத்திவிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் எந்தக் குழப்பமும் இல்லை. எந்த மாற்றமும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் கொள்கையில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய பெரியவர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் (குறுக்கீடு) நான் எப்படி அதற்குள் முடிப்பது? இன்னும் விஷயம் இருக்கிறது; பொறுங்கள். பெரியவர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் தி.மு.க.-வைப் பற்றி நினைக்காமல், எங்கள் அம்மா அவர்கள் சொல்வதைக் கேட்டால் ரொம்பத் தெளிவாக எல்லாமே சரியாக விளங்கும்; பிரச்சினைக்கே இடமில்லை என்பதை நான் பழையபடி பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்; ஒன்று.

இங்கே அடுத்தபடியாக, நேற்றுகூட மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினர், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர் 'மதுபானக் கடையே வேண்டாம்; அதைத்தான் நாங்கள் சொல்கிறோம்' என்று சொன்னார். அவர் எந்த நாட்டிலே இருக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. சவுதி அரேபியாவிற்கோ, துபாய்க்கோ அனுப்பினால்தான் சரியாக வரும். காங்கிரஸ்காரர்கள் எந்த உலகத்திலேயிருந்து இதையெல்லாம் பேசுகிறார்கள் என்பது எங்களுக்கும் புரியவில்லை. கேரளாவிலே சாராயக் கடை இருக்கிறது; கள்ளுக் கடையும் இருக்கிறது. அதேமாதிரி பாண்டிச்சேரியிலே, உலகம் பூராவும் மதுபானக் கடைகளுக்கு மதுவிலக்கு கொண்டுவந்தாலும், அங்கு கொண்டு வரமாட்டார்கள் போலிருக்கிறது. பாண்டிச்சேரியிலே—கேரளாவிலே கூட்டுறவு. இல்லை, பொதுவாக நான் சொல்கிறேன். கூட்டுறவுக் கடை, கர்நாடகம். எல்லா இடத்திலேயும் சுற்றிப் பார்த்தீர்களேயானால் எல்லா காங்கிரஸ் ஆட்சியும் எவ்வளவு அமர்க்களமாக பாட்டில்களுக்கு மத்தியிலே உட்கார்ந்து இருக்கிறது என்பது அவர்களுக்கே தெரியும். அவை எல்லாவற்றையும் மனதிலே வைத்துக்கொண்டு தெரிந்து பேசுகிறார்களா, தெரியாமல் பேசுகிறார்களா என்று தெரியவில்லை. அந்த மதுபானக் கடையே வேண்டாம் என்று கர்நாடகத்திலேயும், கேரளாவிலேயும்,

பாண்டிச்சேரியிலும் போய் இவர்கள் சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு இங்கே வாட்டும். அதற்குள் தி.மு.க. அவர்களோடு சேர்ந்துகொண்டு, 'ஆமாம், ஆமாம்; உரக்கப் பேசுங்கள்' என்று சொல்லுவார்கள் அவர்களும் சேர்ந்துகொண்டு. ஏன்? கொழுந்துவிட்டு எரியும் அடுப்பிற்கு நடுவில் கொளுத்தப்படாத கற்பூரமாக தமிழகம் எத்தனை நாளைக்கு தங்களை பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று சொல்லி, சாராயக் கடை வைத்திருந்த சண்டாளத்தனத்தை, முதலில் இரண்டு தலைமுறைக்குத் தெரியாத விஷயத்தை நாட்டிற்குக் கற்றுக் கொடுத்ததே திருவாளர் கருணாநிதி. சேபாக்கம் சட்டமன்ற உறுப்பினர்; இந்தச் சபைக்குக் காலமெல்லாம் வராத, வரவே முடியாத அந்த உறுப்பினர்தான் இந்தக் கஷ்ட காலத்தை தமிழகத்திற்கு உண்டாக்கித் தந்தவர். பின்னாலே வருகிற அரசாங்கங்கள் அதைச் செய்யமுடியாத, தவிர்த்துவிட்டு செய்யமுடியாத நெருக்கடியை உண்டாக்கிவிட்டுச் சென்றவர்கள்; இப்போது அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவர்களோடு இவர்களும் ரொம்ப அற்புதமான கூட்டாளிகள்; ரொம்ப அற்புதமான ஆட்கள். இவர்களையெல்லாம் இந்த நாட்டிலே, வெளியிலேயிருக்கிற மக்கள் அடையாளம் பார்க்கவில்லை, தெரியவில்லை என்று நினைத்துக்கொண்டு இந்தக் கூடாரத்தை உருவாக்கப் பார்க்கிறார்கள். இவை அத்தனைக்கும் பேரவைதான் தெளிவான, சரியான முடிவுகளை இங்கே நம்முடைய மரியாதைக்குரிய இந்தப் புனிதத் தாய், அன்றைக்கு எடுத்து அறிவிக்கிற காலகட்டத்தில் அதுவும் ராத்திரி 12-00 மணி வரைக்கும் கடை வைத்தால் என்ன? 6-00 மணி வரைக்கும் கடை வைத்தால் உங்களுக்கு என்ன? அதிலே ஒருத்தருக்கு சந்தேகம் வந்திருக்கிறது; 7-00 மணிக்கெல்லாம் கடையை அடைத்துவிடுங்கள். அதுவும் யோசனைகளையெல்லாம் பார்த்தீர்கள் என்றால், பூமியே கிடுகிடுப்பது போலத்தான் யோசனைகள் எல்லாம். பூராவும் 7-00 மணிக்கே அடைத்து விடுங்கள்; 6-00 மணிக்கே முடித்துவிடுங்கள். வருமானம் வருவதற்குரிய யோசனையை காங்கிரஸும், தி.மு.க.-வும் இந்த ஹௌஸிலே சொல்லப்போவது கிடையாது. ஆனால் நஷ்டத்திற்கு என்னென்ன யோசனைகள் இருக்கிறதோ அவ்வளவையும் பார்த்து வைத்துவிட்டு, நாட்டை [illegible] நஷ்டப்படுத்திவிட்டுச் சென்றவர்கள் இப்படிப்பட்ட [illegible] யோசனைகளைச் சொல்லிக்கொண்டு கூட்டணி அமைத்துக்கொண்டு இப்போதும் கிளம்பியிருக்கிறார்கள். தி.மு.க. யாரோடு? பி.ஜே.பி.-யோடு. காங்கிரஸ் யாரோடு? தி.மு.க.-வோடு. இந்த நாட்டிலே இருக்கக்கூடிய மக்கள் தெரிந்துகொள்ளட்டும். பாரதிய ஜனதா கட்சியும், காங்கிரஸ் கட்சியும், தி.மு.க.-வும் கூட்டணி வைத்தமாதிரி இப்போது ஓர்



உறவை தமிழ்நாட்டிலேதான் இவர்கள் வைத்திருக்கிறார்கள். இந்த அருவெறுப்பான அரசியல கூட்டுதான் இன்றைக்குத் தமிழகத்திலே எங்கள் தாயை எதிர்த்து நின்று போராடுவதற்கு வருகிறது. அந்தப் போராட்டத்தை முறியடித்துவிட்டு, புதிய பாரதத்தைக் காண்பதற்குத்தான் மார்க்சிஸ்ட்களை இந்திய கம்யூனிஸ்ட்களை, எங்களைச் சார்ந்து இருக்கிற தோழர்களை, புரட்சித் தலைவியின் தலைமையை நோக்கி வாருங்கள்; புரட்சிகரமான எதிர்காலத்தை, தேசத்தின் வரலாற்றை உருவாக்குவோம் என்பதற்காகத்தான நான் திரும்பத் திரும்ப இந்தக் கருத்தை வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-50

அதேநேரத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவரின் கட்டளையை ஏற்றவனாக, எல்லாவற்றையும் சொன்னாலும், நாட்டைப்பற்றிச் சொல்கிறபோது, ஒருசில விஷயங்களை, வீட்டைப்பற்றிச் சொல்கிற மாதிரி, எங்களுடைய கருத்துகள், எங்களுடைய பணிவான சில வேண்டுகோள்களையும் புரட்சித் தலைவியினுடைய தலைமைக்கு, இந்த அரசுக்கு முன்னாலே வைத்து, நம்முடைய அணி அருமைக்குரிய அமைச்சர் பெருமக்களுக்கு முன்னாலே வைத்து, எங்களுடைய கோரிக்கைகளை, மக்களின் ஏக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய விதத்திலே தொகுதியைப் பற்றிய ஒருசில, இரண்டொரு வார்த்தைகளை மாத்திரம் ஒரு நிமிடத்தில் சொல்லி முடித்துவிடுகிறேன்.

மதுரை மாநகரத்தில் மழை பெய்தால், தண்ணீர் வெள்ளக்காடாகப் பெருக்கெடுத்து வருகிறது. எந்த வழியிலும், மாநகராட்சி கோடிக்கணக்காகச் செலவழிப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் அங்கே தண்ணீர் தேங்கி பெரிய வெள்ளமாக நிற்கின்ற காரணத்தினால், அதைத் தவிர்ப்பதற்கு வழியில்லாமல் கிடக்கிறது. மதுரையே தத்தளிக்கிறது. ஒரு புதிய வழியைக் கண்டுபிடித்து— மாரியம்மன் கோயில் தெப்பக்குளம் இருக்கிறது; டவுன்ஹால் ரோடு பெருமாள் கோயில் தெப்பக்குளம் இருக்கிறது; மழைநீர் சேகரிப்பின் அடிப்படையிலே புதிய வழிமுறையை நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசாங்கம் ஏதோ ஒரு வழிமுறையைக் கண்டுபிடித்து—மதுரையில் அந்தத் தண்ணீரை, அந்த வெள்ளக்காடாக இருப்பதைத் தவிர்த்துக் கொள்வதற்கு ஒரு நல்ல வழியை உருவாக்கித் தர வேண்டுமென்று நான பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த பஸ் ஸ்டாண்டு. மாட்டுத் தாவணி பஸ் ஸ்டாண்டு என்று மதுரையில் இருக்கிறது. அந்த பஸ் நிலையமே முழுக்க முழுக்க சிதறிய வண்ணத்தில்—ஏனென்றால், மாநகராட்சியில் முதலிலேயும் தி.மு.க.; இப்பொழுதும் தி.மு.க. அதை நிர்வாகம் பண்ணுகிற முறையும் சரியில்லை. அதைப் பாழடித்துவிட்டார்கள். அந்த பஸ் ஸ்டாண்டிலேதான் 10, 12 மாவட்டங்களைச் சுற்றிலுமிருந்து வரக்கூடிய அத்தனை பஸ்களும், பேருந்துகளும் வந்து செல்லக்கூடியதாக இருக்கின்றது. மிகப் பெரிய பாதிப்பை உருவாக்கி வைத்திருக்கிறது. ஆகவே அந்தப் பாதிப்பிலிருந்து மீட்டு, சேலம் மாதிரி, திருச்சி மாதிரி நல்லதொரு சிறு பஸ் ஸ்டாண்டை உள்ளேயே அமைக்கும் வகையில் மதுரை மாநகரத்து மக்களுக்கு, அதற்குத் துணை நிற்க வேண்டும் என்பதையும் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரையில் இரண்டு பக்கங்களிலும் மிக நெருக்கடி மிகுந்த பெரியார் பஸ் நிலையம்; இடையிலே கட்டபொம்மன் சிலை. எல்லீஸ் நகர் மேம்பாலம் என்று சொல்லி, நீண்ட காலமாக எங்கள் கோரிக்கை. நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட ஆய்வுக் கூட்டத்திற்கு வந்தார்கள். இரண்டு முறை அதை நிறைவேற்றித் தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்தார்கள். அம்மா அவர்கள் பெரிய மனது பண்ணி, கருணை உள்ளத்தோடு விரைவாக அந்த நிதியை ஒதுக்கித் தரவேண்டும். அந்தப் பாலம் ஏன் இப்போது கட்டப்பட வேண்டுமென்ற அவசியம் என்றால் மிகப் பெரிய congestion கடுமையான congestion. ஏனென்றால் மதுரையில் இலட்சக்கணக்கிலே வெளிமக்கள் வந்து, floating population வந்து கொண்டிருக்கிறது. ஏராளமான வாகனங்கள் பெருக்கெடுத்து வருகிற காரணத்தினாலே, அதுவும் நீர்நிலையால் பாதிக்கப்படுகிறது. போக்குவரத்திற்கு மிக நெருக்கடி ஏற்படுகிற காரணத்தினாலே, சென்னைக்கு அடுத்த மிகப் பெரிய நகரமான மதுரைக்கு அந்த எல்லீஸ் நகர் மேம்பாலம் மிக மிக அவசரமாகத் தேவைப்படுகிற காரணத்தினால், அதையும் விரைவாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலத்திற்கு, என் பிறந்த மண்ணிற்கு, சட்டப்பேரவைத் தலைவருடைய தொகுதிக்கு ஒரு by pass புறவழிச் சாலை என்பது முதலில் பேசப்பட்டது, தீர்மானிக்கப்பட்டது. வேலைக்குண்டான தொகைகள் ஒதுக்கபபட்டதாகத் தெரிவித்தார்கள். ஆனால் இடையில்



திடீரென்று நின்றுவிட்டது. அதுவும் மிகப் பெரிய நெருக்கடிக்கு ஆளாகித் தவிக்கிறது. காரணம் என்னவென்று சொன்னால், எங்களுடைய, நான் பிறந்த மண்ணான திருமங்கலத்திற்கு ஒரு typical geographical condition எங்களுடைய திருமங்கலத்திலிருந்துதான் திருநெல்வேலிக்குண்டான பாதையும், குற்றாலம், செங்கோட்டைக்குண்டான பாதையும் பிரியக்கூடிய இடமே எங்கள் ஊர்தான். அந்த bifurcation route-ல் மிகப் பெரிய இரண்டு highways சாலைகள் இருக்கின்றன. அதற்கு எல்லையே திருமங்கலம்தான். ஆகையாலே அந்த இரண்டு வழிகளிலும் செல்லக்கூடிய அனைத்து வாகனங்களும் திருமங்கலத்திற்கு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம், இது பேரவைத் தலைவருடைய தொகுதி என்கிற காரணத்தால் பேச விட்டுவிட்டார் என்ற பழி வந்துவிடக்கூடாது. ஆகவே இரண்டு பேரும் எழுதி முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்துவிடலாம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** நம்முடைய அம்மாவுக்கு தலை தாழ்ந்த வணக்கம். எழுதிக் கேட்டுவிட்டார்கள். எங்கள் கடமை வெகுவாக முடிவடைந்துவிட்டது. எங்கள் மக்கள் மத்தியிலே கிடைக்கின்ற மகத்தான நற்பெயரையும், அந்தப் பெயருக்குண்டான புகழையும், பெருமையையும் எங்கள் தாய்க்கே சூட்டி மகிழ்ந்திட நாங்கள் காத்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த வாய்ப்பிற்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் கூறி இந்த அளவிலே அமைகின்றேன். நன்றி.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் செல்வி டி. லபாரதி அவர்கள் பேசுகின்றபோது, பொது விநியோக முறையின்கீழ் அரிசிக்குக் கொடுக்கப்படும் மானியத்தைப்பற்றி இங்கே சில கருத்துகளைத் தெரிவித்தார். அதாவது, உலக வங்கியின் கட்டளைக்கு அடிபணிந்து, தமிழக அரசு, அரிசிக்கு கொடுக்கின்ற மானியத்தை இரத்து செய்துவிட்டதாகவும், ஆனால் மேற்கு வங்க அரசு உலக வங்கியின் கட்டளைக்கு அடிபணியாமல் தொடர்ந்து மானிய விலையில் அரிசியை

கொடுத்துக்கொண்டிருப்பதாகவும் இங்கே முற்றிலும் தவறான ஒரு தகவலைத் தெரிவித்தார். உண்மை என்னவென்றால்,.....

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** இல்லை, கொஞ்சம் இருங்கள். நான் பேசி முடித்துக்கொள்கிறேன். அவர்கள் சொன்ன கருத்தைத்தான் நான் சொல்கிறேன். உண்மை என்னவென்றால், மேற்கு வங்க மாநிலத்தில் பொது விநியோக முறையின்கீழ் அரிசிக்கு எந்தவிதமான மானியத்தையும் மாநில அரசு ஏற்கவில்லை. உண்மை என்னவென்றால், மேற்கு வங்காள மாநிலத்தில் பொது விநியோக முறையின்கீழ் B.P.L. கார்டுகளுக்கு அரிசி, கிலோவிற்கு 6 ரூபாய் 15 காசு என்ற விலைக்கு கொடுக்கப்படுகிறது. ஆனால் மத்திய அரசு கொடுக்கின்ற விலையோ 5 ரூபாய் 65 காசுதான். ஆகவே மானியம் இல்லை. மத்திய அரசு கொடுக்கின்ற விலையைவிட அதிக விலைக்கு மேற்குவங்காள அரசு கொடுத்து இலாபத்தை சம்பாதித்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, A.P.L. கார்டுகளுக்கு மேற்கு வங்காள அரசு, கிலோவிற்கு 9 ரூபாய் என்ற விலையில் அரிசியை ரேஷன் கடைகளில் விற்கிறது. ஆனால் அதே A.P.L. அரிசியை மத்திய அரசு, கிலோவிற்கு 8 ரூபாய் 15 காசு என்ற விலைக்குத்தான் விற்கிறது. ஆகவே A.P.L. அரிசியையும் மேற்கு வங்காள அரசு கிலோவிற்கு 8 ரூபாய் 15 காசு என்ற விலைக்கு வாங்கிவிட்டு, அதை பொது மக்களுக்கு 9 ரூபாய் வைத்து விற்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலேயும், மேற்கு வங்காள அரசு இலாபம்தான் சம்பாதித்துக்கொண்டிருக்கிறதே தவிர, எந்த மானியச் சுமையையும் ஏற்கவில்லையென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், செல்வி பாலபாரதி குறிப்பிட்டார். ஏற்கெனவே 1,540 கோடி ரூபாய் ஆண்டிற்கு மானியம் ஏற்றுக்கொண்டிருந்தது தமிழக அரசு, அது இப்போது வெகுவாகக் குறைந்துவிட்டது என்றார். இப்போது நாம் ஏற்கின்ற மானியச் சுமை ரேஷன் கடைகளில் 3 ரூபாய் 50 காசுக்கு அரிசியை வழங்கிக்கொண்டிருக்கிறோம். ஆனாலும் மானியச் சுமை ரூ.800 கோடியாக இருக்கிறது என்று சொன்னால், இது கார்டுகளைக் குறைத்ததால் ஏற்பட்டதல்ல. மானியத்தை எந்தவிதத்திலும் குறைத்ததால் ஏற்பட்டது அல்ல. ஆனால் ஏற்கெனவே மாநில அரசே monopoly procurement செய்துகொண்டிருந்தது. மாநில அரசே இங்கே நெல் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்துகொண்டிருந்தது. அப்போது ஒரு கிலோவிற்கு 12 ரூபாய் அடக்கமானது. ஆகவே தமிழக விவசாயிகளிடமிருந்து கிலோவிற்கு 12 ரூபாய் விலை கொடுத்து அரிசியை வாங்கி அந்த அரிசியை 3 ரூபாய் 50 காசு என்ற குறைந்த விலைக்குக் கொடுத்ததால்தான், எல்லாம் சேர்ந்து இவ்வளவு பெரிய மானியச் சுமையை ஏற்க வேண்டியிருந்தது. இப்போது அந்தக் கொள்முதல் விலையை மாற்றிக்கொண்டதால்தான், மானியச் சுமை ஓரளவுக்கு குறைந்து இப்போது 800 கோடி ரூபாய் என்ற அளவிலே நிற்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒரே ஒரு விளக்கம். மேற்கு வங்காள அரசு சென்ற 10 ஆண்டுகளுக்கு முன்னாலேயிருந்து 6 ரூபாய் விலைக்குத்தான் அரிசியை விற்றுக்கொண்டிருக்கிறது - 9 ரூபாயக்குத்தான் விற்றுக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Foot Ball விளையாடும் போது, Basket Ball விளையாடும் போது, same side goal அடிப்பது என்பார்கள். அந்தக் காரியத்தைத்தான் மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்கள் இப்போது செய்துகொண்டிருக்கிறார் மேற்கு வங்காள அரசு இப்போது மட்டுமல்ல, கடந்த 10 ஆண்டுகளாகவே மக்களைப்பற்றி கவலைப்படவில்லை, ஏழைகளைப்பற்றி கவலைப்படவில்லை என்பதை அவரே ஒப்புக் கொண்டுவிட்டார்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை நிதிநிலை மதிப்பீடுமீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துகளைச் சொல்ல நான் விழைகின்றேன். மாண்புமிகு

உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகின்றபோது காவிரி டெல்டா பகுதியினுடைய விவசாயிகள் பாதிப்புபற்றிக் குறிப்பிட்டார். விரிவான விவரங்களை காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் 1924-லிருந்து 1974 வரையில் ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகளையும், அதற்குப் பின்னால் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்திருக்கிற, ஆட்சிகளை அமைத்திருக்கிற முதலமைச்சர்கள் காவிரி நதிநீர்ப் பிரச்சினையை, தமிழகத்தினுடைய உரிமைப் பிரச்சினை, தமிழ்நாட்டினுடைய நலனைப் பாதுகாக்கிற பிரச்சினை என்று எடுத்துக்கொள்ளாததனுடைய விளைவின் காரணமாக, கடந்த 50 ஆண்டுகாலமாக இந்தப் பிரச்சினையை அரசியலாக்கியதன் காரணமாக ஒரு தீர்வும் காணப்படாமல் ஒரு மோசமான நிலைக்கு இந்தப் பிரச்சினை தள்ளப்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்ற அளவிற்குப் போய் இருக்கிறது என்று சொன்னால், இரு மாநில அரசுகளும் சுமுகமான பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மாறாக, வாக்கு வங்கிகளைப் பெறுவதற்காக எடுத்திருக்கிற முயற்சிகள், ஆட்சியில் இருந்தவர்களால், ஆட்சியிலே இல்லாதவர்கள்மீது சுமத்தப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகள் காரணமாக காவிரி நதிநீர்ப் பிரச்சினை இன்றைக்கு மிக மோசமான நிலைமைகளுக்குத் தள்ளப்பட்டு இருக்கிறது. பொதுவாக யார் எந்தக் குற்றச்சாட்டைச் சொன்னாலும், பொதுவாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் தமிழ்நாட்டினுடைய விவசாயிகள்தான். விவசாயத்தைச் சார்ந்திருக்கிற 15 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள், நிலமற்ற தொழிலாளர்கள் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு தேர்தலிலேயும் ஆட்சிக்கு வரக்கூடியவராக இருக்கிறவர்கள் சொல்லக்கூடிய வாக்குறுதிகளை, ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னால் மறந்துவிடுகிற நிலை தொடர்ந்து தமிழகத்திலே நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவிரி நதிநீர்ப் பிரச்சினையிலே அக்கறை செலுத்தவில்லை என்று நான் சொல்லமாட்டேன். காவிரி நதிநீர்ப் பிரச்சினையிலே தமிழ்நாட்டு முதலமைச்சர் எடுத்திருக்கின்ற தைரியமான நடவடிக்கையை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் அதை அரசியல் ஆக்குவதற்காக என்ன முயற்சிகளோ அவற்றை தமிழக அரசு எடுத்திருக்கின்ற விளைவுகளால் இன்றைக்கு நமக்குக் கிடைக்க வேண்டிய நீர்கூட கிடைக்காமல் தடைபட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டையும் நான் சுமத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்க முடியாத நியாயமற்ற குற்றச்சாட்டு. காவிரிப் பிரச்சினையை நிச்சயமாக நாங்கள் அரசியல் ஆக்கவில்லை. எந்தக் காலத்திலும் ஆக்கவில்லை. எப்பொழுதெல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்திருக்கிறதோ, அப்பொழுதெல்லாம் உள்ள சுத்தியோடு காவிரி நீர் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய உரிமையைப் பெறுவதற்காகப் போராடியிருக்கிறது. ஆட்சியில் இல்லாதபோதும் இதற்காக எங்களால் முடிந்ததை நாங்கள் தொடர்ந்து செய்து வந்திருக்கிறோம். ஆகவே தேர்தல் நேரத்தில் வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு, ஆட்சிக்கு வந்தவுடன் வாக்குறுதிகளை மறந்து விட்டோம் என்று கூறுவது சிறிதும் பொருத்தமற்றது. அதை காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் ஏற்கவே முடியாது. 2001-ல் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன், மே மாதம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றேன். உடனே ஜூன் மாதத்திலேயே நம்முடைய உரிமையைப் பெறுவதற்கு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தோம் என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே காவிரி நதிநீர்ப் பிரச்சினையை மற்றவர்கள்தான் அரசியல் ஆக்கப் பார்க்கிறார்களே தவிர, நிச்சயமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இதில் அரசியல் பாராட்டவில்லை. இதை அரசியலாக்க முயற்சிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியைப் பொறுத்த அளவிலே, இயக்கத்தைப் பொறுத்த அளவிலே, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த அளவிலே, தமிழகத்திலே யார் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும் காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் எடுக்கின்ற நடவடிக்கையில் அரசியலைப் புகுத்தாமல் நாங்கள் ஒத்துழைப்புத் தந்திருக்கிறோம்; அதற்கு உடன்பட்டு இருக்கிறோம். மத்திய அரசை அணுகியிருக்கிறோம்; நாடாளுமன்றத்திலே விவாதங்களைக் கிளப்பியிருக்கிறோம். அதை இல்லையென்று மறுக்க முடியாது. காரணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட சமீபத்திலே கூட்டிய சர்வகட்சிக் கூட்டத்திலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முழுமையாகப் பங்குகொண்டு இந்த அரசுக்கு ஆதரவாக இருந்திருக்கிறது என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, டெல்லிக்குப் போன குழுவிலே, எங்களுடைய பொறுப்பு வாய்ந்த கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. நல்லகண்ணு அவர்களே கலந்துகொண்டு, முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிற

வார்த்தைக்கு மதிப்பு அளித்து அந்தக் குழுவிலே சென்று பிரதமரிடம் நீதியை வலியுறுத்தி இருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், குறிப்பாக ஆளுகிற கட்சி என்று சொன்னால், கடந்த 30 ஆண்டுகாலமாக ஆண்டுகொண்டிருக்கிற கட்சி, ஒன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இரண்டாவது திராவிட முன்னேற்றக் கழகம், 20 ஆண்டுகாலம் வேண்டுமானால் காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பிலே இருந்திருக்கலாம். ஆனால் இந்த 30 ஆண்டுகாலம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் அரசியல் ஆக்கியதனுடைய விளைவாகத்தான் இன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டை நாங்கள் சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. இல்லை என்று சொல்ல முடியாது. ஆக அதை அரசியல் ஆக்க வேண்டாம் என்பதற்காக.-(குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போதெல்லாம் காவிரி நதிநீரில் கழகத்தின் உரிமையை நிலைநாட்டவும், உரிய தண்ணீரைப் பெறவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது. உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறோம். Tribunal அமைய காரணமாக இருந்திருக்கிறோம். என்னென்னவெல்லாம் முயற்சிகள் மேற்கொள்ள முடியுமோ அவ்வளவையும் செய்திருக்கிறோம். ஆனால் மாறாக உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கையே வாபஸ் பெற்று விவசாயிகளை வஞ்சித்தது தி.மு.க. என்பதனை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே திரும்பத் திரும்ப மக்களுக்கு, குறிப்பாக காவிரி டெல்டா விவசாயிகளுக்கு துரோகம் இழைத்தது, அநீதி இழைத்தது, தி.மு.க.தான்.

இந்தக் காவிரி நதிநீர் ஆணையத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். Cauvery River Authority அமைந்தபோது, அமர்வதற்கான கருத்துரு கொடுக்கப்பட்டபோது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசில் அங்கம் வகித்தது. 1998 ஆம் ஆண்டில் பி.ஜே.பி. தலைமையிலான மத்திய அரசு அமைந்தபோது நாங்களும் அதில் அங்கம் வகித்தோம். அப்போதுதான், இந்த காவிரி நதிநீர் ஆணையம் அமைப்பதற்கான கருத்துருவைக் கொடுத்தார்கள். அதை நான் ஏற்கவில்லை. அதனால் அன்றைக்கு என்னையே புறக்கணித்துவிட்டு, மத்தியிலே இருந்த எங்கள் கழக அமைச்சர்களையும் புறக்கணித்துவிட்டு, அன்றைக்கு தமிழக



முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்களை டெல்லிக்கு வரவழைத்து அந்த ஒப்பந்தத்தில், அவரிடம் கையெழுத்தைப் பெற்றார்கள். ஆகவே தமிழக மக்களுக்கு அநீதி இழைத்துவிட்டார்கள். பி.ஜே.பி. கட்சி, பி.ஜே.பி. மத்திய அரசு, தமிழக விவசாயிகளுக்கு அநீதி இழைத்து விட்டார்கள் என்று அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகத்தான்தான் நாங்கள் மத்திய அரசுக்கு அன்றைக்குக் கொடுத்த ஆதரவையே வாபஸ் பெற்றோம். எங்களுக்கு மந்திரி பதவிகள் தேவையில்லை என்று (மேசையைத் தட்டும் ஒலி) தூக்கியெறிந்துவிட்டு வெளியேறினோம் என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே எந்தக் காலத்திலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் காவிரி நதிநீர்ப் பிரச்சினையை, இதய சுத்தியோடு, உண்மையாக அணுகியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) திரும்பத் திரும்ப இதை அரசியலாக்கி, அரசியல் இலாபம் பெறுவதற்காக, அரசியல் ஆதாயம் பெறுவதற்காக, தமிழக மக்களை வஞ்சித்து, துரோகம் புரிந்தது தி.மு.க.-தான் என்பதை நான் திரும்பவும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-05*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான, அந்தக் குற்றச்சாட்டுகளினுடைய விளைவுகளுக்குள் நான் போகவில்லை. குறிப்பாக, காவிரி டெல்டா பகுதிகளிலே, சென்ற ஆண்டு......

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் சொன்னவையெல்லாம், வெறும் குற்றச்சாட்டுகள் அல்ல; வரலாற்று உண்மைகள்; பத்திரிகைகளை எடுத்துப் பாருங்கள்; ஆவணங்களை எடுத்துப் பாருங்கள்; அரசுக் கோப்புகளையும் காட்டுகிறோம். பாருங்கள்; நான் சொன்னவை எல்லாம் ரெகார்டுகளில் பதிவாகியுள்ளன.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு, காவிரி டெல்டா பகுதிகளினுடைய விவசாயிகள் குறுவை விவசாயமும் செய்யவில்லை; சம்பா விவசாயமும் முற்றிலுமாக நடைபெறாமல் காய்ந்து கருகிப்போயின. சுமார் இரண்டாயிரம் கோடிகளுக்கு மேற்பட்டிருக்கிற ரூபாய் அளவுக்கு பெருநட்டம் ஏற்பட்டுப்

போனது. எனக்குத் தெரிந்தது மட்டுமில்லை; அங்கே இருக்கக்கூடிய 70 வயது, 80 வயது நிரம்பியிருக்கிற முதியோர்களைக் கேட்டால்கூட இதுபோன்ற குடிதண்ணீர்த் தட்டுப்பாடு வந்த வரலாறு, இன்றையதினம் வரையிலும் தீர்க்க முடியாத மிகப் பெரிய சோதனைகள் ஏற்பட்டதாகச் சொல்வார்கள். ஆனால் கடந்த [illegible] இயக்கங்கள், தமிழகத்தை ஆண்டு வந்தபோதுகூட, காவிரித் தண்ணீரை, கர்நாடக அரசிடம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, இது ஏற்கெனவே விரிவாக விவாதிக்கப்பட்டிருக்கிற பிரச்சினை. அவர்கள் தெளிவாக பல முறை விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். மறுபடியும் மறுபடியும் அதையே கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, நான் அந்த விளக்கத்துக்குப் போகவில்லை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நிறைய அறிக்கைகளைப் படித்து வேறு விளக்கத்துக்குப் போகிறீர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உண்மையை மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் உணர வேண்டும். எதற்காக வேண்டும் என்றால், காலம் வேறு அப்போது இருந்த தலைவர்கள் வேறு. முன்பு கர்நாடகத்தில் இருந்த முதலமைச்சர்கள் ஓரளவு நியாய உணர்வு படைத்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் முழுமையாக தமிழகத்திற்குத் திறந்துவிட வேண்டிய தண்ணீரை காவிரியில் திறந்துவிட மறுத்தாலும், ஓரளவாவது தண்ணீரைத் திறந்துவிட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டார்கள். ஆகவே சிறிது அளவாவது தண்ணீரைத் திறந்து விட்டார்கள். ஆனால் இன்றையதினம் நிலைமை முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. இன்றைக்கு கர்நாடகத்தில் முதலமைச்சராக இருப்பவர், தமிழகத்துக்குத் தண்ணீர் திறந்து விடமாட்டேன் என்று கூறுகிறார். அத்தகைய நிலையில், தமிழக அரசைப் பொறுத்தவரை ஆகப் போவது? நாங்கள் என்ன செய்ய முடியும்? என்னென்ன செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்திருக்கிறோம். உச்சநீதிமன்றத்தை அணுகியிருக்கிறோம், Tribunal-ஐ அணுகியிருக்கிறோம், Cauvery River Authority-யை அணுகியிருக்கிறோம். யார் என்ன உத்தரவு பிறப்பித்தாலும், கர்நாடக அரசு அதை மதிக்காமல் [illegible]



கேட்டாலும், எவ்வளவு கேட்டாலும் தண்ணீரைத் திறந்துவிட மாட்டோம் என்கிறார்கள். இத்தகைய நிலையில் நாங்கள் என்ன செய்ய முடியும்?

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இதில் கவனம் நான் அரசியல் பேசவில்லை. முதலமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று ஆரம்பத்திலே நான் என்னுடைய பேச்சிலே தெளிவுபடக் கூறியிருக்கிறேன். ஆக, சென்ற ஆண்டு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிற அதே மாவட்டத்தினுடைய விவசாயிகளுக்கு மீண்டும், இன்றையதினத்திலே அதே நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய அரசு, மாற்றுப் பயிர்த் திட்டத்திற்குப் போக வேண்டும் விவசாயிகள் என்று சொல்கிறார்கள்; மாற்றுப் பயிர்த் திட்டத்திற்கு எப்படிப் போவது? என்ன திட்டத்தில் செயல்படுவது? அங்கே, காவிரிப் படுகையாக இருக்கிறதே தவிர, சமவெளிப் பகுதியாக இருக்கிறதே தவிர, எங்கே தோண்டினாலும் உப்புநீர்தான் வருகிறது. ஆகவே 'போர் செட்' அத்தனையையும் இன்றையதினத்திலே பார்த்தால், salt water தான் வருகிறது. மாற்றுப் பயிர்த் திட்டத்தை எப்படிச் செய்வது? ஆகவே மாற்றுப் பயிர்த் திட்டத்தை நம்முடைய அரசு அறிவித்ததனுடைய விளைவு, கர்நாடக அரசு முற்றிலுமாக அவர்கள் எடுத்த நடவடிக்கையிலே, அவர்களுக்குத் தண்ணீரே கொடுக்க வேண்டாம் என்கிற ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள். இப்படிப்பட்ட நிலையிலேயிருந்து விவசாயிகளைக் காப்பாற்றதான்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுப் பயிர்த் திட்டத்தை, இந்த அரசு அறிவித்ததால், கர்நாடக அரசு தண்ணீரைத் திறந்துவிடப் போவதில்லை என்று சொல்லவில்லை. கர்நாடக அரசு, திட்டவட்டமாக தண்ணீரைத் திறந்துவிட முடியாது என்று தெரிவித்ததால், ஏற்கெனவே இரண்டாண்டு காலமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, ஓரளவாவது வருமானம் கிடைக்கட்டுமே என்ற நல்லெண்ணத்தில்தான் இந்த அரசு, மாற்றுப் பயிர்த் திட்டத்தை அறிவித்தது. இன்னும் சொல்லப்போனால், இந்த மாற்றுப் பயிர்த் திட்டத்தினால் விவசாயிகளுக்கு இலாபம்தானே தவிர, எந்த நஷ்டமும் இல்லை. நெல் சாகுபடி செய்வதைத் தவிர, வேறு எத்தனையோ பயிர்கள் இருக்கின்றன; இன்னும் இலாபத்தை அளிக்கக்கூடிய பயிர்கள் இருக்கின்றன. அத்தகைய பயிர்களைத்தான் சாகுபடி செய்யும்படி

விவசாயிகளுக்கு நாங்கள் அறிவுரை வழங்கியிருக்கிறோம். ஆகவே ஒரு நிலைமையைச் சமாளிக்க என்ன வழி என்பதை ஆராய்ந்து பார்த்து, ஒன்றுமே இல்லாமல் போவதற்கு, ஓரளவாவது விவசாயிகளுக்கு வருமானம் கிடைக்கட்டுமே என்றுதான் இந்த மாற்றுப் பயிர்த் திட்டத்தை அறிவித்திருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-10*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் சொல்கிறேன். அந்த மாவட்டத்தில் ஓர் உயர்மட்டக் குழுவாவது, ஒரு விவசாய கமிட்டியாவது அமைத்து, என்ன செய்யலாம் என்று நீங்கள் நேரடியாக அந்த விவசாயிகளை கலந்து ஆலோசித்து செய்தால் அது பயனுள்ளதாக இருக்கும் என்பதைத்தான் உங்கள் கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோன்று ஒரு விஷயம்....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் இருக்கின்ற விவசாயப் பல்கலைக்கழகத்திலுடைய விவசாய விஞ்ஞானிகள் அங்கு சென்று பல நாட்கள் விவசாயிகளின் கலந்து, குறைந்த நீரில் மாற்றுப் பயிர் என்னென்ன செய்தால் தற்போதைய விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்றுதான் அவர்கள் ஆய்வு செய்து கண்டறிந்தார்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவில் 28 மாநிலங்கள் இருக்கின்றன. அநேகமாக 28 மாநிலங்களிலும் அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள்; ஆசிரியர்கள் இருக்கிறார்கள்; தொழிற்சாலைகளில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 28 மாநிலங்களிலும் இருக்கக்கூடிய முதலமைச்சரிடத்திலேயும் கோரிக்கை வைக்கப்படுகிறது. வேலைநிறுத்தம் நடைபெறுகிறது; போராட்டம் நடைபெறுகிறது; பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஏற்படுகிறது. அண்டை மாநிலமாக இருக்கிற கேரளாவில்கூட 31 நாட்கள் வேலைநிறுத்தம் நடைபெற்றது. அந்த முதலமைச்சர் அழைத்துப் பேசி, அந்தச் சங்கங்களோடு ஒற்றுமையாக தன்னுடைய தீர்வுகளைக் கண்டார். அங்கேயும் நிதிநிலை நெருக்கடி இருக்கிறது. ஏதோ அது தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியா முழுவதும் நிதிநிலை நெருக்கடி இருக்கிறது. இன்றையதினம் பணப் புழக்கம் கிடையாது. கிராமப்புறங்களிலே வேலைவாய்ப்புகள்



கிடையாது. விவசாயிகளிடத்திலே கையில் காசு இல்லை. இங்கே பார்த்தோம் என்று சொன்னால், தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு விவசாயிகள், கிராமப்புறத்தில் வாழக்கூடியவர்கள் எல்லாம், படித்தவர்கள் எல்லாம்கூட வெளி மாநிலங்களுக்கும், மாவட்டங்களுக்கும் குடிபெயர்ந்து சென்று வாழ்க்கை நடத்த வேண்டிய அவசியம் எல்லாம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இது யதார்த்த நிலைமை. நாங்கள் சொல்கிறபோது, நீங்கள் ஏதோ, எதிர்க்கட்சி என்கிற முறையிலே எடுத்துக்கொள்ளாதீர்கள். ஒரு எதிர்க்கட்சி சொல்வதைப் பரிசீலிக்கக்கூடிய அளவிற்கு ஆளும் கட்சியான உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய அவசியம் எங்களுக்கு இருக்கிறது. ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் யாராக இருந்தாலும்கூட, ஓர் அரசினுடைய குறைகளை, குற்றச்சாட்டுகளை, ஜனநாயகப்பூர்வமாக சொல்கின்றபோது, தங்களுடைய ஆட்சியின்மீது களங்கத்தை அவர்கள் உருவாக்க முடியாது. நாங்கள் சொல்வது என்பது, இந்த ஆட்சியின்மீது காழ்ப்புணர்ச்சியால் சொல்லவில்லை; கடமை உணர்வோடு சொல்கிறோம். நீங்கள் பரிசீலித்தால் பரிசீலியுங்கள்; பரிசீலிக்காவிட்டால் போங்கள். ஆக இன்றைக்கு அப்படிப்பட்ட மோசமான நிலைமைகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கர்நாடகத்தைப் பற்றிச் சொன்னீர்கள்; மேற்கு வங்கத்தைப் பற்றிச் சொன்னீர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, இரண்டு மணித்துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதி அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** இன்னும்கூட பார்த்தோம் என்று சொன்னால், கர்நாடகத்திலே, மேற்கு வங்கத்திலே எஸ்மா சட்டத்தையோ, டெஸ்மா சட்டத்தையோ எந்தத் தொழிலாளர்கள் மீதும் போட்டு பழி வாங்கப்படவில்லையே! இந்த நிதிநிலையிலே, உலக வங்கி ஒப்பந்தம் I.M.F.-ன் ஒப்பந்தம் இருந்தாலும் சரி, ஆலைகள் இருந்தாலும் சரி, தொழிற்சாலைகள் இருந்தாலும் சரி, மேற்கு வங்கத்திலே 16 ஆண்டு காலமாக நிதிநிலை சரியாக இல்லை...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு திருத்தம். முதலில் மாண்புமிகு பழனிசாமி அவர்கள் இந்தியாவில் 28 மாநிலங்கள் என்று குறிப்பிட்டார். இந்தியாவில் 29 மாநிலங்கள் இருக்கின்றன. (குறுக்கீடு) டெல்லியையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். 29 என்று. அது போக, மற்ற மாநிலங்களில் எல்லாம் வேலைநிறுத்தம் செய்தபோது, மாநில அரசுகள், அரசு ஊழியர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள்; இங்கே ஏன் செய்யவில்லை என்று கேட்டார். நாங்கள் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டுதான் இருந்தோம்; பலமுறை பேச்சுவார்த்தை நடத்தினோம். அதையும் மீறி அரசு ஊழியர்கள், நாங்கள் வேலைநிறுத்தம் செய்வோம் என்று அறிவித்தார்கள்; வேலைநிறுத்தம் செய்தார்கள். அப்பொழுதும் மாநில அரசு எதுவும் செய்யவில்லை. அவர்கள்தான் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றது. பின்னர் மாநில அரசு என்ன செய்ய முடியும்? எங்கள் கையைவிட்டு உச்ச நீதிமன்றத்திற்குப் போய்விட்டது. உச்ச நீதிமன்றம் என்ன செய்தது? அரசு ஊழியர்களுக்கு வேலைநிறுத்தம் செய்ய உரிமையே கிடையாது என்று உச்ச நீதிமன்றம் கூறிவிட்டது. நாங்கள் என்ன செய்வது?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** வேலைநிறுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே நீங்கள் கைது பண்ணியதால்தானே வேலைநிறுத்தம் வந்தது? முன்னாலேயே கைது பண்ணியது சரியா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் 2 ஆம் தேதி முதல் வேலைநிறுத்தம் தொடங்கப்படும் என்று அறிவித்துவிட்டு, அதற்கு ஒரு நாள் முன்னதாகவே, 1 ஆம் தேதியே வேலைநிறுத்தத்தைத் தொடங்கிவிட்டார்கள். அதன் பிறகுதான் கைது செய்யப்பட்டார்கள். இதுதான் உண்மை. (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1-15

**திரு. ஜி. பழனிசாமி:** இரண்டு இலட்சம் பேரை வேலைநீக்கம் செய்தீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** வேலைநீக்கத்தினுடைய உத்தரவு யார் யாருக்கு எல்லாம் வந்தது?



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் 1½ இலட்சம் பேரை வேலையை விட்டு நீக்கம் செய்துவிட்டோம், 2 இலட்சம் பேரை வேலைநீக்கம் செய்துவிட்டோம் என்கிறார்கள். ஏற்கெனவே இந்த வேலைநிறுத்தம் செய்வதற்கு முன்பாக எத்தனைபேர் தமிழக அரசு பணியில் இருந்தார்களோ அத்தனைபேரும் இப்போது பணியில் இருக்கிறார்கள். *5729 பேரைத் தவிர, இந்த *5729 பேரின் வழக்குகளை உச்ச நீதிமன்றத்தின் ஆணைப்படி மூன்று நீதிபதிகள் விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கையை நாங்கள் எதிர்பார்த்து இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, ஒரு நிமிடத்தில உரையை முடித்துவிடுங்கள். 1½ மணிக்குள் முடிக்க வேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன். இந்த 6,072 பேர்களையும் தன்னுடைய சாட்சிகளைக்கூட அவர்கள் சொல்வதற்கு அரசாங்கத் தரப்பிலிருந்து வக்கீல்களை நியமித்து எதிர்த்து வாதாட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் மேல் அக்கறை இருந்திருந்தால நீங்கள் அதையெல்லாம்கூட புறக்கணித்து—அனுமதித்து இருக்கக்கூடாதா? முற்றிலுமாக தொழிலாளர்களை...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போது நீதிமன்றத்தை நாடிச் சென்று விட்டார்களோ வழக்கை அங்கே சந்திப்பதுதான் முறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, கடைசி வாக்கியத்தோடு முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் உரையை முடித்துவிடுகிறேன். அதோடுமட்டுமல்ல. ஓர் அரசுக்கும், ஓர் அரசு ஊழியருக்கும் நடக்கின்ற ஒரு போராட்டத்திலே, வேலைநிறுத்தத்திலே ஒரு தார்மீகமான முறையிலே, பொறுப்பு வாய்ந்த கட்சிகள், பொறுப்பு வாய்ந்த தலைவர்கள், அவர்கள் எல்லாம் பேச்சுவார்த்தை மூலமாக தீர்வு காணப்பட வேண்டும், அரசு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டால்கூட 'POTA' சட்டத்தை அரசியல் கட்சிகள் மேலே (குறுக்கீடு) போடப்பட்டு இருக்கிற அந்த எஸ்மா சட்டத்தையாவது நீங்கள் வாபஸ் பெற வேண்டும். (குறுக்கீடு) டெஸ்மா

---

* 7—11—2003 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் திருத்த அறிக்கையில் தெரிவித்ததற்கிணங்க மாற்றம் செய்யப்பெற்றுள்ளது.

சட்டத்தை வாபஸ் பெற வேண்டும். தொழிலாளர்களிடம் மட்டுமல்ல, அரசியல் கட்சிகளையும் பழிவாங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு உங்களுடைய ஆட்சியிலே நீங்கள் நடந்திருக்கிறீர்கள் இந்த இரண்டு ஆண்டு காலத்திலே.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெஸ்மா சட்டம் செல்லுபடியாகாது என்றோ, அதை வாபஸ் பெற வேண்டும் என்றோ உச்ச நீதிமன்றமே கூறவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. அரசன். (குறுக்கீடு) சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு)*

**திரு. வை. சிவபுண்ணியம்:** *பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வேண்டுகோள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நேரம் இல்லை. (குறுக்கீடு) உங்களுக்கு நேரம் இல்லை. திரு. அரசன். (குறுக்கீடு) பேசி முடியுங்கள். (குறுக்கீடு) 1.30 மணிக்கு முடிக்க வேண்டும், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அரசன், பேசுங்கள். திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்வார், உட்காருங்கள்.*

**திரு. ப. அரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இரண்டு நிமிடங்களில் உங்களுடைய கோரிக்கையை மட்டும் சொல்லுங்கள்.*

**திரு. ப. அரசன்:** *எழுதிக் கொடுத்திருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *எழுதிக் கொடுத்திருக்கிறீர்களா? போதும், உட்காருங்கள், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவையிலே ஏற்கெனவே தெரிவித்தபடி 198.83 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், மீதமுள்ள 79.53 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கக்கூடிய அளவிற்கு மொத்தம் 278.36 கோடி ரூபாய் நிதி ஒதுக்குவதற்கான காரணங்களையெல்லாம் அவையிலே நான் தெளிவாக ஏற்கெனவே எடுத்துக் கூறியிருக்கின்றேன். மாண்புமிகு*



உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை இங்கே எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களும், C.P.M. இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் பேசுகின்றபோது, அவர்கள் இந்த அரசு ஊழியர்கள் பிரச்சினையைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். மிகத் தெளிவாக பலமுறை அரசு ஊழியர்களோடு பேச்சுவார்த்தை நடத்தியபோது, அரசாங்கத்தினுடைய நிதிநிலை சீரழிந்த நிலையிலே கடந்த ஆட்சியால் விடப்பட்டுவிட்டு செல்லப்பட்டிருக்கிறது. நிதிநிலை சீரான பிறகு அரசு ஊழியர்களுடைய பிரச்சினை நல்லமுறையில் தீர்க்கப்படும் என்ற வாக்குறுதியைக்கூட நாங்கள் அரசு ஊழியர்களுக்குக் கொடுத்தோம். ஆனாலும்கூட, அரசு ஊழியர்கள் பிரச்சினையை இத்தகைய பெரும் பிரச்சினையாக ஆககியதும், அரசு ஊழியர்களைத் தூண்டிவிட்டு, அவர்கள் நீதிமன்றம் செல்லககூடிய சூழ்நிலையையும் உருவாக்கி, இத்தகைய நிலைக்கு உள்ளாக்கியது எல்லாம் அரசு ஊழியர்களைத் தூண்டிவிட்ட தி.மு.க.-வை அந்த தி.மு.க.விற்கு ஒத்துழைத்த C.P.M , குறிப்பாக C.P.I. போன்ற அரசியல் இயக்கங்களைத்தான் சாரும் என்பதை நான் இங்கே தெளிவாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு ஊழியர்களை நாங்கள் பழிவாங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு எந்த காலத்திலும் எந்த நடவடிக்கையையும் இந்த அரசு எடுக்கவில்லை. அவர்கள் நல்லமுறையிலே பிரச்சினைகளை உணர்ந்து இருந்தார்கள். அரசுக்கு நிதி ஆதாரம் இல்லையென்பதனையும் அவர்கள் உணர்ந்து இருந்தார்கள் (குறுக்கீடு) மைய அரசு மாநில அரசுக்குத் தர வேண்டிய நிதியைத் தராததால் (குறுக்கீடுகள்) I am not yielding. மைய அரசே (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் கடைசியில் பேசுங்கள்.

*பிற்பகல் 1-20*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** *தி.மு.க.-வின் பின்னால் போனது என்பது சரியல்ல.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மைய அரசு, தமிழ்நாட்டிற்குத் தர வேண்டிய, ஏற்கெனவே ஒதுக்குவதற்கு ஒத்துக்கொண்ட பணத்தைக்கூட தராத நிலை. அங்கே பி.ஜே.பி. அரசோடு கூட்டாளியாக இருக்கின்ற தி.மு.க.-வினுடைய தூண்டுதலால் உருவாக்கபபட்டது என்ற குற்றச்சாட்டைக்கூட நான் சென்ற கூட்டத் தொடரிலேயே இங்கு தெளிவாகக் கூறியிருந்தேன். அந்த நிலையில், ஒருபுறம் மைய அரசில் அங்கம் வகிக்கின்ற தி.மு.க.,*

மாநில அரசுக்குத் தர வேண்டிய, முறைப்படி தர வேண்டிய நிதியைக்கூட தராமல் இருப்பதற்கு வேண்டிய உத்திகளை எல்லாம் கையாண்டு, நிதி போதிய அளவுக்கு தமிழக அரசுக்கு மைய அரசிடமிருந்து சென்று சேரவில்லை என்றால், அங்கு வளர்ச்சித் திட்டங்கள் தடைபடும். அதேபோல அரசு ஊழியர்கள் பிரச்சினை போன்ற பிரச்சினைகள் எல்லாம் உருவாகும். அப்படி அது உருவாக வேண்டும் என்ற அரசியல் காழ்ப்புணர்ச்சி சதித் திட்டத்தோடு, தி.மு.க., மைய அரசை ஆளுகிற தி.மு.க. செயல்பட்ட காரணத்தால், நிதிப் பிரச்சினை அதிகமாக மாறியது. இந்த நிலையில்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்த அளவிற்கு அரசு ஊழியர்களுக்கு உதவ முடியுமோ அந்த அளவிற்கு அவ்வப்போது சலுகைகளை அறிவித்து, அவர்களுக்கு பண ஆதாரங்களைக்கூட, அவர்கள் மகிழக்கூடிய அளவிற்கு முதலாம் ஆண்டிலேயே தாத்தான் செய்தார்கள். ஆனாலும்கூட நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, குழந்தையைக் கிள்ளிவிட்டு, தொட்டிலை ஆட்டுகிற அணுகுமுறையில் இருக்கிற தி.மு.க., மைய அரசிலே உட்கார்ந்துகொண்டு, மாநில சுயாட்சிபற்றிப் பேசுகிற தி.மு.க., மாநில அரசுக்கு உள்ள அதிகாரத்தை எல்லாம் பறிக்கக்கூடிய மைய அரசினுடைய அணுகுமுறைக்கு, உடந்தையாக ஒருபுறம் இருந்துகொண்டு, மறுபுறம் போதிய நிதி நமக்குக் கிட்டாத நிலையை உருவாக்கியது. அரசு ஊழியர்களிடம் இது குறித்து நாங்கள் தெளிவுபடுத்தினோம். உணர்ந்து இருந்தார்கள். மிகவும் தெளிவுபடுத்தினோம். அவர்கள் தெள்ளத் தெளிவான நிலையிலே இருந்தபோதுதான் அரசியல் கட்சிகளால், அரசு ஊழியர்கள் தமிழகத்தில் தூண்டப்பட்டார்கள். அரசியல் கட்சிகள்தான், இன்று எதிர்க்கட்சிகள்தான், குறிப்பாக தி.மு.க., C.P.I., C.P.M.., பாட்டாளி மக்கள் கட்சி, காங்கிரஸ் போன்ற எதிர்க்கட்சிகள்தான், அரசு ஊழியர்கள் பிரச்சினைக்கு முழு முழு காரணம் என்பதனை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடு) அரசு ஊழியர்களைத் தூண்டிவிடுகிற — அரசு ஊழியர்கள் பிரச்சினையில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததுகூட, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am not yielding. They may be asked to sit.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் திரு. கருணாகரன், அவர் பேசி முடிக்கட்டும், பேசி முடிக்கட்டும். உங்கள் கருத்தை கடைசியாகச் சொல்லுங்கள்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு நிதி அமைச்சருடைய பதிலுரை முடியட்டும், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக C.P.M. இயக்கத்தைப் பொறுத்தவரைக்கும், அரசு ஊழியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு தாயுள்ளத்தோடு உறுதுணை புரிகின்ற புரட்சித் தலைவியின் பின்னால் அரசு ஊழியர்களை, இருக்கின்ற அரசு ஊழியர்களை தூண்டிவிட வேண்டுமென்ற நோக்கம், தி.மு.க.வுக்கு உண்டு. தி.மு.க.வுக்கு பிரத்யேகமாக வால் பிடிக்கின்ற C.P.I. இயக்கம், இந்தப் போராட்டத்தை அதிகமாகத் தூண்டியது. (குறுக்கீடு) இல்லை. இல்லை. நான் சொல்கிறேன், காரணம் சொல்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை, உட்காருங்கள்

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். ஆதாரத்தோடு சொல்கிறேன். தி.மு.க. இந்த அரசுக்குத் தொல்லை கொடுக்க வேண்டுமென்று—நான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்) நான் பேசுவதைக் கேளுங்கள். உங்களுக்கு ஏன் கோபம் வருகிறது? நீங்கள் ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்? நீங்கள் கோபபபடுவதறகும், ஆத்திரப்படுவதற்கும் காரணம், உங்கள்மீது குற்றம் இருக்கிறது. நீங்கள் தூண்டியிருக்கிறீர்கள். நீங்கள் அச்சபபடுகிறீர்கள். உங்களுடைய தூண்டுதலை, உங்களது குற்றத்தை மக்களுக்குச் சொலகிறபோது உங்களுக்குக் கோபம் வருகிறது. (குறுக்கீடுகள்) என்னை சொல்லி முடிக்க விடுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி அவர்கள் தூண்டினார்கள் என்பதற்கு ஓர் உதாரணத்தைச் சொல்ல விருமபுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், திரு. சிவபுண்ணியம், திரு. இராசேந்திரன், திரு. நன்மாறன் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, எப்படித் தூண்டினார்கள் (குறுக்கீடுகள்) நான் மிக ஆணித்தரமாகச் சொல்கிறேன்.

அரசு ஊழியர்களை, அரசு ஊழியர்களைத் தூண்டிவிடுவதற்கு C.P.I. இயக்கம் பிரதான பங்கை வகிக்கிறது என்பதை நான் குற்றச்சாட்டாகவே சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் C.P.I.-ஐச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. சிவபுண்ணியம் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** கோட்டையிலே குறிப்பாக, தலைமைச் செயலகத்தில், அரசு ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோது, நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். (குறுக்கீடுகள்) Sir, ஆதாரத்தோடு சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேசிமுடியுங்கள். (குறுக்கீடுகள்) திரு. கருணாகரன், உட்காருங்கள் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். திரு. கருணாகரன், உட்காருங்கள். திரு. நன்மாறன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைமைச் செயலகத்தில் அரசு ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோது.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பேசி முடித்த பிறகு நான் உங்களைப் பேச அனுமதிக்கிறேன். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். கேளுங்களேன். காது கொடுத்துக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், பேசவிடாமல் நீங்கள் மறிப்பது சரியல்ல. பேசவிடாமல் தடுப்பது சரியல்ல. அவர் பேசி முடித்ததற்குப் பிறகு உங்களை அனுமதிக்கிறேன். உங்களுக்கு சலுகை கொடுக்காமல் இருந்தால் பிறகு கேளுங்கள்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அவர், பேச்சைத் தொடர்ந்து தடுத்துக் கொண்டேயிருந்தால் எப்படி? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, C.P.M. இயக்கத்தைச் சேர்ந்த . . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசவிடாமல் தடுக்காதீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேசிமுடிக்கட்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுவதைத் தொடர்ந்து தடுத்து வருகிறார், திரு. சிவபுண்ணியம் அவர்கள். திரு. சிவபுண்ணியம் அவர்களை நீங்கள் மிக அமைதியாக அவையிலே அமரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** என்னைப் பேசவிடாமல் தடுத்துக்கொண்டே இருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்தவுடன் உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன்.

**HON. THIRU C. PONNAIYAN:** You listen to me. You hear fully, what I am telling.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், அமைச்சர் அவர்கள் இன்றைக்கு பிற்பகல் 1-30 மணிக்குள் பேசி முடிக்க வேண்டும். ஆகவேதான் கொஞ்சம் துரிதமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். அவர் பேசி முடித்தவுடன் நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் பேசி முடித்த பிறகு கேளுங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்தவுடன் நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தில் அரசு ஊழியர்கள் பேச்சுவார்த்தை, அரசு அதிகாரிகள் மட்டத்திலும், அமைச்சர் என்ற முறையிலே என் மட்டத்திலும், (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மட்டத்திலும் . . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், திரு. சிவபுண்ணியம், தயவுசெய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் பேசி முடித்த பிறகு அவர்கள் பேசட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்ததற்குப் பிறகு நீங்கள் விளக்கம் கேட்பதற்கு அனுமதிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தில் இந்தப் போராட்டத்தை போராட்டக் குழுவினர் நடத்தியபோது, தலைமைச் செயலகத்திலே இருந்த அரசு ஊழியர்களினுடைய சங்கத் தலைவர்கள் ஒரு தினத்திற்கு முன்பாகவே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டது நாடறிந்த உண்மை. அப்படி இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு, பல பிரச்சினைகளை அவர்கள் உருவாக்கி, அரசு அவர்களுக்கு நிதிநிலை சீரான பிறகு அவர்களுக்கு வேண்டிய உதவியைத் தரும் என்ற வாக்குறுதியைத் தந்திருந்த போதிலும், அதை ஏற்கக்கூடாது என்று அவர்களுக்குச் சொல்லி, அந்த அரசு ஊழியர்களை போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என்று தி.மு.க.வினர் தூண்டினார்கள். அதற்கு முக்கியமான உறுதுணையாக இருந்தது C.P.I இயக்கத்தைச் சேர்ந்த, தலைமைச் செயலகத்திலே பணியாற்றுகின்ற (குறுக்கீடுகள்) அரசு ஊழியர்கள், அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் ஆதாரத்தோடு சொல்கிறார். திரு. கருணாகரன், அவர் ஆதாரத்தோடு சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அரசைப்பற்றி கொச்சை கொச்சையாகப் பேசினார்கள். (குறுக்கீடுகள்) உங்களது பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. நீதிமன்றத்திற்கு பிறகு இந்த வழக்கை எடுத்துச் சென்றதும் C.P.I. போன்ற இயக்கங்களுடைய தூண்டுதலால்தான் அது நீதிமன்றத்திற்குச் சென்றது. C.P.I. இயக்கத்தை ஆதரிக்கும் வழக்குரைஞரே அதில் ஆஜரானார். கோட்டையிலே இந்தப் போராட்டத்தை நடத்தியவர்களுக்கு ஆலோசனை சொன்னது C.P.I. இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்; அவர்கள்தான் போராட்டத்தைத் தூண்டிவிட்டார்கள். கொச்சை கொச்சையாக, அரசுக்கு எதிராக, அமைச்சர்களுக்கு எதிராக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எதிராக, தேவையில்லாத, நாகூசக்கூடிய பேச்சினை அந்த ஊழியர்கள் கூட்டத்தில் பேசியவர்களும்



C.P.I./C.P.M. இயக்கத்திற்கு ஆதரவு தருகின்ற, C.P.I./C.P.M. இயக்கங்களின் கூட்டங்களில் எல்லாம் பங்கேற்கின்ற அரசு ஊழியர்கள் என்பதனை நான் (குறுக்கீடுகள்) அதுதான் நடந்தது. இந்த நிலையில் இந்தப் பிரச்சினைக்குக் காரணமே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் பிரச்சினையை தமிழகத்தில் இவ்வளவு பெரிய பிரச்சினை ஆக்கியது, திமுகவுக்கு உறுதுணை போயிருக்கின்ற, திமுகவுக்கு துதி பாடுகிற C.P.I. இயக்கத்தைச் சார்ந்த...

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வாயிலிருந்து உண்மையே வராதா!

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** காரணம், உண்மையை நீங்கள் பேசவில்லை. தமிழக மக்களுக்கு துரோகம் செய்யக்கூடிய அளவுக்குச் செயல்படுகின்ற தி.மு.க.வுக்கு C.P.I. உறுதுணை போகிறது; C.P.I. (M)-ம் உறுதுணை போகிறது. (குறுக்கீடுகள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், திரு. கருணாகரன், உட்காருங்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அந்தக் குற்றச்சாட்டு உண்மையான குற்றச்சாட்டு. (குறுக்கீடு) அந்தக் குற்றச்சாட்டு உண்மையான குற்றச்சாட்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், 1½ மணிக்கு முடிக்க வேண்டும். (குறுக்கீடு).

**திரு. ஜி. பழனிசாமி:** அரசியல் கட்சிகளைக் களங்கப்படுத்துவது மாதிரி சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். பிறகு விளக்கம் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அரசியல் கட்சியையும் நான் களங்கப்படுத்தவில்லை. தமிழக அரசியலை ஒரு குழம்பிய குட்டையாக ஆக்க வேண்டும், அரசு ஊழியர்களை அதற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற சதித் திட்டத்தைத் தீட்டிய தி.மு.க.வுக்கு C.P.I., C.P.I.(M) நீங்கள் உறுதுணை போனீர்கள். இது உண்மை (குறுக்கீடுகள்) விவாதத்தை நான் முடிக்கிறேன். என் உரையை அவை ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.]

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை. திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை. திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"2003-2004 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 3-11-2003 ஆம் தேதியிட்டப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2003-2004 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் முழுமையாக வழங்கப் பெறுகின்றன.



**நிறைவேற்றப்பெற்ற 2003-2004 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 3 | நீதி நிருவாகம் | 42,08 | .. | .. |
| 4 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 1,14,34 | .. | .. |
| 5 | வேளாண்மைத் துறை | 17,02,52 | .. | .. |
| 6 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-கால்நடை பராமரிப்பு | 82,50 | .. | .. |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 25,00 | .. | .. |
| 12 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 23,31,80 | .. | .. |
| 13 | எரிசக்தித் துறை | 200,00,00 | .. | .. |
| 15 | நிதித்துறை | 8,00 | .. | .. |
| 16 | கைத்தறி, கைத்திறன் துணி நூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணிநூல் | 120,00,00 | .. | .. |
| 18 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 2,53,65 | .. | .. |
| 19 | உயர்கல்வித் துறை | 89,90 | 50,00 | .. |
| 20 | நெடுஞ்சாலைகள் துறை | .. | 25,59,15 | .. |
| 21 | உள்துறை-காவல் | 3,64,34 | .. | .. |
| 26 | தொழில் துறை | | | 6,00,28 |

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 27 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை செய்தி மற்றும் விளம்பரம் | 5,24,50 | .. | .. |
| 29 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை எழுதுபொருள் மற்றும் அச்சு | 1,59,08 | 13,00 | |
| 31 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 85,64 | .. | .. |
| 35 திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை | 7,50,00 | .. | .. |
| 37 பொதுத் துறை | 26,00 | .. | .. |
| 38 பொதுப் பணித் துறை | 30,58,65 | 45,20,50 | .. |
| 43 சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை | 7,24,60 | 50,00 | .. |
| 44 தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 40,00 | .. | .. |
| 47 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | .. | 1,30,00 | .. |
| 49 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 75,00,00 | .. | .. |
| பெரு மொத்தம் | 498,82,60 | 73,52,95 | 6,00,28 |

## 7. அறிவிப்புகள் — தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி

### (ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7-11-2003) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

25. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்-அலுவல்முறை ஒழுங்குமுறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 5-7-2002 ஆம் நாளிட்ட எண் TNERC/CBR/1/1-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

26. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் [illegible] விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 5-7-2002 ஆம் நாளிட்ட எண் TNERC/R/2-ன் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59-வது பிரிவின்கீழ்) பேரவையுன் வைக்கப்பெற்றது.

27. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய [illegible] விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 5-7-2002 ஆம் நாளிட்ட எண் TNERC/ACR/3-1-ன் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59-வது பிரிவின்கீழ்) பேரவையுன் வைக்கப்பெற்றது.

28. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் கட்டண ஒழுங்குமுறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 19-7-2002 ஆம் நாளிட்ட எண் TNERC/TR/5/1-ன் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59-வது பிரிவின்கீழ்) பேரவையுன் வைக்கப்பெற்றது.

29. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கட்டணம் மற்றும் ஆதார ஒழுங்குமுறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 23-9-2002 ஆம் நாளிட்ட எண் TNERC/Regulations/F&F/4-1-ன் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59-வது பிரிவின்கீழ்) பேரவையுன் வைக்கப்பெற்றது.

30. 2002-2003 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின் வாரியத்தின் இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவையுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

31. 2002-2003 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு பாடநூல் கழகம் [illegible] மன்றத்தின் ஆண்டறிக்கை (1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு [illegible] கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16-வது பிரிவின்கீழ் பேரவையுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)



**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

38. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்தி [illegible] அறிக்கை (2003-2004)

39. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பதாவது அறிக்கை (2003-2004)

40. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்தி ஒன்றாவது அறிக்கை (2003-2004)

41. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்தி இரண்டாவது அறிக்கை (2003-2004)

42. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்தி மூன்றாவது அறிக்கை (2003-2004)

43. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்தி நான்காவது அறிக்கை (2003-2004)

44. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்தி ஐந்தாவது அறிக்கை (2003-2004)

45. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்தி ஆறாவது அறிக்கை (2003-2004)

46. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்தி ஏழாவது அறிக்கை (2003-2004)

47. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தி இரண்டாவது அறிக்கை (2003-2004)

48. மனுக்கள் குழுவின் முப்பத்தி மூன்றாவது அறிக்கை (2003-2004)

49. மனுக்கள் குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கை (2003-2004)

50. மனுக்கள் குழுவின் முப்பத்தி ஐந்தாவது அறிக்கை (2003-2004)

51. மனுக்கள் குழுவின் முப்பத்தி ஆறாவது அறிக்கை (2003-200

52. மனுக்கள் குழுவின் முப்பத்தி ஏழாவது அறிக்கை (200

53. மனுக்கள் குழுவின் முப்பத்தி எட்டாவது அறி

54. மனுக்கள் குழுவின் முப்பத்தி ஒன்பதாவ

55. மனுக்கள் குழுவின் நாற்பதாவது

56. மனுக்கள் குழுவின் நாற்பத்

57. மனுக்கள் குழுவின் நா

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.